

# குர்ஆனின் குரல்

شَوّال - ١٤٤٥

ஏப்ரல் - 2024

₹25/-

ஈத் பெருநாள் சிறப்பிதழ்

இறைவனை தொழுவோம் !
ஈகையினை வழங்குவோம் !!

999
PRAYER KIT




999
PRAYER KIT

அனைத்தும் ஒரே பேக்கில்.
ஒரே விலையில்

தொழுகைக்கும் உடுத்தலாம் ...
தோழருக்கும் கொடுக்கலாம் ...

நோன்பு பெருநாளின் உன்னதத்தை
உலகுக்கு உணர்த்தலாம் ...

K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# சட்டமும் சலுகையும்

شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ
الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ۗ وَمَنْ كَانَ
مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ۗ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ
وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۖ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى
مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝١٨٥

"ரமளான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், இன்னும் நேர் வழியிலிருந்தும், (சத்தியத்தையும் – அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கக் கூடியதிலிருந்தும் தெளிவான விளக்கமாகவும் உள்ள குர்ஆன் இறக்கியருளப்பட்டது; எனவே உங்களிலிருந்து எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அதில் நோன்பு நோற்கவும்; (ஆனால்) எவரேனும், நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ (நோன்பு நோற்காமல் விட்டு) இருந்தால் (அவற்றைப்) பின்வரும் நாட்களில் கணக்கிட்டு (நோன்பு நோற்று)க் கொள்ள வேண்டும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே நாடுகிறான்; உங்களுக்குச் சிரமமானதை அவன் நாடவில்லை; (விடுபட்ட நோன்பை நோற்று) எண்ணிக்கையை நீங்கள் நிரப்பமாக்குவதற்காகவும் அல்லாஹ்வை – உங்களுக்கு அவன் நேர்வழிகாட்டியதற்காக நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும், இன்னும் (அதன் மூலம்) நீங்கள் நன்றி செலுத்துவோராக ஆவதற்கும் (அல்லாஹ் இதைக் கொண்டு நாடுகிறான்)" – அல்குர்ஆன் (2 : 185)

---

புனித ரமளான் குர்ஆன் இறங்கிய மாதம். குர்ஆன் மட்டுமல்ல. வான வேதங்களும், ஏடுகள் எனும் ஸுஹுஃபுகளும் கூட ரமளானில் தான் இறங்கின. ஹள்ரத் நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு ரமளான் பிறை ஒன்றில் தான் ஏடுகள் இறங்கின. தவ்ராத் ரமளான் பிறை ஆறிலும், இன்ஜீல் வேதம் ரமளான் பிறை பதிமூன்றிலும் இறங்கின. குர்ஆன் லைலத்துல் கத்ர் இரவில் ஒட்டு மொத்தமாக முதல்வானில் இறங்கியது. பின்பு சூழ்நிலைக்கு தக்கவாறு இருபத்தி மூன்று ஆண்டுகளில் சிறிது சிறிதாக இறங்கியது. ஜபூர் வேதம் ரமளான் பிறை பனிரெண்டில் இறங்கியது. ஆக வான வேதங்கள் அனைத்துமே ரமளானில் இறங்கியுள்ளன.

இப்புனித மிக்க மாதத்தை பெற்றுக் கொண்டவர்களின் மீது ரமளானின் ஒரு மாத நோன்பு, அது இருபத்தி ஒன்பதாக கிடைத்தாலும், முப்பதாக கிடைத்தாலும், நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும். நோன்பு கடமையாவதை

நிறைவேற்றுவதற்கு அவன் முஸ்லிமாக, அறிவுள்ளவனாக, வயதிற்கு வந்தவனாக, ஊரில் தங்கியிருப்பவனாகவும், மாதாந்திர ருது மற்றும் பிள்ளைப் பேறுகால தீட்டிலிருந்து சுத்தமாகவும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

நோயின் மூலமோ, பிரயாணத்தின் காரணமாகவோ அல்லது மாதாந்திர ருதுவின் காரணமாகவோ நோன்பு விடுபட்டால் விடுபட்டதை கணக்கில் வைத்து பிறகு களாவாக நிறைவேற்ற வேண்டும்.

உரிய காரணத்துடன் நோன்பு விடப்பட்டு பின்பு களா செய்யும்போது அன்றைய தினத்தை அல்லாஹ் அவருக்கு ரமளானின் அந்தஸ்துள்ள தினமாக ஆக்கி விடுகிறான்.

நோன்பை களா செய்யும்போது விடுபட்ட நோன்பின் தேதியை நாளை குறிப்பாக்க வேண்டும். இரண்டு வருட ரமளானின் களாவாக இருப்பின் எந்த வருடத்தின் களா எனக் குறிப்பாக்க வேண்டும்.

களா நோன்பை விட்டுவிட்டும் வைக்கலாம். ஆனால் இரவிலேயே நிய்யத் வைக்க வேண்டும். வேண்டுமென்றே எவ்வித தங்கடமுமின்றி நோற்ற நோன்பை விட்டாலோ அல்லது முறித்தாலோ அந்த நோன்பை களாவும் செய்ய வேண்டும். குற்றப் பரிகாரமாக இரண்டு மாதம் தொடர் நோன்பு அல்லது அறுபது மிஸ்கீன்களுக்கு இரு வேளை உணவு தர வேண்டும். அல்லது அறுபது நாள் ஒரே மிஸ்கீனுக்கு இரு வேளை உணவு தரலாம். நோன்பு வைக்க முடியாமல் போனவர்கள் ஒரு நோன்பிற்கு பகரமாக ஒரு ஃபித்ராவின் அளவிற்கு பணமாக அல்லது தானியமாக கொடுக்கலாம்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி**

# பொன்னான பொன் மொழிகள்

- பாம்பின் விஷத்தையும் மிஞ்சும் நாக்கின் விஷம்.
- வறுமையோடு பிறப்பது நம் கையில் இல்லை. ஆனால், வறுமையோடு இறப்பதற்கு நாம்தான் காரணம்.
- முடியும் என்று முயற்சி செய்தால் வெற்றி நம்மைத் தேடி வரும்.
- வெற்றி தள்ளிப் போகலாம். ஆனால் முயற்சி வீண் போகாது.
- ஒரு தாய் தன் பிள்ளையைப் பெறுவதற்காக அழலாம். ஆனால், பெற்றதற்காக அழக்கூடாது.

தருபவர் : **தென்காசி மஸ்ஊது.**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 67 எதிரொலி – 4
ஷவ்வால் 1445 ஏப்ரல் – 2024

## வந்திருச்சு.... வந்திருச்சு.... தேர்தல் வந்திருச்சு!

இந்தியாவின் 18வது மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வரும் ஏப்ரல் 19ஆம் தேதி தொடங்கி ஜூன் 1ஆம் தேதி வரை 7 கட்டங்களாக பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழகம், புதுச்சேரியில் ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

இன்றைய மோடி ஆட்சியில் இந்திய மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு அளவேயில்லை. இத்தேர்தல் மூலம் மோடி ஆட்சியை தூக்கியெறிய அனைத்து தரப்பு மக்களும் தயாராகவுள்ளனர்.

இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு அவர்களது வாழ்வாதாரத்தை சீரழித்து, சிதைத்த இந்த சங்பரிவார் கூட்டம் மீண்டும் ஆட்சிக்கு வந்து நம் நாட்டை நாசமாக்க துடியாய் துடிக்கிறது.

மதச்சார்பற்ற மாபெரும் ஜனநாயக நாட்டில் பாபரி மஸ்ஜிதை இடித்துத் தள்ளிவிட்டு தொடர்ந்து பல இறையில்லங்களை குறிவைத்து, பயங்கரவாதச் செயல்களை பகிரங்கமாக அரங்கேற்றி வருகின்றனர்.

முஸ்லிம்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி என்ற எல்லா அம்சங்களையும் கபளீகரம் செய்வதற்கு களம் அமைத்து காய்களை நகர்த்தி வருகின்றனர்.

முஸ்லிம்களை வேரோடும், வேரடி மண்ணோடும் அழித்துவிட வேண்டும் என்பதுதான் இவர்களது குறிக்கோள். இந்திய முஸ்லிம்களின் குடியுரிமையை ரத்துச் செய்துவிட்டு, அவர்களை அகதிகளாக நடத்தி, காலப்போக்கில் இந்தியாவை விட்டு விரட்டிவிட வேண்டும் என்பதே இவர்களது திட்டம்.

ஏற்கனவே இப்போதுள்ள மத்திய மந்திரி சபையில் ஒரு முஸ்லிம் கூட கிடையாது. பாராளுமன்றத்திலும் பாரதீய ஜனதா சார்பில் ஒரு முஸ்லிம் எம்.பி. கூட கிடையாது. வரப்போகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் இல்லை! மத்திய அரசு, சிவில் சர்வீஸ் தேர்வுகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கையை குறைத்து வருகிறது. அரசாங்க பதவிகளில் முஸ்லிம்கள் வந்துவிடக்கூடாது என்பதில் முனைப்புடன் செயல்படுகிறார்கள்.

சோற்றுக்கு வழியில்லாமல் துடித்துக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு ராமரைப் பார்த்துக் கொண்டே இருங்கள் என்று படம் காட்டி அவர்களது பசியைப் போக்கிட முடியாமல், கட்டுக்கதைகளுக்கு களம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க வேலை எதையும் பார்க்காமல் இந்தியா முழுவதும் சுற்றித் திரிந்து ஒவ்வொரு கோவிலாக சென்று தரையில் படுத்தும், புரண்டும் ஒரு பிரதமர் என்பதையே மறந்து, பூசாரியைப் போல் நடந்து கொள்ளும் பிரதமர் மோடிக்கு பாடம் புகட்ட வேண்டிய நல்ல வாய்ப்பு நமக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தல் போலன்றி இந்த தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து "இந்தியா" அணியை உருவாக்கியிருப்பதால் மூன்றாவது முறையாக ஆட்சிக் கனவு நிறைவேறாது என்ற எண்ணத்தில் தங்களது மதப் பிளவுவாத நடைமுறையை துவக்கியிருக்கிறது பாரதீய ஜனதா. குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டு அதுவும் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட சூழலில், முஸ்லிம்களின் புனித ரமளான் நோன்பு துவங்கிய நாளில் ஒன்றிய பாரதீய ஜனதா அரசு அறிவிப்பை வெளியிட்டதே அதன் மதத்துவேஷத்தை வெளிப்படுத்துகிறது.

நான்காண்டுகளாக காத்திருந்தவர்கள் அரசியல் இலாபம் கருதியும், மதரீதியிலான ஆதாயம் அடையவுமே குடியுரிமை திருத்தச் சட்டத்தை தற்போது அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. மேற்கு வங்காள, கேரள, தமிழக, கர்நாடக மாநில அரசுகள் இந்தச் சட்டத்தை தங்கள் மாநிலங்களில் அமல்படுத்த மாட்டோம் என்று அறிவித்து தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே, இந்த சட்டம் கொண்டு வரப்பட்ட போதே நாடு முழுவதும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் வெடித்தன. சம உரிமை வழங்கும் அரசியல் சட்டப் பிரிவு 14-ஐ மீறும் செயல் என்றும், முஸ்லிம்களை நாடற்றவர்களாக்கும் நடவடிக்கை என்றும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இப்போது தேர்தல் பத்திர ஊழல் விவகாரத்தில் இருந்து தப்பிப்பதற்கும், திசைத் திருப்பு வதற்கும் மோடி அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இப்படி பல... பல...

இந்த நாட்டை நாசமாக்கி விட்ட மதவெறிக் கும்பலான பாரதீய ஜனதாவிற்கும், அதன் கூட்டணிக்கும் எதிராகத்தான் நீங்கள் வாக்களிக்கவுள்ளீர்கள் என்பது தெரிந்த விஷயம் தான்! இருப்பினும் மதவெறி கொண்ட இந்தக் காவி கும்பலுக்கு எதிராக நீங்கள் மட்டுமல்ல; உங்கள் குடும்பத்தார், உறவினர்கள் மட்டுமல்ல; நம் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் வாக்களிக்கச் செய்வது உங்களின் கடமை என்பதை மறந்து விட வேண்டாம்.

பகுத்தறிவுக் கதிரவன் பெரியார், பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் பிறந்த இந்த மண்ணில், மதவெறியைத் தூண்டிவிட்டு இரத்தம் குடிக்கத் துடிக்கும் இந்து மதவெறியர்கள் இந்த மண்ணிலிருந்து துரத்தப்பட வேண்டும்.

எனவே இந்த நாட்டின் மீது உண்மையான நேசம் கொண்ட நாம், நம்முடைய ஒரு வாக்கைக்கூட வீணாக்கிவிடக் கூடாது. நம்முடைய ஒவ்வொரு வாக்கும் மதவெறிக்கும், மதவெறிக்குத் துணை போகும் கயவர்களுக்கும் மரணஅடி கொடுப்பதாக இருக்க வேண்டும்.

அலட்சியம் முஸ்லிம்களின் கூடப் பிறந்த குணமாகி விட்டது. வாக்காளராக தன்னை இணைத்துக் கொள்வதிலாகட்டும், தவறாமல் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பதிலாகட்டும் அலட்சியம்! அலட்சியம்!

சமுதாயம் விழித்தெழ வேண்டிய நேரமிது. எனவே, அலட்சியம் வேண்டாம். நாம் அலட்சியமாக இருந்து நாம் விரும்பும் வேட்பாள ருக்கு வாக்களிக்கவில்லையென்றால் நாம் விரும்பாத வேட்பாள ருக்கு - நம்முடைய எதிரிக்கு - நம்முடைய வாக்கு ஒன்றைச் செலுத்துகிறோம் என்பதை உணர்ந்து, முஸ்லிம்கள் அனைவரும் தவறாமல் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்து தம் கடமையை யும், தம் உரிமையையும் நிலைநாட்ட வேண்டுகிறோம்.

இன்ஷா அல்லாஹ் வெற்றியும் நமதே! நாளையும் நமதே!!

இந்நேரத்தில்,

எப்போதோ படித்த ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது : -

முன்னொரு காலத்தில், ஒரு பசியெடுத்த சிங்கம், நரியிடம் சொன்னது :

"எனக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வா; இல்லையெனில் உன்னை சாப்பிட்டு விடுவேன்."

நரி ஒரு கழுதையிடம் சென்று சொன்னது :

"சிங்கம், உன்னை காட்டுக்கு ராஜாவாக முடிசூட்ட அழைத்து வரச்சொன்னது. நல்ல நாட்கள் வரப்போகின்றன."

கழுதையும் சென்றது.

கழுதையைக் கண்டதும் சிங்கம் அதனைத் தாக்கியது. அதனால் கழுதையின் காதுகள் அறுபட்டாலும், கழுதை தப்பித்து விட்டது.

கழுதை நரியிடம் சொன்னது :

"நீ என்னை ஏமாற்றிவிட்டாய். சிங்கம் என்னை கொல்லப் பார்த்தது."

அதற்கு நரி சொன்னது :

"சேச்சே, உன் தலையில் கிரீடம் சூட்டவே, சிங்கம் உன் காதுகளை அகற்றியது. வா மீண்டும் செல்வோம். வேண்டும் கிரீடம்"

கழுதைக்கு அது சரி எனப்பட்டது; அதனால் திரும்பிச் சென்றது.

மீண்டும் கழுதையைத் தாக்கிய சிங்கம், இம்முறை அதன் வாலை அறுத்தது!

கழுதை மீண்டும் தப்பித்து வந்து நரியிடம் சொன்னது :

"நீ பொய் சொல்கிறாய்; இதோ பார், சிங்கம் என் வாலை அறுத்து விட்டது."

நரி சொன்னது :

"நீ அரியாசனத்தில் வசதியாக அமரவேண்டும் என்பதற்காகவே சிங்கம் உன் வாலை அகற்றியது. மீண்டும் செல்வோம். வேண்டும் அரியாசனம்."

நரி கழுதையை மீண்டும் அழைத்து சென்றது.

இந்த முறை, சிங்கம் கழுதையைப் பிடித்து கொன்றது.

சிங்கம் நரியிடம் சொன்னது:

“பலே! பலே! எப்படி சிக்கி சீரழிந்தாலும், திரும்ப கழுதையை அழைத்து வந்துவிட்டாயே. போய் கழுதையின் தோலை உரித்து, அதன் மூளை, நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தைக் கொண்டு வா.”

நரி கழுதையின் தோலை உரித்து, அதன் மூளையை சாப்பிட்டது; கழுதையின் நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தை சிங்கத்திற்கு கொண்டு வந்தது.

சிங்கம் கோபமடைந்து கேட்டது : “மூளை எங்கே?”

நரி பதிலளித்தது :

“அந்த கழுதைக்கு மூளை இல்லை அரசே! மூளை இருந்திருந்தால், காதையும், வாலையும் இழந்த பின்னர் உங்களை நம்பி மூன்றாம் முறை வந்திருக்குமா?”

இந்தக் கதை எதையோ ஞாபகப்படுத்தினால் அதற்கு நாம் பொறுப்பல்ல!

## நாட்டில் சிறந்த ஆட்சி அமைய ஓதும் துஆ

இன்று முதல் புதிய நல்லாட்சி அமையும் வரை கீழ்காணும் துஆவை தொடர்ந்து ஓதி வரவும்.

اَللّٰهُمَّ لَا تُسَلِّطْ عَلَيْنَا مَنْ
لَا يَرْحَمُنَا وَلَا يَخَافُكَ فِيْنَا

**“அல்லாஹும்ம லா துஸல்லித் அலைனா மன் லா யர்ஹம்னா வலா யகாஃபுக்க ஃபீனா”**

**“யா அல்லாஹ்! எங்கள் மீது இரக்கப்படாத, எங்கள் விஷயத்தில் உன்னை அஞ்சாத ஆட்சியாளர்களை எங்கள் மீது சாட்டி விடாதே”** (நூல் : திர்மிதீ - 3502)

இந்த துஆவை நீங்களும் ஓதி, நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிமான ஆண் - பெண், பெரியவர் - சிறியவர் என எல்லோரையும் ஓதச் சொல்லவும்.

வல்ல அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

# மனித உள்ளத்தை அலங்கரிக்கும் அல்குர்ஆன்!

عَنِ ابْنِ عَبَّاس قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ : إِنَّ الَّذِي لَيْسَ فِي جَوْفِهِ شَيْءٌ مِنَ الْقُرْآنِ كَالْبَيْتِ الْخَرِبِ.رواه الترمذي

"எவரது உள்ளத்தில் புனிதக் குர்ஆனின் எந்தப் பகுதியும் மனனமாக இல்லையோ, அந்த உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றதாகும் (குடியிருக்கும் மனிதர்களைக் கொண்டு வீடு அழகும் செழிப்பும் பெறுவது போல புனிதக் குர்ஆனை மனனம் செய்வதில் மனித உள்ளத்தின் அழகும் செழிப்பும் உள்ளது) என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்.

(நூல் : திர்மிதி)


மனித குலத்திற்கு அல்குர்ஆனின் கருத்துக்களைக் கொண்டு ஒளிவீசிக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரலின் பெருநாள் சிறப்பிதழ் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்.

ஈத் முபாரக்!

செய்யது சகோதரர்கள்

நாகூர்.

☛ மண முடிக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வயது வரம்பு உள்ளதா?

**மேட்டுப்பாளையத்திலிருந்து**
**கே.சௌக்கத் அலீ**

✍ ஷரீஅத் ரீதியாக வயது வரம்பு கிடையாது.

☛ தவக்கல்து என்பதன் முழுமையான விளக்கம் என்ன?

**பனைக்குளத்திலிருந்து**
**ஃபாத்திமா ஜஹ்றான்**

✍ “அல்லாஹ்வை மட்டுமே முழுமையாக மனதால் நம்பி, இன்ன காரியத்தில் இறங்கியுள்ளேன். நிச்சயம் அவன் எனக்கு இதை நிறைவுபடுத்தி கொடுப்பான்” என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தும் வார்த்தைதான் மேற்கண்ட வார்த்தையாகும்.

☛ பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள், சாதாரணமாக இரண்டரை வயது வந்தவுடனேயே பால்வாடி, பிரிகே.ஜி., எல்.கே.ஜி., போன்ற தரங்களில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். ஆனால், மார்க்க வேதமாகிய குர்ஆனை படித்துக் கொள்வதற்காக ஐந்து வயதுக்கு கீழுள்ள குழந்தைகளை நான் கண்டவரை மத்ரஸாவில் சேர்த்துக் கொள்வதில்லை. காரணம் என்ன?

**சிவகங்கையிலிருந்து**
**முஹம்மது நாசர்**

✍ மிகவும் வயது குறைந்த அந்த குழந்தைகளை சமாளிக்க முடியாது என்ற காரணத்தினாலோ அல்லது அவர்களுக்கு வார்த்தைகளை நாவிலும், மனதிலும் பதிய வைப்பது சிரமம் என்ற காரணத்தினாலோ யாராவது ஓரிருவர் அப்படி தடுத்திருக்கலாம். அல்லது பெற்றோர்கள் அந்த சிறு வயதுடைய குழந்தைகளை வயது குறைவு காரணமாக அனுப்பாமல் இருந்திருக்கலாம். ஆனால், அந்த சிறு வயதுடைய பிஞ்சுகளில்தான் மார்க்கம் அன்றும் விதைக்கப்பட்டது. இன்றும் விதைக்கப்படுகிறது. அந்த குழந்தைகளினால்தான் மார்க்கத்தினுடைய அமல்கள் நிலைநிறுத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியினால்தான் பெற்றோர்களும், குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களும் சீர்திருத்தப்படுகிறார்கள். எனவே, ஐந்து

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

வயதுக்கு குறைவான குழந்தைகள் மத்ரஸாவிற்கு அனுப்பப்படாவிட்டாலும் "தாய் மடிதான் அந்த குழந்தைகளின் முதல் மத்ரஸா" எனக்கருதி, அவர்களின் நாவுகளிலும், உள்ளங்களிலும் அல்லாஹ், ரசூலுடைய வார்த்தைகளை குர்ஆனுடைய வசனங்களை பதிய வைக்க முயற்சி செய்வது பெற்றோர்களின் கட்டாயக்கடமையாகும்.

தருமம் செய்வது, துஆ கேட்பது இந்த இரண்டு அமல்களில் எது அதிக நன்மை தரக்கூடியது?

**அழகன்குளத்திலிருந்து**
**அப்துல்லாஹ்**

தருமம் செய்வது மிகச் சிறந்த அமலாகும். ஏனெனில், துஆ என்பது பெரும்பாலும் நம் சுய இலாபம் சம்பந்தப்பட்ட தாகும். தருமம் என்பது பெரும்பாலும் மற்றவர்களின் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சோலார் ஹீட்டர் மூலம் சூடாகும் தண்ணீரில் குளிக்கலாமா?

**ஈரோட்டிலிருந்து**
**முஹம்மது சுஹைல்**

குளிக்கலாம்.

எங்கள் வீட்டின் பக்கத்திலேயே பள்ளிவாசல் இருக்கிறது. நாங்கள் பாத்ரூமில் இருக்கும்போது பாங்கின் சப்தம் மிகத் துல்லியமாக கேட்கிறது. அப்போது என்ன செய்ய வேண்டும்? பாங்கிற்கு பதில் சொல்ல வேண்டுமா? அல்லது அமைதியாக இருந்து விட வேண்டுமா?

**கோவையிலிருந்து**
**ரஹ்மத் நிஸா**

அமைதியாக இருந்து விட வேண்டும். மனதாலும், நாவாலும் எதையும் கூறக் கூடாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் இரவின்போது இறைவனை சந்தித்தார்கள். அந்த சந்திப்பின்போது அல்லாஹ்வை நேரடியாக தங்களின் கண்களால் தரிசனம் செய்தார்களா? அல்லது உரையாடி விட்டு மட்டும் வந்து விட்டார்களா? ஏனெனில், அல்லாஹ்வை நேரில் காணும் பாக்கியம் மறுமை நாளில்தான் கிடைக்கும் என்று கூற கேட்டுள்ளேன்.

**தர்மபுரியிலிருந்து**
**ஸலாஹுதீன்**

அல்லாஹ்வை நேரடியாக காணும் பாக்கியமும், கண்களுக்கு அதற்கான சக்தியும் இந்த உலகமல்லாத மறுவுலகத்தில்தான் கிடைக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்த உலகத்தின் கண்களைக் கொண்டு, உலகத்தினுடைய வெளிச்சத்தைக் கொண்டு, உலகத்தினுடைய சூழ்நிலைகளுக்கு இடையில்

ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

Since 1977-2023

46 Years

Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

# மஹாராஜா

## சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

## தஞ்சாவூர்

அல்லாஹ்வை தரிசிப்பது முடியாத காரியமாகும். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை தரிசித்ததோ இந்த உலகத்திற்கு அப்பாற் பட்ட ஏழு வானங்களையும் கடந்து, "ஸித்ரத்துல் முன்தஹா" என்று சொல்லப்படக்கூடிய இடத்தையும்கடந்து, அல்லாஹ் வின் அர்ஷ் நிலைப்பெற்றி ருக்கக்கூடிய, நாம் சிந்தித்துப் பார்க்க முடியாத இடத்தில் கிடைத்த அற்புதமான தரிசனமாகும். ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) போன்ற உயர்ந்த மலக்குமார்கள் கூட செல்ல தடைசெய்யப்பட்டுள்ள ஓரிடத்திற்கு அல்லாஹ் தன் நேசரை அழைத்து அவர் களோடு உரையாடினான். அல்லாஹ் நபியை பார்த்ததைப் போல நபியும் அங்கு தன் னுடைய ரப்பை நேரடியாக கண்குளிர கண்டார்கள்.

☛ உம்ராவிற்கு அழைத்துச் செல்லும் சிலர், மஹ்ரமான ஆண் துணையின்றி வரக் கூடிய பெண்களுக்கு சம்பந்த மில்லாத அந்நிய ஆண்களை மஹ்ரம் என்று சொல்லி இல்லாத ஒன்றை இருப்பதாக ஏற்படுத்துகிறார்கள். அத்துடன் இந்த பெண் எனது சகோதரி, குப்பி, பெரியம்மா என்பது போன்று சொல்லும் படி ஹாஜிகளை வற்புறுத்து கிறார்கள். இது கூடுமா?

**ஏர்வாடியிலிருந்து**
**அப்துர் ரஹ்மான்**

✍ நிச்சயம் அப்படி பொய் சொல்வதும், இல்லாத உறவு களை ஏற்படுத்துவதும், நல்ல காரியங்களை செய்ய வந்தி ருக்கும் ஹாஜிகளை பொய் சொல்லத் தூண்டுவதும் மிகப் பெருங்குற்றமாகும்.

☛ எவரும் மற்றவரை சாதாரண மாக எண்ணக்கூடாது என்கிறார் களே! உண்மைதானா?

**பூணாவிலிருந்து**
**மஜீத்பாய்**

✍ உண்மைதான். மார்க்கம் நம்மை அப்படித்தான் நடக்க சொல்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் தோழர்களில் யாரையும் சாதாரணமாக கருதியதில்லை. இதையும் தாண்டி மாற்று மதத்தவர்களின் இறந்த உடலுக்குக்கூட நபி (ஸல்) அவர்கள் மரியாதை செய்த நிகழ்வு வரலாற்றில் பதியப்பட் டுள்ளது. எனவே, நாமும் அதையே செய்ய வேண்டும்.

☛ நம் மார்க்கத்தில் முந்திய காலங்களில் கத்னா செய்வதற் காக மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. ஆனால், இன்றைய காலத்தில் டாக்டரிடம் அழைத்துச் சென்று எந்த தீன்

ஓசையும் இல்லாமல், தீனுடைய எழுச்சியும் தெரியாமல் கத்னா செய்யப்படுவது முறைதானா?

**செங்கல்பட்டிலிருந்து**
**முஹம்மது சலீம்**

✍ தவறல்ல.

☛ குழந்தை பிறந்தவுடன் பாங்கு, இகாமத் போன்ற காரியங்களை முறையாக எப்படி செய்வது? சில இடங்களில் மருத்துவமனைகள் பள்ளி வாசல்களை விட்டு தூரமானதாகவும், சில சமயங்களில் மொழி தெரியாத ஊர்களில் மாட்டிக் கொள்வதாலும் குழந்தை பிறந்தவுடன் என்ன செய்வது?

**இராமநாதபுரத்திலிருந்து**
**உமர் முக்தார்**

✍ குழந்தை பிறந்தவுடன் அந்த இடத்தில் அல்லாஹ்வின் நல்லடியார்கள் யாராவது இருந்தால் பரக்கத்திற்காக அவர்களை அழைத்து பாங்கு, இகாமத் சொல்ல செய்வது நல்ல விஷயமாகும். அப்படியில்லையென்றால் அங்கு இருக்கின்ற ஆண்களில் யாராவது ஒருவர் குழந்தையின் வலது காதில் பாங்கையும், இடது காதில் இகாமத்தையும் சொல்லிவிட வேண்டியது அவசியமாகும். பிறகு, உடனடியாக பெயர் வைத்துக்கொள்வது தவறல்ல. ஆயினும், 7 ஆவது நாளன்று அந்த குழந்தைக்கு மொட்டையடித்து, அழகான பெயரை சூட்டுவது, பிறகு அந்த குழந்தைக்காக அகீகா கொடுப்பது, பிறகு கத்னா செய்வது ஆகியவை சுன்னத் மற்றும் முஸ்தஹப்பான செயல்களில் உள்ளதாகும். இவற்றை உடனடியாக செய்யவில்லையென்றாலும் ரொம்பவும் தாமதப்படுத்தாமல் முடிந்த வரை விரைவாக செய்து கொள் வது நல்ல செயல்களில்கட்டுப்பட்டதாகும். இந்த காரியங்களுக்காக ஒவ்வொரு வரையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து அந்த குழந்தைகளுக்கு சிரமம் கொடுப்பதும் நல்ல செயல்களாக ஆகாது.

☛ எங்களிடம் ஜகாத் வாங்கும் சிலர், தற்போது வசதியாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனாலும், மீண்டும் மீண்டும் வந்து ஜகாத் கேட்கிறார்கள். அவர்களுக்கு கொடுத்தால் ஜகாத் நிறைவேறுமா? கேட்கும் போது மறுக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

**விழுப்புரத்திலிருந்து**
**காதர் ஹுசைன்**

✍ அவர்கள் ஜகாத் கொடுக்குமளவு தகுதியுள்ளவர்களாக ஆகிவிட்டால் அப்போது அவர்களுக்கு ஜகாத் கொடுப்பதும், அவர்கள் அதை வாங்குவதும் ஹராமாகும். அப்போது நமது ஜகாத்தும் செல்லுபடியாகாது. சாதாரணமாக வசதிகள் வந்துவிடுவதால் அவர்களுக்கு ஜகாத் கொடுப்பது செல்லாது என்று சொல்ல முடியாது. மாறாக,

ஜகாத் கொடுக்குமளவு அவர்கள் தகுதி பெற வேண்டும். அப்படியும் அவர்கள் வந்து கேட்டால் ஜகாத் அல்லாத மற்ற தருமங்களின் வகையில் கொடுப்பது தவறாகாது. வாங்கியே பழகி விட்டவர்கள் திருந்துவது **மிகக் கடினம்! கவனம்!**

☛ வங்கிக் கணக்கில் வரும் வட்டிப் பணத்தை எந்த செலவில் பயன்படுத்தலாம்?

**திருமங்கலத்திலிருந்து**
**சல்மான்கான்**

✍ வட்டி ஒரு அசுத்தம் என்பதால் அந்தப் பணத்தை குப்பையில்எறிவதற்கு பதிலாகயாருக்காவது பயன்பட்டால் சரி என்ற வகையில் மறுமையின் நன்மை எதையும் எதிர்பார்க்காமல், சம்பளம் அல்லது கூலியாக இல்லாமல் இரத்த உறவு அல்லாதவர் களுக்கு தருமமாக கொடுத்து விட வேண்டும்.

☛ அல்லாஹ்வின் கட்டளையின்படியும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சுன்னத்தான வழிமுறையின்படியும் நாம் வாழ முற்படும்போது நமக்கு பகையும், விரோதமும் அதிகரிக்கின்றன. இப்படிப் பட்ட சூழ்நிலைகளிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடலாமா?

**சென்னையிலிருந்து**
**முஹம்மது இர்ஃபான்**

✍ தேடலாம்.

☛ நமது பள்ளிவாசல்களில் ஐந்து நேரத் தொழுகைகளிலும், தஃலீம் மற்றும் பயான்களிலும் வெளிமைக் உபயோகப்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்து ஓதப்படுகிறது. வெளியிலிருந்து குர்ஆன் ஆயத்துகளை கேட்கக்கூடிய சிலா கழிப்பறைகளிலும், சுத்தமில்லாத நிலைகளிலும் இருக்கலாம். சில சமயங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பெயர்கள் இடம்பெறும்போது ஸலவாத் கூற முடியாமல் போய் விடலாம். இப்படி செய்வது சரியாகுமா?

**கிருஷ்ணகிரியிலிருந்து**
**ஜைனுல் ஹக்**

✍ சரியாகாது. தொழுகைக்காக வெளி மைக் உபயோகப் படுத்துவது கண்டிப்பாக கூடாது. பெருநாள் போன்ற நிலைகளில் மக்களின் ஜனத்தொகையை கருதி, தூர தூரமான இடங்களிலிருந்தும் இமாமை பின்பற்றி ஷரீஅத் திற்கு உட்பட்டு மக்கள் தொழும் பட்சத்தில் அவர்களுக்காக வெளி மைக் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மார்க்க விஷயங்களை முஸ்லிம்களுக்கும், முஸ்லிமல்லாதவர்களுக்கும் வெளிப்படுத்துவதற்காக தொழுகை அல்லாத மற்ற காரியங்களை வெளி மைக் மூலம் பிரகடனப்படுத்துவது அவசியத்திற்கேற்ப செய்து கொள்ளலாம்.

# ஜக்காத்

## அல்-அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை - 625007.

AL-AMEEN ETHEEM KHANA
60 YEARS
DON'T REPEL ORPHANS
MADURAI, SINCE 1960

அஸ்ஸலாமு அலைக்கும்

அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால்...

**நமது மதுரை அல்-அமீன் எத்தீம்கானா**
**60 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

உலகெங்கும் பணியாற்றி கொண்டிருக்கும்
ஆயிரமாயிரம் மாணவர்களே அதற்கு மகத்தான சாட்சி.

எத்தீம் பிள்ளைகளுக்கு முழுமையான தீன்கல்வி, கல்லூரிப் படிப்பு வரை உலக கல்வி, உணவு, உடை, மருத்துவம், தங்கும் வசதி என அத்துனையும் இலவசமாக வழங்கி தாயன்புடன் பராமரித்து பாதுகாத்து வரும் நமது அல்-அமீன் எத்தீம் கானாவிற்கு

**உங்கள் ஜக்காத்தை பெருமளவில் வழங்கி**
**எத்தீம் பிள்ளைகளின் உயர்வுக்கு உதவிடுமாறு**

அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜக்காத் / சதக்கா
போன்ற உதவிகளை கீழ்க்கண்ட
வங்கி கணக்கு அல்லது QR Code
மூலமாக அனுப்பி உதவுமாறு
அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**BANK ACCOUNT DETAILS**

**A/c Name : AL-AMEEN ETHEEM KHANA**

**Current A/c No: 435401010010013**

**IFSC Code: UBIN0803499**

Union Bank of India,
South Masi Street, Madurai-625 001

இன்ஷா அல்லாஹ், வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Scan & Donate

**நமது எத்தீம் கானா சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை**

மேலும் விபரங்களுக்கு **98420 21786 | 97894 89494**

☛ ஜனாஸாவை பார்ப்பதற்காக சென்று வந்தபின்பு ஒளூ செய்வது அல்லது கை, கால், முகம் கழுவுவது கட்டாயமாகுமா?

**திருச்சியிலிருந்து**
**அப்துல் சத்தார்**

✍ கட்டாயமல்ல. ஜனாஸாவை பார்த்துவிட்டு மட்டும் வருவதால் ஒளூ செய்வது கை, முகம் கழுவுவது கட்டாயமாகாது. மார்க்கம் அப்படியொரு காரியத்தை சொல்லவுமில்லை.

☛ சமீப காலமாக கணவரை இழந்து விட்ட பல பெண்கள் பெரும்பாலும் நாற்பது நாட்களிலேயே இத்தாவை முடித்துவிடுகிறார்கள். இதற்கு மார்க்கத்தில் இடம் உண்டா?

**பெரம்பலூரிலிருந்து**
**அப்துர் ரஷீத்**

✍ நிச்சயம் இந்த செயல் ஹராமான செயலாகும். விவாகரத்து மூலம் விடுதலை பெற்ற பெண்கள், அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலம் வரையிலும், கணவர் மரணித்துவிட்ட பெண்கள் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் வரையிலும், கர்ப்பமான பெண்கள் தங்களுடைய குழந்தைகளை இறக்கி வைக்கும் வரையிலும் இத்தா இருப்பதும், அதற்குரிய சட்டத்திட்டங்களை பேணி, கோஷா முறையோடும், அலங்காரங்கள் இன்றியும், மணம் வீசக் கூடிய பூக்கள், பவுடர்கள், எண்ணெய்கள் இல்லாமலும் இருப்பது கட்டாய கடமை யாகும். இதில் யாருக்கும் எந்த விதிவிலக்கும் கிடையாது. இந்த இத்தாவுடைய காலத்தில் ஏதாவது குளறுபடிகள் ஏற்பட்டால் அது அவர்களின் ஈருலக வாழ்க்கையையும் மிகக் கடுமையாக பாதிக்கும் என்பதில் எந்தசந்தேகமுமில்லை.

இன்றைய சூழ்நிலையில் அந்தப் பெண்கள் இத்தாவுடைய விஷயத்தில் பேணுதலாக இருந்தாலும் அவளை சுற்றியிருக்கக் கூடிய உறவினர்கள் **"பரவாயில்லை!"** என்ற வார்த்தையை கூறியே அந்தப் பெண்ணின் பேணுதலையும், துக்கத்தையும் நாசமாக்கிவிடுவது மிக மிக வருந்தத்தக்க விஷயமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக.

☛ எனதுமகள் பெயர் ஷாஹிதா, மருமகன் பெயர் அப்துல்லாஹ். இவர்களின் ஆண் குழந்தைக்கு தமிழில் "ஷாஹிதுல்லாஹ்" ஆங்கிலத்தில் "SHAHIDULLAH" என்று பெயர் வைப்பது குறித்து தங்களுடைய மேலான விளக்கம் தேவை.

**திருச்செங்கோட்டிலிருந்து**
**ஜி.அப்துல் நஸீர்**

✍ மேற்படி பெயரை ஆங்கிலத்தில் "SHAAHIDHULLAH" என்று எழுதவேண்டும். "அல்லாஹ்வை பார்ப்பவர்" என்பது அதன் பொருளாகும். நல்ல பெயர்தான் வைத்துக் கொள்ளலாம்.

# இராஜகிரி
## மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்
## (பொது மற்றும் அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி)

### புனித ரமலான் நல்வாழ்த்துக்கள் !

# அன்பான வேண்டுகோள்

அல்லாஹ்வின் அருளால் கடந்த 50 ஆண்டுகளாக அரபி மற்றும் பொது கல்வியில் முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் பேணுதல் உணவு, தங்குமிட வசதியுடன் மார்க்க கல்வி, உலக கல்வி அளித்து வரும் நிறுவனம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை கொண்டு கல்வி கற்பித்து வருவதுடன் இதுவரை 1000க்கு மேற்பட்ட ஆலிமாக்களை உருவாக்கியுள்ளோம். பொது தேர்வில் 100% தேர்ச்சியினை தொடர்ந்து பெற்று வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதரஸா சிறப்பாக செயல்பட ஏற்பட்டுள்ள பொருளாதார பற்றாக் குறைகளை ஈடு செய்யவும், மதரஸா விரிவாக்க பணிகளை மேற்கொள்ளவும், உணவு கூடம், சுகாதாரவளாகம் வசதியினை விரிவுபடுத்தவும் மற்றும் கல்வி துறையின் நெறிமுறைகளின்படி உள்கட்டமைப்பினை மேம்படுத்த வசதியினை செய்யவும். சமுதாய சகோதரர்கள் ரமலான் நிதி ஜகாத் மற்றும் இதர காலங்களிலும் தங்களின் ஸதகா, ஹதியா நன்கொடையினை வழங்கி மதரஸாவின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அல்லாஹ் மார்கத்திற்காக தாங்கள் உதவும் எல்லா வகை பங்களிப்பையும் அமல்களிலும் பொருந்தி கொள்வானாக. ஈருலக வாழ்க்கையையும் மேன்மையாக்கி வைப்பானாக ! ஆமீன்.

**OUR BANK DETAILS**

| | | |
|---|---|---|
| Name | MADARSA YE HIDAYATHUN NISWAN | |
| Bank Name | Indian Overseas Bank | |
| Branch | Rajagiri - (0555) Branch | IFSC Code IOBA0000555 |
| ஜகாத் நிதி | A/c No : 05550200006666 | |
| ஸதகா, ஸதகத்துல் ஜாரியா, மாணவர்களின் பள்ளிக்கட்டணம், உணவுக் கட்டணம். | A/c No : 05550100002661 | |

## மதரஸாயே ஹிதாயத்துன் நிஸ்வான்
(பொது அரபி மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பிரைமரி பள்ளி)
ராஜகிரி P.O - 614207, தஞ்சாவூர் மாவட்டம்,
**04374-250711 / 9944886757.**

☛ நாம் ஒளுச் செய்தவுடன் யாரிடமும் பேசாமல்தான் ஒளு நஃபில் தொழ வேண்டுமா? ஃபஜ்ரு நேரத்தில் சுன்னத்திற்கு முன்பாக ஒளு நஃபிலை தொழலாமா?

**நாகப்பட்டிணத்திலிருந்து**
**சையது ஸமீர் அஹ்மத்**

✍ ஒளு செய்த பின்பு முடிந்த வரை பேசாமல் ஒளு நஃபில் தொழ வேண்டும். பேசிவிட்டு ஒளுவின் ஈரம் காய்வதற்கு முன்பு தொழுதாலும் நஃபில் கூடிவிடும். மேலும் ஃபஜ்ர் நேரம் ஆரம்பமானபின் ஃபஜ்ரின் முன் சுன்னத்தை தவிர வேறு எந்த நஃபிலையும் தொழக்கூடாது. எனவே, அந்த நேரத்தில் ஒளு செய்து விட்டு சுன்னத்தை மட்டும் தொழுதால் போதும்.

☛ ஒரு பள்ளிவாசலுக்கு சொந்தமான 25 கடைகளின் வாடகை, மாத சந்தா, ஜும்ஆ வசூல், நிக்காஹ் வசூல் என நல்ல நிலையில் பள்ளி இயங்கி வருகிறது. பல வருடங்களுக்கும் மேலாக ஒரே முத்தவல்லி, ஒரே செயலாளர் மட்டுமே உள்ளனர். இப்பெரிய பள்ளிவாசலுக்கு நிர்வாக அமைப்பு இல்லை. கலந்தாய்வு என்பதே அறவே இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக வரவு செலவு கணக்குகளை சமர்ப்பிப்பது இல்லை. ரமளான் கஞ்சி கணக்கும் அதே நிலை. சந்தா ரசீதில் முத்தவல்லி கையொப்பமிடுவார். தற்போது வேறு 2 நபர்கள் மஹல்லாவாசிகளுக்கு அறிவிப்பு எதுவுமின்றி ரசீதில் கையொப்பமிடுகின்றனர். பள்ளி வாசலுக்கு பக்கத்தில் மனை ஒன்று வாங்கப்பட்டுள்ளது. மஹல்லாவாசிகள், பிறரிடமிருந்து வசூல் செய்த தொகை போதுமானதாக இல்லை என்பதால் முத்தவல்லி தன் சொந்தப் பணத்தையும் போட்டு மனை வாங்கியுள்ளார். அந்தப் பணத்தை முத்தவல்லி திரும்ப பெற்றுக் கொண்டாரா? எவ்வளவு பாக்கி என மஹல்லாவாசிகளுக்கு தெரிவிப்பதில்லை. இது பற்றிய அறிவுரை தேவை.

**விழுப்புரத்திலிருந்து**
**உ. உசேன் கான்**

✍ பொதுவாக பள்ளிவாசல் என்று வந்துவிட்டாலே அது அல்லாஹ்வின் சொத்தில் சேர்ந்து விடும். அதன் கணக்கு விஷயத்தில் மிக மிகப் பேணுதலாக இருப்பது **ரொம்ப** அவசியமாகும்.

“வரக்கூடிய பணங்களை நாம் சரியாகத்தானே செலவு செய்து கொண்டிருக்கிறோம்” என்ற பொடுபோக்குத்தனமான எண்ணம் பல நிர்வாகிகளை சீரழித்து விடுகிறது. பொது கணக்குகள் எப்போதுமே திறந்த நிலையில் வைக்கப்பட வேண்டும். அதில் ஒளிவு மறைவுகள் இருக்குமேயானால்

ஸ்தாபிதம் : 1957 Regd. S.No. : 46 of 1976 بسم الله الرحمن الرحيم Cell : 94433 91412, 94432 01097

# MADRASA-I-MAZAHIRUL ULOOM VELLAKKALPATTI (P.o.), SALEM - 12.

# மத்ரஸ-யே-மழாஹிருல் உலூம்

## வெள்ளக்கல்பட்டி (P.o.), சேலம் - 636 012.

**இன்ஷா அல்லாஹ் நமது கல்லூரி ஷவ்வால் பிறை 13-ம் நாள் 23.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று துவங்க உள்ளது.**

## தவ்ரதுல் ஹதீஸ் பிரிவின் சிறப்பம்சங்கள்

நமது மத்ரஸயே மழாஹிருல் உலூம் அரபிக் கல்லூரியில் கடந்த 37 வருடங்களாக "தவ்ரதுல் ஹதீஸ்" பிரிவின் பாடங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் சிறப்பம்சங்கள் கீழ்வருமாறு :

★ ஸிஹாஹுஸ்ஸித்தா, முஅத்தா இமாம் மாலிக், முஅத்தா இமாம் முஹம்மத், தஹாவி ஷரீப் மற்றும் ஷமாயிலே திர்மிதீ ஆகிய கிதாபுகளின் பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

★ நமது மத்ரஸாவின் நூலகம் பழைய மற்றும் புதிய புத்தகங்களால் நிறைந்துள்ளது. குறிப்பாக மாணவர்கள் பயன்பெறக்கூடிய பல அரிய ஹதீஸ் கிதாபுகள் உள்ளன.

## முஃப்தீ பிரிவு

❖ வராஸத் (வாரிசுரிமை) பிரச்சனைகளில் முழுக்கவனம் செலுத்தப்படுகிறது. சட்ட நூல் 'ஸிராஜி' முழுமையாக பயிற்றுவிக்கப்படுகிறது.

❖ ரத்துல் முஹ்தார், பதாவா மஹ்மூதிய்யா முழுவதும் மற்றும் இதர ஃபிக்ஹ் கிதாபுகளும் 'முதாலஆ' செய்வித்து பிக்ஹ் விஷயத்தில் ஆழ்ந்த ஞானம் ஏற்படுத்தப்படுகிறது.

**தகுதி : 90க்கு மேலே மதிப்பெண் பெற்று ஆலிம் ஸனது பெற்றிருப்பதோடு நுழைவுத் தேர்விலும் முதல் தரத்தில் வெற்றி பெற வேண்டும்.**

## தக்மீலே அதப்

இந்தப் பிரிவு கடந்த 36 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் கீழ்காணும் கலைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகிறது.

1) நஹ்வு 2) ஸர்பு 3) அரபி எழுத்துப் பயிற்சி (அரபி ஹேண்ட்ரைட்டிங்)
4) அரபி குத்பாக்கள் – மனனம் செய்விப்பது.
5) மொழியாக்கம் (அரபி to தமிழ்) (தமிழ் to அரபி)
6) அரபியில் சரளமாகப் பேசுவது. 7) அரபி மொழியைப் பிழையின்றி எழுதுவது.

**அரபி, உர்தூ மொழியில் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகிறது.**

**ஹிஃப்ழு பிரிவில் சேரத் தகுதி : 11 வயது நிறைந்த, குர்ஆன் ஷரீப் பார்த்து சரளமாக ஓதக்கூடியவர்கள் இந்தப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

இப்படிக்கு மவ்லானா அல்ஹாஜ் **முஹம்மது அனீஸ்கான் சாஹிப்,**
**முதல்வர் : மத்ரஸ-யே-மழாஹிருல் உலூம் அரபிக் கல்லூரி, சேலம்-12.**

**வைத்தான் உள்ளே நுழைந்து விடுவான். கவனம்!**

தனிப்பட்ட ஒரு நபரின் சொத்திலிருந்து ஒரு பைசாவை அபகரிப்பதற்கே ஷரீஅத்தில் கடுமையான எச்சரிக்கைகள் சொல்லப்பட்டிருக்கும்போது, பல்லாயிரம் பேர்களின் பணங்களை தன்னுள் வைத்திருக்கக் கூடிய பள்ளிவாசல், மதரஸா, பைத்துல்மால் போன்றவற்றை நிர்வகிப்பதில் அளவுக்கதிகமான பேணுதல் மிக மிக அவசியமாகும். இல்லாவிட்டால் நாளை மறுமையில் அல்லாஹ்வின் வேதனை **பாம்புகளாகவும், தேள்களாகவும், நட்டுவாக்காலிகளாகவும்** வந்து அந்த மனிதனை கடுமையான நோவினைப்படுத்தும் என்பதோடு, இம்மையிலும் அவனது வாழ்வு மிகுந்த ஆபத்தில் சென்று முடியும். நஊதுபில்லாஹ்!

“பொதுச் சொத்தை சாப்பிடக் கூடிய சில பேர்கள் பார்ப்பதற்கு நன்றாகத்தானே இருக்கிறார்கள்” என்று யாரும் நினைக்க வேண்டாம். அவர்களுக்கு பின்னால் வரக்கூடிய அவர்களின் பிள்ளைகளும், பாவமே அறியாத பேரக் குழந்தைகளும் கூட இவர் செய்த தவறுக்காக தண்டனையில் ஆழ்த்தப்படுவார்கள் என்பதை வரலாறுகள் பதிவு செய்துள்ளன. எனவே, பொது சொத்துகளின் கணக்குகளை, அது கடை வாடகைகளாக இருந்தாலும் சரி, ரமளான் கஞ்சி வசூல்களாக இருந்தாலும் சரி, ஜும்ஆ மற்றும் பெருநாளுடைய வாளி வசூல்களாக இருந்தாலும் சரி. அதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதிலிருந்து கணக்கை மீறி ஒரு பைசா கூட நம் கணக்கில் வந்துவிட்டாலும், நாம் சமைத்த சோற்றில் விழுந்து விட்ட ஒரு சொட்டு விஷத்திற்கு சமமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. **உஷார்! உஷார்! உஷார்!**

☛ வங்கிகளில் நாம் சேமிக்கும் பணத்திற்கு வட்டித் தொகை போடப்படுகிறது. அந்த தொகையை மாற்று மதத்தவர்களுக்கு கொடுத்து விட வேண்டுமென்று கூறுகிறார்கள். அப்படி செய்து விடலாமா? அல்லது வங்கியில் நகை வைத்து பணம் வாங்கி அதற்கு போடக் கூடிய வட்டிக்காக கொடுத்து விடலாமா?

**ஈரோட்டிலிருந்து**
**மர்யம் ஃபாத்திமா**

✍ இரத்த பந்தமில்லாத ஏழை முஸ்லிம் சகோதரர்களுக்கு நன்மையை நாடாமல் கொடுப்பதே சிறப்பு.

வங்கியில் நகை வைத்து பணம் பெறுவது குற்றமாகும். அந்த வட்டிக்காக இந்தப் பணத்தை செலுத்துவதும் குற்றமாகும்.

# சொர்க்கமும் - நரகமும்

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"நாம் பிடரியின் நரம்பைவிட அவனுக்கு மிகச் சமீபமாக இருக்கிறோம்"

- அல்குர்ஆன் (50 : 16)

"மனிதனுக்கு வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமர்ந்து எழுதும் இரு [வான]வர் எடுத்தெழுதும்போது...."

- அல்குர்ஆன் (50 : 17)

"மரணத்தின் [வேதனை] மயக்கம் உண்மையாக வரும். அதுதான் [மரணம்]"

- அல்குர்ஆன் (50 : 19)

"[எழுதத் தயாராயிருக்கின்ற] கண்காணிப்பாளர் ஒருவர் அவனிடத்தில் இருந்தே தவிர எந்தச் சொல்லையும் அவன் மொழிவதில்லை"

- அல்குர்ஆன் (50 : 18)

நன்மை செய்தால் உடனே பத்து நன்மைகள் எழுதப்படுகின்றன. தீமை செய்தால் தவ்பாவை எதிர்பார்த்த பிறகே எழுதப்படுகிறது.

ரூஹை வலது, இடது கை, கால்கள் மூலம் நான்கு மலக்குகள் இழுப்பார்கள். நீர் துருத்தியிலிருந்து நீர் வருவது போல் நல்லோரின் ரூஹ் வெளிவரும். துணியில் சிக்கிக் கொண்ட முட்கள் எடுக்கப்படுவது போல தீயோரின் ரூஹ் வெளியே வரும். வயிறு முட்கள் நிறைந்ததுபோலவும், ரூஹ் ஊசி துவாரத்தின் வழியாக வெளியேறுவது போலவும் இருக்கும்.

வானம், பூமி உடல் மேல் விழுந்து அதற்கிடையில் சிக்கிக் கொண்டது போலிருக்கும். அடி பட்டால் அலறும் மனிதனால் இப்போது அலற முடியவில்லை. இயலாமல் ஆகி விடுகிறான்.

ஹள்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் தங்கள் இறுதிநேரத்தில் தங்கள் முகத்தை பூமி மேல் வைத்து இதுதான் அந்த உண்மை, இந்த விஷயத்தில் நாம் திரையிடப்பட்டிருந்தோம் என்றார்கள்.

ஹள்ரத் ஹமீதுத்தீன் (ரஹ்) அவர்கள் மாலை நேரத்தில் நடுக்கமும், திடுக்கமும் கொண்டவராக தம் கல்வி ஞானம் எங்கே போனது என தெரியவில்லையே என்றார்கள்.

"[உலகில்] இதனை விட்டுத் திட்டமாக நீ மறதியில் இருந்தாய்

(இன்று) உன்னுடைய திரையை உன்னை விட்டும் நாம் நீக்கி விட்டோம். இன்று உமது பார்வை கூர்மையாயிருக்கிறது.''

- அல்குர்ஆன் (50 : 22)

''மனமுரண்டு செய்து நிராகரித்துக் கொண்டிருந்த அனைவரையும் நரகத்தில் போடுங்கள் (என்று மலக்குகளிடம் கூறப்படும்'' - அல்குர்ஆன் (50 : 24)

''நரகத்தை நோக்கி நீ நிரம்பி விட்டாயா என்று நாம் கேட்கும் நாளில் இன்னும் அதிகம் இருக்கிறதா என்று அது கேட்கும்''

- அல்குர்ஆன் (50 : 30)

''சொர்க்கம் முத்தகீன்களுக்கு தூரமில்லாமல் மிகவும் சமீபத்திலாக்கப்படும்''

- அல்குர்ஆன் (50 : 31)

''சாந்தியுடன் நீங்கள் அதில் புகுங்கள் இது நிரந்தரமுள்ள நாளாகும் (என்று அவர்களுக்கு கூறப்படும்)''

- அல்குர்ஆன் (50 : 34)

''நிச்சயமாக முத்தகீன்கள் சொர்க்கங்களிலும், நீரூற்றுகளிலும் இருப்பார்கள்''

- அல்குர்ஆன் (15 : 45)

நபித்தோழர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே தூங்குவார்கள். அன்சாரிகள் இஷா தொழுதுவிட்டு மதீனாவிலிருந்து இரண்டு கி.மீட்டருக்கு அப்பால் இருக்கும் குபாவுக்கு சென்று வணக்கத்தில் ஈடுபடுவார்கள். மீண்டும் சுபுஹுக்கு மதீனா வந்து விடுவார்கள். ஒரு மணிநேரத்துக்கு முன்பே எழுந்து புறப்படுவார்கள். இரவில் அதிகம் தூங்கமாட்டார்கள்.

ஹள்ரத் தாவூதிப்னு ரஷீத் (ரஹ்) அவர்கள் விழித்திருந்து வணங்குவார்கள். குளிர் கடுமையாயிருக்கும். ஒரு போர்வை கூட இல்லையே என்று தனக்குள் சொல்லி கொண்டவராக தூங்க ஆரம்பிப்பார்கள். ''என்ன தாவூதே! எல்லோரும் நித்திரையிலிருக்கும் உம்மை விழிக்கச் செய்து வணங்க வழி வகுத்தோம். நீர் என்னவோ குறை கூறிவிட்டு

## முந்தைய பாவங்களை தடுக்கும் கண்ணிய ரமளான்

''யார் 'லைலத்துல் கத்ர்' எனும் மகத்துவ மிக்க இரவில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வழிபடுகிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும். யார் ரமளானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும்'' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(ஸஹீஹுல் புகாரி 1901)

## ஸதகத்துல் ஃபித்ரை மறக்கமாட்டோம்!

"ஸதகத்துல் ஃபித்ர் என்பது வீண் விளையாட்டுகளிலிருந்து நோன்பாளிகளை பரிசுத்தப்படுத்துவதாகவும், ஏழைகளுக்கு உணவாகவும் நபி (ஸல்) அவர்கள் கட்டாயமாக்கியுள்ளார்கள்." அறிவிப்பாளர் : ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் (நூல் : அபூதாவூது)


வாழ்த்துக்களுடன்....

# ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

## உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்
## ஓர் உறுதியான இணைப்பு

### 30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**

**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

உறங்குகிறீரே என ஓர் அசரீரி சப்தம் கேட்க, பிறகு இரவு முழுதும் உறங்காமலேயே இருந்தார்கள்.

பின்னிரவில் இஸ்திஃபார் செய்யக் கூடியவர்களாகவே இருப்பார்கள். “இறைவா! எங்களை மன்னிப்பாயாக! எங்களுக்கு இரக்கப்படுவாயாக! எங்கள் தவ்பாவை ஏற்பாயாக! நீ தவ்பாவை ஏற்பவனாகவும், மாபெரும்கிருபையாளனாகவும் இருக்கிறாய்” என்பதே அவர்களது நடுநிசி பிரார்த்தனை.

“இரவில் வணங்குவது என் மீது கடமை. உங்கள் மீது கடமையில்லை” என்பது நபிமணி (ஸல்) அவர்களின் அறிவிப்பு. கடமையில்லை என்று அறிந்த பிறகும் அல்லாஹ்வின் அன்புகிடைக்கவேண்டும். அவன் வழங்கும் சுவனத்தைப் பெற வேண்டும் என்ற வேட்கையால் இரவை வணக்கத்தில் கழித்து இன்பம் கண்டவர்கள் அதில் ஒரு சுகம் கண்டார்கள். இன்று நமது வாழ்க்கை உலகையே சுற்றிச் சுற்றி வருகிறது. பொருளீட்டுவது, புகழ் சேர்ப்பது, மாட மாளிகை, ஆடம்பர வாழ்வு என அனைத்தும் கடமையான ஐவேளை தொழுகையையே மறக்கடித்து விட்டதென்றால் சுவனத்துக் காற்று கூட நம் மீது படாது போலிருக்கிறது!


# வீட்டு வேலைக்கு பெண் தேவை!

திருப்பூர் மாவட்டம் மூலனூர் பகுதியில் **வீட்டு பராமரிப்பு** மற்றும் **சமையல் வேலைக்கு** மார்க்கப் பற்றுள்ள, வீட்டிலேயே தங்கி பணிபுரிய நடுத்தர வயது **பணிப்பெண் தேவை.** நல்ல ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு : **8526181786; 8508366786**

# ஆட்கள் தேவை!

திருப்பூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பிரபல ஃபேன்ஸி கடைக்கு +2 படித்த, தங்கி பணிபுரிய **இளைஞர்கள் தேவை.** நல்ல ஊதியத்தோடு, உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புக்கு : **8508366786; 8526181786**

# இறைவனுக்காக இஃதிகாஃப் மேற்கொள்வோம்!

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

وَعَهِدْنَا إِلَى إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ أَنْ طَهِّرَا بَيْتِيَ لِلطَّائِفِينَ وَالْعَاكِفِينَ وَالرُّكَّعِ السُّجُودِ

“(தவா:ப்) சுற்றுவோருக்காகவும், தங்கி வழிபாடு (இ:திகா:ப்) செய்வோருக்காகவும், குனிந்தும் சிரம் பணிந்தும் வணங்குவோருக்காகவும் என்னுடைய (இந்த) ஆலயத்தை நீங்களிருவரும் தூய்மைப்படுத்துங்கள் என்று இப்ராஹீமிடமும் இஸ்மாயீலிடமும் நாம் உறுதிமொழி வாங்கினோம்” - அல்குர்ஆன் (2 : 125)

இஃதிகாஃப் என்பதற்கு தங்குதல், சிறை வைத்தல், ஒன்றைப் பற்றிக் கொண்டு அதிலேயே மனதைக் கட்டுப் படுத்தி வைத்தல் ஆகிய சொற் பொருள்கள் உண்டு.

இஸ்லாத்தில் இஃதிகாஃப் என்பது, பள்ளிவாசலில் குறிப்பிட்ட முறையில் ஒருவர் தங்கியிருப்பதற்குப் பெயராகும். அவசிய தேவைகளுக்குத் தவிர வேறு எதற்காகவும் பள்ளி வாசலை விட்டு வெளியே போகாமலும், அவசியமான பேச்சுக்களைத் தவிர வேறு எந்தப் பேச்சுக்களையும் பேசாமலும் பள்ளிவாசலுக்குள்ளேயே தங்கியிருந்து தொழுகை, குர்ஆன் ஓதுதல், பிரார்த்தனை புரிதல் (திக்ர் எனும்) இறை தியானம் புரிதல் போன்ற வழிபாடுகளில் ஈடுபடுவதே இஃதிகாஃப் ஆகும். இஃதிகாஃப் என்பது கட்டாயக் கடமையாக இல்லாவிட்டாலும் வலியுறுத்தப் பட்ட நபிவழி (சுன்னத்) ஆகும்.

ஆண்டில் சில நாட்கள் மக்கள், குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடனான உலகத் தொடர்புகளைக் கைவிட்டு ஒதுங்கி, தனிமையில் இறையில்லத்தில் இருக்கின்ற அரியவாய்ப்பு இஃதிகாஃப் மூலம் கிடைக்கிறது. இஃதிகாஃபினால் மன அழுக்குகள் கழுவப்பட்டு, உளத் தூய்மையும் மன அமைதியும் உருவாகும்.

முன் சென்ற சமுதாயத்தினர் மீது நோன்பு கடமையாக்கப்

பட்டிருந்ததைப் போன்றே இஃதிகாஃபும் கடமையாக்கப் பட்டிருந்தது என்று தலைப்பில் காணும் திருவசனத்தின் மூலம் தெளிவாகிறது.

ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பது சுன்னத் முஅக்கதா கிஃபாயா ஆகும். ஒரு மஹல்லாவில் ஒருவராவது முழுமையாக பத்து நாட்கள் இருக்க வேண்டும். இல்லையெனில் சுன்னத் முஅக்கதாவை விட்ட குற்றம் மஹல்லாவாசிகள் அனைவரின் மீதும் ஏற்படும்.

நூல்:ரத்துல்முக்தார் 2-441

## சிறப்புகள்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இஃதிகாஃப் இருப்பவர் பற்றிக் கூறும் போது

**"அது [இஃதிகாஃப்] பாவங்களை விட்டும் தடுக்கும்; அனைத்து நற்செயல்களையும் புரிபவரைப் போன்று அவருக்கு நற்பலன்கள் வழங்கப்படும்" என்று கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள்

நூல் : இப்னுமாஜா-1771, ஷுஅபுல் ஈமான் - இமாம் பைஹகீ

**கண்மணி பெருமானார் [ஸல்] அவர்கள் கூறினார்கள் :**

**அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடியவராக ஒரு நாள் இஃதிகாஃப் மேற்கொள்வாரோ அவருக்கும் நரகத்திற்கும் இடையே அல்லாஹ் மூன்று அகழிகளை [தடுப்பாக] ஏற்படுத்துவான். அவை ஒவ்வொன்றின் தூரமும் வானம் பூமிக்கிடையே உள்ள தூரத்தை விட அதிகமாகும்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள்

நூல் : முஅஜமுல் அஸ்வத் இமாம் - தப்ரானீ, ஷுஅபுல் ஈமான் - இமாம் பைஹகீ, தாரீக் அஸ்பஹான் இமாம் அபூநயீம், தாரீக் பக்தாத் இமாம் கத்தீப் அல்பக்தாதீ, மஜ்மஉஸ் ஸவாயித், அத்தர்கீபு வத்தர்ஹீபு

**பேராசான் பெருமானார் [ஸல்] அவர்கள் கூறினார்கள் :**

**"யார் ரமளானில் இறுதிப் பத்தில் இஃதிகாஃப் இருக்கிறாரோ அவருக்கு இரண்டு ஹஜ்ஜுகள், இரண்டு உம்ராக்கள் செய்த நன்மைகள் கிடைக்கும்".**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹுஸைன் (ரளி) அவர்கள்

நூல் : பைஹகீ, முக்தஸர் அத்தர்கீபு வத்தர்ஹீபு-341, முஅஜமுல் - கபீர் இமாம் தப்ரானீ, ஷுஅபுல் ஈமான் - இமாம் பைஹகீ, தக்லீஸுல் முத்தஷாபிஹ் இமாம் கத்தீப், அத்துர்ரியத்துத் தாஹிரா

என் இரட்சகனே எனக்கு கல்வி ஞானத்தை அதிகப்படுத்துவாயாக (அல்குர்ஆன் 20 : 114)

جامعة منبع الاسرار للعلوم الشرعية الاسلامية والعلوم العصرية

# ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி

# JAMIA MANBAUL ASRAR ARABIC COLLEGE

**D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், திருவாரூர் ரோடு, மன்னார்குடி–614001. திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.**

**D.G. Town, Near Markas Pallivasal, Thiruvarur Road, MANNARGUDI - 614001. Thiruvarur Dist, Tamil Nadu.**

## இரு கல்வியும் கற்போம்! கண்ணியம் காப்போம்!!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

அன்பான பெற்றோர்களே... அல்லாஹ்வின் கிருபையால் புதியதாக துவங்கப்பட்டுள்ள எங்கள் மத்ரஸாவில் மார்க்கக் கல்வியுடன் கூடிய பள்ளி மற்றும் காலேஜ் படிப்புகளும் சேர்த்து கற்றுத்தருவதுடன், தங்களின் குழந்தைகளின் ஈருலக வாழ்வில் சிறந்த மார்க்கக்கல்வி பெற்ற மாணவர்களாக திகழ்வதற்கு எங்களின் மதரஸாவில் இனிதே பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### கல்லூரியின் சிறப்பம்சங்கள்

### மார்க்கக்கல்வி பாட திட்டம் மவ்லவீ ஆலிம் பட்டப்பிரிவு

- ★ உயர்நிலை 10, மேல் நிலை +2 பள்ளி படிப்பு
- ★ B.Com., B.B.A., போன்ற பட்ட படிப்பு (Annamalai University)
- ★ C.F.A., (Certificate in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ D.F.A., (Diplama in Functional Arabic) (Central Govt. Certificate)
- ★ B.A., Arabic படிப்பு (Chennai University)
- ★ D.F.U., (Diplama in Functional Urdu)
- ★ கிராஅத் பட்ட பயிற்சி பிரிவு
- ★ அரபி, உருது, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமை பெறச் செய்தல்
- ★ கம்யூட்டர் பயிற்சி

**குறிப்பு : மாணவர்கள் சேர்க்கைப்பதிவு நடைபெறுகிறது.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : மவ்லானா, மவ்லவீ, ஹாஃபிழ், காரீ, அஃப்ஜலுல் உலமா

**B. ஜமீலுத்தீன் தாவூதி பாஜில் காஸிமி, D.F.A.,**

**நிறுவனர் & முதல்வர் : ஜாமிஆ மன்பவுல் அஸ்ரார் அரபிக்கல்லூரி**

D.G. டவுன், மார்கஸ் பள்ளிவாசல் அருகில், ஜவர் சமாதி பஸ் ஸ்டாப், திருவாரூர் ரோடு, **மன்னார்குடி–614001.** திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.

**Cell : 97895 18284, 96593 88904.**

இமாம் மாலிக் (ரஹ்) மற்றும் சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) போன்றவர்கள் கூறுகிறார்கள். இஃதிகாஃப் மேற்கொள்ள விரும்புகின்றவர் அதற்கு முந்தைய நாள் சூரியன் மறையும் நேரத்தில், தாம் இஃதிகாஃப் மேற்கொள்ளப்போகும் இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.

நூல் : திர்மிதீ 721

இரவு பகல் என ஒரு நாள் முழுவதும் இஃதிகாஃப் மேற்கொள்ள விரும்புபவர் சூரியன் மறைவதற்கு முன்பே பள்ளி வாசல் சென்று மறுநாள் சூரியன் மறைந்த பின்னரே திரும்ப வேண்டும்.

நூல் : ஃபத்ஹுல் பாரீ

## இறுதிப் பத்து நாட்கள்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது: "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ரமளானிலும் பத்து நாட்களே இஃதிகாஃப் இருப்பார்கள். அவர்கள் இறந்த ஆண்டில் (11 முதல் 30 வரை) இருபது நாட்கள் இஃதிகாஃப் இருந்தார்கள்".

நூல்: புகாரீ 2044, அபூதாவூத் 2110, இப்னுமாஜா 1759

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : [ரமளான் மாதத்தின்] இறுதிப் பத்து நாட்கள் துவங்கி விட்டால், நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் [வணக்க வழிபாட்டின் மூலம்] இரவுகளுக்கு உயிரூட்டுவார்கள். [வழிபாட் டில் ஈடுபடுவதற்காக] தம் துணைவியரையும் விழிக்கச் செய்வார்கள். [வழக்கத்தை விட வழிபாட்டில்] அதிக கவனம் செலுத்துவார்கள். தமது கீழாடையை இறுக்கிக் கட்டிக் கொள்வார்கள்".

நூல் : புகாரீ 2024, முஸ்லிம் 2184, திர்மிதீ 725, இப்னுமாஜா 1758

நபியவர்கள் தமது கீழாடையை இறுக்கிக் கட்டிக் கொள்வார்கள் என்பதன் பொருள் தாம்பத்திய உறவை நிறுத்திக் கொள்வதை குறிக்கும் என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

நூல் : அல்மின்ஹாஜ்

## அசல் நோக்கம்

ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ [ரளி] அவர்கள் கூறியதாவது: "அருமை நாயகம் [ஸல்] அவர்கள் ரமளான் மாதத்தின் முதல் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். பின்னர் நடுப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். பிறகு நபியவர்கள் மக்களை நோக்கி! "இந்த [ரமளானில் லைலத்துல் கத்ர்] இரவைத் தேடியவாறு நான் முதல் பத்து நாட்கள் இஃதிகாஃப் இருந்தேன். பின்னர் நடுப்பத்து நாட்களிலும் இஃதிகாஃப் இருந்தேன். பிறகு அந்த இரவு இறுதி பத்து நாட்களில் உள்ளது என [வானவர் மூலம்] என்னிடம் வந்து சொல்லப்பட்டது. ஆகவே, உங்களில் இறுதிப் பத்து

நாட்களில் இஃதிகாஃப் இருக்க விரும்புகின்றவர் இஃதிகாஃப் இருக்கட்டும்'' என்றார்கள். எனவே, மக்களும் நபியவர்களுடன் இஃதிகாஃப் இருந்தனர்''.

நூல் : முஸ்லிம் 2170

ஹஸ்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பார்கள். ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் [ஒன்றில்] லைலத்துல் கத்ரை தேடிக் கொள்ளுங்கள்'' என்று கூறுவார்கள்.

நூல் : புகாரீ 2020, திர்மிதீ 722

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது: "ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு முறை (வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்கள் அதுவரை அருளப் பெற்ற) குர்ஆன் வசனங்களை கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மொத்தமாக ஓதிக் காட்டுவது வழக்கம். நபியவர்கள் இறந்துபோன ஆண்டில் இரண்டு முறை நபியவர்களுக்கு (ஜிப்ரீல்) (அலை) அவர்கள்) ஓதிக் காட்டினார்கள். நபியவர்கள் ஒவ்வொரு ஆண்டும் (ரமளான் மாதத்தின் இறுதிப்) பத்து நாட்கள் இஃதிகாஃப் மேற்கொள்வது வழக்கம். அவர்கள் இறந்த ஆண்டு (ரமளானில்) இருபது நாட்கள் இஃதிகாஃப்மேற்கொண்டார்கள்".

நூல் : புகாரீ 4998, இப்னுமாஜா 1759

இஃதிகாஃப் மேற்கொள்வதின் நோக்கம், அருள்வளம் நிறைந்த லைத்துல் கத்ரை பெற்று அதில் வழிபாடுகள் புரிய வேண்டும். மேலும் அதிகமாக குர்ஆன் ஓதவேண்டும். குறைந்தது ஒருமுறையாவது குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்க வேண்டும்.

## நேர்ச்சை

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் கூறியதாவது : (என் தந்தை) உமர் (ரளி) அவர் கள் (இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு) அறியாமைக் காலத்தில் கஅபாவில் ஒரு நாள் இஃதிகாஃப் இருப்பதாக நேர்ச்சை செய்திருந்தார்கள். நபியவர்களிடம் இது குறித்து உமர் (ரளி) அவர்கள் வினவினார்கள். நபியவர்கள் "நோன்பு நோற்று இஃதிகாஃப் இருப்பீராக!" என்று கூறினார்கள்.

நூல் : அபூதாவூத் 2116,
சுனனுல் குப்ரா 3355,
இமாம் நசாயீ

இஃதிகாஃப் என்பது மூன்று வகைப்படும்.

1) யார் இஃதிகாஃப் இருப்பதாக நேர்ச்சைசெய்துகொண்டாரோ அவர் இஃதிகாஃப் இருப்பது வாஜிப் ஆகும்.

2) ரமளானின் இறுதிப் பத்து நாட்கள் இஃதிகாஃப் இருப்பது சுன்னத் முஅக்கதா கிஃபாயா ஆகும்.

3)மேற்கூறிய இரண்டும் அல் லாத மற்ற நேரங்களில் சிறிது நேரம் பள்ளியில் இஃதிகாஃப் எண்ணத்துடன் தங்குவது முஸ்தஹப் ஆகும்.

இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "இஃதிகாஃப் எண்ணத்துடன் பள்ளிவாசலில் சற்று நேரம் தங்கி இருந்தாலும் அது கூடும்".

வாஜிபான இஃதிகாஃப் மற்றும் சுன்னத் முஅக்கதாவான இஃதிகாஃப் ஆகிய இரண்டிற் கும் நோன்பு நோற்பது அவசிய மாகும். நஃபிலான இஃதிகாஃப் மேற்கொள்ள நோன்பு நோற்பது அவசியமல்ல.

நஃபிலான இஃதிகாஃப் மேற்கொள்ள நாடியவாறு பள்ளி வாசலில் நுழைந்து உள்ளே சென்று ஓரிடத்தில் அமராமல் உலாவிக் கொண்டிருந்தாலும், இரவானாலும், பகலானாலும் முஸ்தஹப்பான இஃதிகாஃபிற் குரிய நன்மைகள் கிடைத்து விடும்.

பள்ளிவாசலில் நுழையும் போதே இஃதிகாஃப் எண்ணத்து டன் நுழைவது மிகவும் சிறந்தது. ஏனெனில், தொழுகை போன்ற வணக்கங்களில் ஈடுபட்டிருப் பதுடன் இஃதிகாஃபுடைய நன்மையும் கிடைத்து விடு கிறது. அதனால் தான் சில பள்ளி வாசல்களின் தலைவாசலில் "நான் இந்த பள்ளிவாசலில் தங்கி இருக்கும் வரை இஃதி காஃப் மேற்கொள்ள நாடு கிறேன்" என்று இஃதிகாஃபின் நிய்யத்தை பெரிய எழுத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

## மனத்தூய்மை

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: "ஒருமுறை அருமை நாயகம் (ஸல்) அவர்கள் ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதி காஃப் இருப்பதற்காக நாடி, (பள்ளிவாசலில்) தமக்கு கூடாரத்தை அமைக்குமாறு உத்தரவிட்டார்கள். அவ்வாறே கூடாரம் அமைக்கப்பட்டது. அதை நான் கண்டபோது எனக்கும் கூடாரம் அமைக்குமாறு உத்தர விட்டேன். அவ்வாறே கூடாரம் அமைக்கப்பட்டது. நபியவர் களின் மற்ற மனைவியரும் கூடாரம் அமைக்குமாறு உத்தர விட்டனர். அவர்களுக்காகவும் கூடாரம் அமைக்கப்பட்டது. நபியவர்கள் பல கூடாரங் களை கண்டார்கள். (இதன் மூலம்) நீங்கள் நன்மையை தான் நாடினீர்களா? என்று கேட்டுவிட்டு, தமதுகூடாரத்தை அகற்றுமாறு உத்தரவிட்டார் கள். அவ்வாறு அது அகற்றப் பட்டது. உடனே நபியவர்களின் மனைவியர் தங்களின் கூடாரத்தை அகற்றுமாறு உத்தரவிட்டனர். அவ்வாறே அவையும் அகற்றப்பட்டன".

நூல் : முஸ்லிம் 2183,
அபூதாவூத் 2108,
இப்னுமாஜா 1761

வாங்கி விட்டீர்களா...

# பிரார்த்தனை செய்வது எப்படி?

**ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம்!**

நம் அதிகமான நேரங்களை துஆகளிலேயே செலவு செய்வதற்கு வழிகாட்டக்கூடிய அற்புதமான நூல்தான் **"பிரார்த்தனை செய்வது எப்படி?"** எனும் நன்நூல் ஆகும்.

ஆசிரியர் : அல்லாமா **அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹள்ரத் (ரஹ்)

**நூல் விலை : ரூ.25/- மட்டுமே!** தபால் செலவு தனி!

**உடன் இந்த நூலை வாங்குங்கள்! "நமக்கு உதவும் நாற்பது துஆகள்" எனும் நூலை இலவசமாக பெறுங்கள்!!**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **குர்ஆனின் குரல்**

த. பெ. எண் : 45, 4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை** - 625 020.

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு :

**9442056547, 9486729192**



## மர்கசுல் உலூம் அல்-இஸ்லாமியா அரபு கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

அல்ஹம்துலில்லாஹ்! நமது கல்லூரி சேலத்தின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏற்காடு மலையடிவாரத்தில் அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. கல்வி கற்றுக்கொள்ள இயற்கையான இதமான சூழல் உள்ளது.

எங்கள் மதரஸாவில் மாணவர்களுக்கு ஹிஃப்ழு & கிராஅத் திறன்மிகு பேராசிரியர்களால் மிகச் சிறந்த முறையில் போதிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு தரமான உணவும், உறைவிடமும், மருத்துவ வசதியும், இன்னும் மற்ற தேவையான வசதிகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

நமது கல்லூரி இன்ஷா அல்லாஹ் வரும் ஷவ்வால் பிறை 12 (22.04.2024) திங்கட்கிழமை அன்று திறக்கப்பட உள்ளதால் மதரஸாவில் சேர விருப்பமுள்ளவர்கள் உடனடியாக தபால் மூலம் தகவல் தெரிவிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

**காரீ அப்ரார் அஹ்மத் காஸிமி**

முதல்வர் : **மர்கசுல் உலூம் அல்-இஸ்லாமியா அரபு கல்லூரி,**

**ஏற்காடு மெயின் ரோடு, K.N.பட்டி, சேலம் – 636008.**

செல் : **9362102418; 9842707866**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்த ஆண்டில் தம் மனைவியரில் சிலர் மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருக்க அனுமதியளித்திருந்தார்கள். இதையறிந்து மற்ற மனைவியரும் இஃதிகாஃப் இருக்க திரைக் கூடாரங்களை அமைத்து விட்டனர்.

மூன்று, நான்கு மனைவியர் பள்ளிவாசலில் நபியவர்களுடன் இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டதால் வீட்டில் மனைவியோடு இருப்பது போன்ற சூழல் உருவாகி விடும். இந்நிலையில் வழிபாடுகள் செய்ய வழியின்றிப் போய் நோக்கம் சிதைந்து விடும். உண்மையிலேயே இஃதிகாஃப் இருக்க வேண்டும் என்ற தூய எண்ணத்தில் அவ்வாறு செய்தார்களா? அல்லது போட்டி போட்டுக் கொண்டு நபியவர்களின் நெருக்கத்தைப் பெறுவதற்காக இவ்வாறு செய்தார்களா? என்ற கேள்வி எழ ஆரம்பித்தது. அது மட்டுமின்றி, திரைக் கூடாரங்கள் பள்ளிவாசலில் அதிகமானதால் தொழுகையாளிகளுக்கு நெருக்கடி ஏற்படும் நிலையும் உருவானது. இதனாலேயே நபியவர்கள் அந்த ஆண்டு ரமளானில் இஃதிகாஃப் இருக்கும் தமது திட்டத்தை கைவிட்டார்கள்.

நூல் : அல்மின்ஹாஜ்

மனத்தூய்மையுடன் இஃதிகாஃப் மேற்கொள்வது அனைத்து நற்காரியங்களை விடவும் சிறந்ததாகும். அதனுடைய சிறப்புகள் கணக்கில் அடங்காதவையாகும். ஏனெனில், உலகம் மற்றும் அதிலுள்ள அனைத்தையும் விட்டு மனதை ஒரு முகமாக திருப்புதல் அதில் இருக்கிறது. மேலும், மனதை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுதலும் அவனுடைய இல்லத்தில் வீழ்ந்து கிடப்பதும் அதில் அமைந்திருக்கிறது.

நூல் : மராக்கில் ஃபலாஹ்

நாம் மனத்தூய்மையுடன் இஃதிகாஃப் மேற்கொள்ளும் போது நம்முடைய உண்ணுதல், உறங்குதல், ஓய்வெடுத்தல் போன்ற அனைத்தும் இறை வழிபாடாக கருதப்படுகின்றன. சுருங்கக்கூறின், நம்முடைய இருபத்தி நான்கு மணி நேரமும் இறைவழிபாடாகவே கருதப் படுகிறது.

## அவசியத் தேவைக்காக செல்லலாம்

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: “பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருந்து கொண்டு தமது தலையை (வீட்டிலுள்ள) என்னிடம் நீட்டுவார்கள். நான் அதை வாரி விடுவேன்.

இஃதிகாஃப் இருக்கும் போது (அவசியத்) தேவைக்காகவே தவிர (வேறு காரணங்களுக்காக) வீட்டிற்கு வர மாட்டார்கள்".

நூல் : புகாரீ 2029, அபூதாவூத் 2111

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: "நான் (பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருக்கும்போது) இயற்கைத் தேவைக்காக மட்டுமே வீட்டுக்கு வருவேன். வீட்டில் யாரேனும் உடல் நல மில்லாமல் இருந்தால் போகிற போக்கில் அப்படியே (உடல் நலம்) விசாரித்துக் கொள்வேன்".

நூல் : முஸ்லிம் 498, இப்னுமாஜா 1766

அன்றைய காலத்தில் பள்ளிவாசலில் கழிப்பறை அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: "இஃதிகாஃப் இருப்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய நபிவழி (சுன்னத்து)கள்: நோயாளியை நலம் விசாரிப்பதற்காக (வெளியில்) செல்லக்கூடாது. இறந்தவரை காண (வெளியில்) செல்லக் கூடாது. மனைவியை (இச்சையோடு) தீண்டக் கூடாது. மனைவியைக் கட்டியணைக்கக் கூடாது. மிக மிக அவசியமான தமது சுயத் தேவைக்காகவே தவிர வேறெதற்கும் வெளியே செல்லக் கூடாது. நோன்பு நோற்பதுடன் தான் இஃதிகாஃப் இருக்க வேண்டும். ஜும்ஆ தொழுகை நடைபெறும் பள்ளி வாசலில் தான் இஃதிகாஃப் இருக்க வேண்டும்".

நூல் : அபூதாவூத் 2115, தாரகுத்னீ 2338

இஃதிகாஃப் இருப்பவர் இயற்கை கடன்களை நிறை வேற்ற பள்ளிவாசலில் வசதி இல்லாதபோது வெளியே செல்ல லாம். உணவுத் தேவைக்காக வெளியே செல்வதற்கும் அனுமதி உண்டு. உணவு கொண்டு வர ஆள் இருந்தால் உணவுக்காக வெளியே செல் வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் மார்க்க அறிஞர்களில் சிலர் கூறுகின்றனர்.

நூல் : ஃபத்ஹுல் பாரீ

## அவசியத்திற்காகப் பேசலாம்

அன்னை ஹள்ரத் ஸஃபிய்யா (ரளி) அவர்கள் கூறியதாவது: "(எனது கணவர்) அருமை நாயகம் (ஸல்) அவர்கள் ரமளானில் இறுதிப் பத்து நாட்களில் (பள்ளிவாசலில்) இஃதிகாஃப் இருந்தபோது அவர் களைச் சந்திக்க நான் (இரவில்) சென்றேன். சிறிது நேரம் அவர்களுடன் பேசிவிட்டு எழுந்தேன். அப்போது நபியவர் களும் என்னுடன் எழுந்து வந்தார்கள். பள்ளிவாசலின் தலைவாசலை நாங்கள்

அடைந்தபோது அன்சாரிகளில் இருவர் கடந்து சென்றனர். நபியவர்களுக்கு அவ்விரு வரும் சலாம் கூறினர். அப்போது அவ்விருவரிடமும் நபியவர்கள், சற்று நில்லுங் கள். இவர் (என் மனைவி) ஸ:பிய்யா பின்த் ஹுயை தான்'' என்று கூறினார்கள்.

அவ்விருவரும், (ஆச்சரியத் துடன்) ''சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) நாயகமே! (தங்களையா சந்தேகிப்போம்)'' என்றனர். அப்போது நபியவர் கள், ''நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்த நாளங் களில் ஊடுருவி இருக்கிறான், உங்கள் உள்ளங்களில் தவறான எண்ணத்தை அவன் விதைத்து விடுவானோ என நான் அஞ்சி னேன்'' என்று கூறினார்கள்.

நூல் : புகாரீ 2035, முஸ்லிம் 4387, அபூதாவூத் 2113, முஸ்னது அஹ்மத்

இஃதிகாஃப் இருப்பவர் தேவையின்றி உலக விஷயங் களைப் பேசக்கூடாது. ஆனால், அவசியத் தேவைக்காக பிறரிடம் பேசலாம்.

குறிப்பாக, இஃதிகாஃப் மேற்கொள்பவர் கைபேசி வைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. அப்போது தான் தேவை யற்ற பேச்சுக்களைத் தவிர்க்க முடியும். கைப்பேசியுடன் இருப் பது உலகத் தொடர்புடன் இருப்பது போலாகும். தேவை யற்ற பேச்சுக்கள் இஃதிகாஃபை வீணாக்கிவிடும் என்பதில் கவனம் தேவை.

## தவறான விளக்கம்

''நீங்கள் பள்ளிவாசலில் தங்கி (இ:திகா:ப்) இருக்கும் போது மனைவியருடன் உறவு கொள்ளாதீர்கள்''

- அல்குர்ஆன் 2:187

இன்றைய குழப்பமான காலத்தில் இந்த வசனத்தை மேற்கோள் காட்டி, இஃதிகாஃப் இருப்பவர் பள்ளிவாசலில் வைத்துத்தான் மனைவியை உறவு கொள்ளக் கூடாது. தமது வீட்டிற்குச் சென்று உறவு கொள்ளலாம் என்று தவறாக விளங்கிக் கொண்டு, அதையே பரப்புரை செய்து வருகின்றனர்.

இந்த (2:187) வசனம் குறித்து பிரபலமான திருகுர் ஆன் விரிவுரையாளர் பேரறிஞர் ளஹ்ஹாக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். (மக்களில்) ஒருவர் (பள்ளிவாச லில் தங்கி) இஃதிகாஃப் வழி பாட்டில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் போது அவர் விரும்பினால் பள்ளிவாசலில் இருந்து வெளியே சென்று (மனைவியோடு) தாம்பத்திய உறவு கொள்வார். இந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்துவந்தது. அப்போதுதான் இவ்வசனத்தை அல்லாஹ் அருளினான்.

GSTIN : 33DMUPA2892F1ZW

ஈத் முபாரக்!

8122365636
7708696860





# அன்னிஸா பேஷன்ஸ்

## மொத்த வியாபாரம்

- புர்கா
- ஹிஜாப்
- நைட்டி
- ஷால் – நைட்டி
- துப்பட்டா
- காட்டன் ஷால்
- லெகின்ஸ்
- பட்டியாலா





**மொத்த விற்பனை மட்டும்**

மங்கலம் – பல்லடம் ரோடு, சிட்டி யூனியன் பேங்க் அருகில்,
HFDC பேங்க் அருகில்,
**மங்கலம்** - 641663. திருப்பூர் மாவட்டம்.

அதாவது, பள்ளிவாசலிலோ பள்ளிவாசல் அல்லாத வேறு இடங்களிலோ இஃதிகாஃப் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் போது நீங்கள் உங்கள் மனைவியரை நெருங்காதீர்கள் என்பது இதன் கருத்தாகும்.

நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்

இஃதிகாஃப் வழிபாடு தொடர்பாக அறிஞர்களின் ஒருமித்த கருத்தாவது: இஃதிகாஃப் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பவர், பள்ளிவாசலில் இருக்கும் காலமெல்லாம் தாம்பத்திய உறவில் ஈடுபடுவது அவருக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

ஏதேனும் அவசியத் தேவையை முன்னிட்டு அவர் தமது இல்லத்திற்குச் செல்ல நேர்ந்தால், இயற்கை கடனை நிறைவேற்றல், உணவு உட்கொள்ளல் போன்ற தேவைகளை முடித்துக் கொள்கிற அளவுக்கும் மேலாக அங்கு தங்குவதற்கு அவருக்கு அனுமதியில்லை. அப்போது அவர் மனைவியை முத்தமிடவோ, கட்டியணைக்கவோ கூடாது. தான் மேற்கொண்டுள்ள இஃதிகாஃப் வழிபாட்டைத் தவிர வேறு எதிலும் அவர் ஈடுபடவும் கூடாது. நோயாளியை நலம் விசாரிக்க (வெளியில் செல்ல)க் கூடாது. எனினும், தமது (தேவையை முன்னிட்டு வெளியே செல்லும் போது) வழியில் நோயாளியைச் சந்தித்தால் நலம் விசாரித்துக் கொள்ளலாம்.

நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்

பேரறிஞர் இப்னு கைய்யிம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "அல்லாஹ் ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் அடியானின் மூளையைச் சலவை செய்யவே விரும்புகிறான்".

நூல் : ஸாதுல் மஆத் 11-178

அல்லாஹ், தமது அடியானை பத்தரை மாற்றுத் தங்கத்தைப் போன்று பரிசுத்தவானாக மாற்றிட விரும்புகிறான். இனி அடியானின் தனிமை அனைத்தையும் எனக்காகவே ஒதுக்க வேண்டும் என்று விரும்புகிறான்.

அடியானுடைய ரமளானின் இறுதிப்பத்து நாட்களில் மனைவி மக்கள் என யாருக்கும் பங்கில்லை. அந்தப் பத்து நாட்கள் எனக்கு மட்டுமே.

இனி, அவனது உண்ணுதல், பருகுதல், உறங்குதல், விழித்தல் என அனைத்தும் எனக்காகவே; இவை அனைத்தும் எனது இல்லத்திலேயே இருக்க வேண்டும். என்னைப் பற்றிய நினைவுகள் இனி, தூய்மை பெற வேண்டும். அதில் கலப்படம் ஏற்பட்டு விடக் கூடாது. எனவே, என்னைப் பற்றி மட்டுமே நினைத்துப் பார்ப்பதற்கு எனது அடியானுக்கு எனது இல்லமே சரியான இடமாகும் என்று எண்ணுகிறான்.

எனவே, நாம் இஃதிகாஃபை முறையாகப் பேணி இறையருளைப் பெறுவோமாக!

# நோன்பின் குறைகளை சீர்செய்யும் நோன்பின் தர்மம்

மவ்லவீ ஹாஃபிழ் அ.சைய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

தான தர்மங்கள் பலவிதங்கள். ஒவ்வொரு விதமான தர்மமும் ஒவ்வொரு விதமான தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது.

அன்ன தானம் பசியைப் போக்குகிறது.

நீர் தானம் தாகத்தை தீர்க்கிறது.

கண் தானம் பார்வையைக் கொடுக்கிறது.

உதிர தானம் உயிரைக் காக்கிறது.

இப்படி ஒவ்வொரு விதமான தர்மமும் ஒவ்வொரு விதமான தாக்கத்தை ஏற்படுத்தி, பலன்களுக்கு மேல் பலன்களை வாரி வாரி வழங்குகிறது.

ஒரு பேரீச்சம்பழம் நரகத்திலிருந்து காக்கிறது. 'பேரீச்சம் பழத்தின் சிறு துண்டையேனும் தர்மம் செய்து நரகத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அதீபின் ஹாத்திம் (ரளி) அவர்கள் (நூல் : புகாரி 1417

## சொர்க்க நிழலை பெற்றுத் தரும் இரகசிய தர்மம்

இரகசியமாக தான தர்மம் செய்வது, இறைவனின் கோபத்தைத் தணிக்கிறது. தீய மரணம் சம்பவிப்பதிலிருந்து தடுக்கிறது. ஒருவரின் வலது கை தர்மம் செய்வது அவரின் இடது கைக்கே தெரியாமல் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அவர் இறைவனின் அர்ஷின் நிழலில் நிழல் பெறுவார்.

"தனது நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத (மறுமை) நாளில் தனது நிழலில் அல்லாஹ் ஏழு பேருக்கு நிழல் தருவான். அவர்களில் ஒருவர் யாரெனில், தமது இடக்கரத்துக்குத் தெரியாமல் வலக்கரத்தால் இரகசியமாக தர்மம் செய்பவர் ஆவார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரி 1423)

## தான தர்மம் செய்வது தவறுகளை அணைத்து விடுகிறது

'நீர், நெருப்பை அணைத்து விடுவது போல் தான தர்மம் செய்வது தவறுகளை அணைத்து விடுகிறது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் முஆத் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)

## பாவங்களை தீர்க்கும் பரிகாரம் தான தர்மம்

“சோதனையில் ஆழ்த்தப் படும்போது, தொழுகை, தான தர்மம், நல்லறம் ஆகியவை அதற்கான பரிகாரமாகும்” என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹுதைஃபா (ரளி) அவர்கள் (புகாரி 1435)

இறுகிய நெஞ்சம் இளகிய மனமாக மாற தர்மம் செய்ய வேண்டும்

“ஒருவர் நபி [ஸல்] அவர்களிடம் தமது இறுகிய இதயம் குறித்து முறையிட்டபோது, அவருக்கு நபி [ஸல்] அவர்கள், ‘உமது உள்ளம் இளகிய மனம் படைத்ததாக மாற வேண்டும் என நீ விரும்பினால், ஏழைக்கு நீ உணவளி! அனாதையின் தலையை தடவி விடு’ என அறிவுரை கூறினார்கள்.”

## நோயிலிருந்து நிவாரணம் பெற தர்மம் செய்ய வேண்டும்

“உங்களுடைய நோய்க்கு தர்மத்தைக் கொண்டு நிவாரணம் தேடிக் கொள்ளுங்கள்” என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:ஹள்ரத் அபூ உமாமா அல் பாஹிலி (ரளி) அவர்கள் (நூல் : தர்கீப்)

இவ்வாறு தர்மங்கள் பல வகைகளில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித மான தாக்கத்தை ஏற்படுத்தி வைக்கிறது. இதன் வரிசையில் நோன்புப் பெருநாளின் தானிய தர்மமும் இடம் பெறுகிறது.

நோன்புப் பெருநாளின் அதிகாலையில் பெருநாள் தொழுகைக்கு முன்பு நிறைவேற்றப்படும் தானிய அறத்திற்கு “ஸதகத்துல்ஃபித்ர்” நோன்புப் பெருநாள் தர்மம் என்று அழைக்கப்படுகிறது.

ஒருவர் நோன்பு நோற்கும் போது அவர் செய்யும் சிறு சிறு தவறுகளால் அவரின் நோன்புகள் விண்ணை எட்டாமல் மண்ணிற்கும், விண்ணிற்கும் இடையே தடுத்து நிறுத்தப்படு கின்றன.

அவர் நோன்புப் பெருநாள் தர்மத்தை நிறைவேற்றும்போது நோன்பின் குறைகள் நிறைவு செய்யப்பட்டு, அவை விண் ணுலகை சென்றடைகின்றன.

## நோன்புப் பெருநாள் தர்மத்தை நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள்

“அது நோன்பாளியைச் சுத்தம் செய்கிறது; ஏழை களின் பசியையும் போக்கி விடு கிறது. நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன்பு அதைக் கொடுப்பது ஸதகத்துல் ஃபித்ராக நோன்புப் பெருநாள் தர்மமாக அங்கீகரிக்கப்

# புதுக்கோட்டை
# ஜாமிஆ ஸிராஜூம் முனீர் அரபிக் கல்லூரி

## இரு கல்வியும் ஒரே இடத்தில்...!

புதுகை மாநகரில் பொன்விழா ஆண்டைக் கடந்து கம்பீரமாகக் காட்சி தரும் ஜாமிஆ ஸிராஜூம் முனீர் அரபிக் கல்லூரியில் மார்க்கக் கல்வியோடு பொதுக்கல்வியும் ஒருசேர ஒழுக்கத்துடன் அனுபவமிக்க பேராசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது.

*கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (நபிமொழி)*

**நமது அரபிக் கல்லூரியின் சிறப்பம்சங்கள் :**

- ஏழு வருடம் மவ்லவீ ஆலிம் வகுப்புகளுடன் ஃபாஜில் (மேல் வகுப்பு) பாடங்களையும் பயிற்றுவித்தல்.
- குர்ஆன் மனனம் (ஹிஃப்ளு) மற்றும் காரீ பட்டம் வழங்குதல்.
- 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பொதுக்கல்வி வகுப்புகள்.
- ஒழுக்கம் மற்றும் தர்பிய்யத்தில் அதிக கவனம் செலுத்துதல்.
- நேரடிக் கண்காணிப்பில் உணவு ஏற்பாடு மற்றும் மருத்துவ வசதி.
- நல்ல காற்றோட்டத்துடன் கூடிய சுகாதாரமான விடுதி வசதி,

இன்ஷா அல்லாஹ் மார்ச் 15 முதல் அட்மிஷன் நடைபெறுவதால் தங்களது பிள்ளைகளைச் சேர்த்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# ஜாமிஆ ஸிராஜூம் முனீர் அரபிக் கல்லூரி

**ஈத்கா கார்டன், புதுக்கோட்டை-622 001.**

**Ph : 04322-220270, 225700**

**Cell: 98650 07110, 95006 43943, 97907 08839**

படுகிறது. தொழுகைக்கு பின்பு கொடுப்பது சாதாரண தர்மமாக அமைகிறது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : அஹமது)

"மக்கள் பெருநாள் தொழுகைக்கு புறப்படுவதற்கு முன்பே நோன்புப் பெருநாள் தர்மம் வழங்கப்பட வேண்டும்" என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் (நூல்:முஸ்லிம் 1801)

ரமளானின் பெருநாள் தர்மத்தை முஸ்லிம்களான அடிமை - சுதந்திரமானவர், சிறியவர் - பெரியவர் ஆண் - பெண் ஆகியோர் மீது தீட்டாத கோதுமை அல்லது பேரீச்சம் பழம் இவற்றிலிருந்து ஒரு ஸாஉ அளவை (2¼கிலோ) நபி (ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள். பெருநாள் தொழுகைக்கு செல்லும் முன் அதை வழங்கிடும்படி ஏவினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் (புகாரி 1503)

## வாழ்த்துக்கள்!

குர்ஆனின் குரலின் பாசமிகு சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள், சிறப்புப் பிரதிநிதிகள், குர்ஆனின் குரலின் ஒலி உலகெங்கும் ஒலித்திட துஆ செய்து வரும் வாசக நேயர்கள் அனைவருக்கும் எங்களின் இதயங்கனிந்த "ஈத்முபாரக்" நல்வாழ்த்துக்களை உரிதாக்குவதில் பெருமகிழ்வு எய்துகிறோம்.

**- குர்ஆனின் குரல் குழுமம்.**

"பெருநாளில் அவர் (ஏழை)களை யாசகம் கேட்பதிலிருந்து தேவையற்றவர்களாக ஆக்குங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : பைஹகீ)

ஒரு நோன்பாளி தமக்கும், அவர் ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவர்களுக்காகவும் பெருநாள் செலவு, குடும்பச் செலவு, கொடுக்க வேண்டிய கடன் தொகை போக கொஞ்சம் வசதி வாய்ப்பிருந்தால் ஒரு நபருக்கு தலா 2¼கிலோ வீதம் அரிசி அல்லது கோதுமை போன்ற தானியங்களை ஏழைகளுக்கு தர்மமாக வழங்கிட வேண்டும் அல்லது அதன் சந்தை மதிப்பில் பணமாக ஏழைகளுக்கு வழங்கிட வேண்டும்.

ஈத் முபாரக்!

# நிரந்தர நல்லறங்கள்

மவ்லவீ **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

"எது நிரந்தர நற்செயல் என்று ஆய்வு செய்து பார்த்ததில், இஸ்லாம் கூறும் பத்து செய்திகளைத் தவிர வேறு எதையும் இன்றைய உலகத்தில் முன்னிலைப்படுத்த முடியாது" என்று மேல்நாட்டு அறிஞர் மாரிஸ் புகைல் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த அறிஞரின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு திருகுர்ஆன், ஹதீஸ் மற்றும் கடந்த கால வரலாறுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து இந்த கட்டுரையை முழுமைப் படுத்தி இருக்கிறேன்.

"நிரந்தர நல்லறங்கள்" குறித்த முழுமையான தகவல்களை வழங்கி விட வேண்டும் என்கிற ஆசையில் நிதானமாக ஆய்வு செய்து உங்களுக்கு வழங்கி இருக்கிறேன்.

நிரந்தர நல்லறங்கள் குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறிய நான்கு ஹதீஸ்களை சமர்ப்பித்திருக்கிறேன்.

அவற்றில் கூறப்பட்டுள்ள பத்து நல்லறங்களை தனியாகக் குறிப்பிட்டு அதை விவரித்து எழுதியிருக்கிறேன். இதிலுள்ள கருத்துக்களை நம் அன்றாட வாழ்வில் பின்பற்றினால், மறுமை வாழ்வு ஒளிமயமாக இருக்கும்.

## நான்கு நபி மொழிகள் :

1. ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஆதமுடைய சந்ததியான மனிதன் மரணித்து விட்டால், அவன் செய்த நிலையான தர்மம், பயனுள்ள கல்வி, தனக்காகப் பிரார்த்தனை செய்யும் நல்ல பிள்ளை ஆகிய மூன்றைத் தவிர அவனது மற்ற செயல்கள் துண்டிக்கப்பட்டு விடுகின்றன"

(நூல் : முஸ்லிம் 3358)

2. ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான்கு விஷயங்கள் இருக்கின்றன. அவை ஒருவரின் மரணத்திற்குப் பிறகும் அவர்களுக்கான கூலியாக வழங்கப்படும்.

1. இறைவழியில் தொடர்புடையவராக வாழ்ந்து மரணித்தவர்.
2. கல்வியைக் கற்பித்து அதன்படி நடந்தவர்; அதைக் கேட்டு அதன்படி நடந்தவர்.

3. ஒருவர் செய்த தர்மத்திற்கு அது ஏற்படுத்திய தாக்கத் திற்கேற்ப கூலி வழங்கப்படும்.

4. ஒரு மனிதன் நல்ல பிள்ளையை விட்டுச் சென்றி ருக்கிறார் என்றால் அவர் தம் பெற்றோருக்காகச் செய்யும் துஆ (வின் நன்மை).

(நூல் : (முஸ்னது அஹ்மத், தப்ரானீ)

3. ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்ப தாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக இறை நம்பிக்கையாளர் (முஃமின்) ஒருவர் செய்த சேவைகளிலிருந்தும், நன்மை யான செயல்பாடுகளில் இருந் தும் அவர் இறந்த பிறகும்கூட அவரைச் சென்றடையும்.

1. கல்வியை கற்பித்தவர்; அதைப் பரப்பியவர்.
2. நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்து விட்டுச் சென்றவர்.
3. திருகுர்ஆன் பிரதிகளைத் தம் சொத்தாக விட்டுச் சென்றவர்.
4. அல்லது பள்ளிவாசலைக் கட்டியவர்.
5. வழிப்போக்கர்களின் பயன்பாட்டுக்காகச் சத்திரத்தைக் கட்டியவர்.
6. ஆற்றை வெட்டிக் கொடுத்தவர்.
7. தம் வாழ்நாளில் தாம் ஆரோக்கி யமாக இருக்கும்போது தம் செல்வத்திலிருந்து தர்ம மாகக் கொடுக்கப்பட்டவை.''

இவையாவும் ஒருவரின் மரணத்திற்குப் பிறகும் இவற் றின் வழி வரும் நன்மைகள் உரியவரைச் சென்றடையும்.

(நூல் : இப்னுமாஜா)

4. ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார் கள் : ஓர் அடியான் மரணித்த பிறகு, அவன் புதை குழியில் இருக்கும் நிலையில் ஏற்கனவே செய்திருந்த ஏழு வகையான செயல்களுக்குக் கூலி (தொடர்ந்து) வழங்கப்படும்.

1. கல்வியைக் கற்பித்தவர்.
2. ஆறு (குளம்) வெட்டியவர்.
3. கிணறு தோண்டியவர்.
4. மரம் நட்டவர்.
5. பள்ளிவாசல் (மத்ரஸா, ஸ்கூல் போன்றவற்றைக்) கட்டியவர்.
6. திருகுர்ஆன் (அச்சடித்து) அன்பளிப்புச் செய்தவர்.
7. தம் மரணத்திற்குப் பிறகு தமக்காகப் பாவமன்னிப்புத் தேடும் பிள்ளையை விட்டுச் சென்றவர்''

(நூல் : அபூதாவூத்)

## பத்து கட்டளைகள்

1. கற்பது, கற்பிப்பது, பரப்புவது :

கல்வி என்றால் இஸ்லாம் மார்க்க சம்பந்தமான அடிப் படை தகவல்களை ஒவ்வொரு வருக்கும் எடுத்துச் சொல்வதும், அல்லாஹ்வையும், ரசூலையும் சரியான முறையில் எடுத்துச் சொல்லி மக்களை ஓரிறைக் கோட்பாட்டில் நிலைத்திருக்க செய்வது தான் இல்மு – அறிவு.

மேலும், இஸ்லாம் மார்க்கத்திலுள்ள ஏவல், விலக்கல், ஹராம், ஹலால் போன்ற அனைத்து அடிப்படைக் கொள்கைகளையும் அறிந்தவர் கள், அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்வது கடமை யாகும். இப்படிச் செய்கிறவர் தான் பயனுள்ள கல்வியை பெற்றிருக்கிறார் என்று பொருளாகும்.

மேலும் தான் பெற்ற பய னுள்ள கல்வியை தான் ஒருவனே மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணி இருந்து விடாமல், தன்னைப் போன்ற ஒரு கூட்டத்தை உருவாக்கி அப்பணியை செய்ய நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் இல்மு – கல்வி என்று ஒரு வார்த்தையை பயன் படுத்தியிருக்கிறார்கள். இது பொதுவான வார்த்தையாகும்.

மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என்று குறிப்பிட்டு எதையும் பொருள் கொள்ளக் கூடாது. இந்த வார்த்தை இரண்டு கல்வியையுமே உள்ளடக்கிக் கொள்ளும்.

எனவே, பொதுமக்கள் பயன்பெறும் எல்லா வகை கல்வியையும், அனுபவத்தை யும், தொழில் முறையையும் பிறருக்கு கற்றுத் தருவது ஸதகத்துல் ஜாரியாதான்.

## 2. ஆறுகளை வெட்டுவது

ஒரு பெரிய நதியிலிருந்து சிறிய பல நதிகளை உருவாக்கு வதும், ஒரு சிறிய நதியிலிருந்து பெரிய பல ஓடைகளை உரு வாக்குவதும், ஓர் ஓடையிலி ருந்து பல பெரிய வாய்க்கால் களை உருவாக்குவதும், ஒரு வாய்க்காலில் இருந்து சிறிய பல வாய்க்கால்களை உரு வாக்கிக் கடைநிலையில் உள்ள நிலம் வரையிலும் தண்ணீர் சென்றடைய வழிவகை செய் வதும். இவ்வாறு செய்வதால் எல்லாக் காலத்திலும் வாழும் மக்களுக்கு செய்கிற உதவி யாக இவை கருதப்படும்.

மன்னர் ஹாரூன் ரஷீத் அவர்களுடைய மனைவி அன்னை ஜுபைதா அவர்கள் இப்படித்தான் மக்காவிற்குள் ளும், ஹஜ் செய்கிற இடத்தி லும் ஜுபைதா கால்வாய் என்ற பெயரில் ஒரு கால்வாயை உரு வாக்கிச் சென்றிருக்கிறார்கள். அது கடந்த நூற்றாண்டு வரை பயன்பாட்டிலிருந்து வந்தது.

நீங்கள் வசதி படைத்த வராக இருந்தால் உங்களது

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **56 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ '**ஆலிமா**' **வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

(மத்திய & மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

## கனிவான வேண்டுகோள்

மதுரை மாநகரில் 56 ஆண்டுகளாக அநாதை ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி, அரசுப் படிப்பு, தையல் பயிற்சி, மருத்துவ உதவி, 3 வேளை உணவு, தங்குமிடம் யாவும் இலவசமாக வழங்கி ஏராளமான மாணவிகளுடன் வெகு சிறப்பாக எமது நிறுவனம் சேவை செய்து வருகின்றது. அல்ஹம்து லில்லாஹ்!

ஆகவே, தங்களின் நன்கொடை/ஜகாத்/சதகா உதவிகளை **"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"** என்ற பெயரில் **DD / செக் / M.O.** மூலமாக மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்த உதவுமாறு அன்புடன் விழைகிறோம்.

**ICICI Bank: A/c No.601601081642**

**MADURAI K.K.NAGAR BRANCH**

**MICR Code : 625229006 ★ IFS Code : ICIC0006016**

இன்ஷா அல்லாஹ் வங்கியின் மூலம் பணம் அனுப்பி விட்டு தயவு செய்து தகவல் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

கிராமத்திலுள்ள ஏரியை தூர் வாருங்கள். அந்த ஏரிக்கு நீர் வரும் பாதையை செப்பனிடுங்கள். அது மிகப் பெரும் நன்மையை பெற்றுத் தரும்.

இன்று நகர்ப்புறங்களில் வாழுகிற நாம் கண்டிப்பாக கிணறு வெட்டுவது, ஆறுகளை வெட்டுவது சாத்தியமில்லை.

ஆறு மற்றும் கிணறுகளை வெட்டுவதின் நோக்கம் நீர் சேமிக்கப்பட வேண்டும்; மக்கள் பயனடைய வேண்டும் என்பதுதான்.

இன்று நாம் நிலத்தடி நீர் சேமிப்பின் மூலம் அந்த நன்மையைப் பெறலாம். உங்கள் வீட்டு மாடியில் பெய்கின்ற மழைத் தண்ணீரை வீணாக ரோட்டில் விட்டு விடாமல், அதை முறையாக உங்கள் வீட்டின் நிலத்திற்கு அடியிலேயே செல்லும்படியாக போர்களை அமைத்து நிலத்தடி நீரை சேமித்து வையுங்கள்.

இதன் மூலமாகவும் மேற்கண்ட ஹதீஸின் நன்மையைப் பெறலாம்.

### 3. கிணறு மற்றும் நிலத்தடி போர் போன்ற நீர் வழித் தடங்களை உருவாக்குவது :

மக்கள் பயன்பாட்டிற்கு என கிணறு, நிலத்தடி போர் போன்றவற்றை உருவாக்கிக் கொடுப்பதும் மிகப் பெரும் தர்மமாகும்.

வழிப்போக்கர் ஒருவர் வழியில் இருந்த கிணற்றில் இறங்கி தண்ணீரை அருந்தி விட்டு வெளியே வந்து பார்க்கிறார். ஒரு நாய் தண்ணீர் வேண்டி தடுமாறிக் கொண்டிருந்தது. அவர் தன் ஷூவைக் கழற்றி அதில் தண்ணீரை எடுத்து வந்து அந்த நாய்க்குக் கொடுத்தார். அதனால் அவருடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு அவர் சொர்க்கம் சென்றடைந்ததாக ஒருஹதீஸ்புகாரியில்இருப்பதை தாங்கள் அறிவீர்கள்.

தண்ணீர் எடுத்துக் கொடுத்த மனிதனுக்கு சொர்க்கம் கிடைக்கிறது என்றால் அந்தத் தண்ணீர் அங்கே இருப்பதற்குக் காரணமான கிணற்றை வெட்டியவருக்கு மிக உயர்ந்த சொர்க்கம் அல்லவா கிடைக்கும்.

நமது முன்னோர்கள் தண்ணீர்ப்பந்தல், மோர்ப் பந்தல் என்றெல்லாம் வெயில் காலங்களில் ஆங்காங்கே ஏற்படுத்தி நன்மைகளைப் பெற்றிருந்ததை நாம் அறிவோம். ஆனால் அது இன்று காலப் போக்கில் அறவே இல்லை.

வெயில் காலங்களில் உங்கள் வீட்டிற்கு வெளியேதினமும் இரண்டு கேன் தண்ணீரைப் போட்டு வையுங்கள். யாரோ குடித்துச் செல்லட்டும். பிடித்துச் செல்லட்டும் அது உங்கள் நரக நெருப்பை அணைக்கக் காரணமாக இருக்கும்.

மதீனாவில் "ரூமா அல் கிஃபாரி" என்றொரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றில் சுவையான குடிப்பதற்கு மதுரமான தண்ணீர் இருந்தது. அந்தக் கிணற்றுக்குச் சொந்தக் காரர் அந்தக் கிணற்றுத் தண்ணீரை விற்பனை செய்து வந்தார்.

மக்காவிலிருந்து புலம் பெயர்ந்து வந்திருந்த நபித் தோழர்களுக்கு இந்தக் கிணற்றுத் தண்ணீரைத் தவிர வேறு எந்தத் தண்ணீரும் ஒத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்கள் ஜம்ஜம் தண்ணீர் குடித்து வளர்ந்தவர்கள் அல்லவா?

இந்நிலையில் நபி (ஸல்) அவர்கள் அந்த கிணறுக்குச் சொந்தக்காரரான யூதரை அழைத்து, "இந்தக் கிணற்றை நீங்கள் அல்லாஹ்விற்காக தர்மம் செய்து விடுங்கள்; உங்களுக்கு சொர்க்கம் கிடைக்கப் பெற நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார்கள்.

அவர், "எனக்கு இதைத் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை; எனவே அதை இலவசமாக என்னால் கொடுப்பதற்கான வசதி இல்லை" என்று சொல்லிவிட்டார்.

இதனை அறிந்த ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! அந்தக்கிணற்றை யார் வாங்கிக் கொடுத்தாலும் அவர்களுக்கு நீங்கள் சொர்க்கம் தர பொறுப் பேற்றுக் கொள்வீர்களா?" என்று கேட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் "ஆம்!" என்று சொன்னார்கள். உடனே ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள், சம்பந்தப்பட்ட யூதரிடம் சென்று விலை பேசி 37,000 திர்ஹம் கொடுத்து அந்த கிணற்றை வாங்கினார்கள்.

அதாவது "ஒரு நாள் இந்த கிணற்றை நான் பயன்படுத்திக் கொள்வேன்; மற்றொரு நாள் இந்த கிணற்றை நீங்கள் பயன் படுத்திக் கொள்ளுங்கள்" என்பதுதான் ஒப்பந்தம். அந்த ஒரு நாள் பயன்படுத்திக் கொள்வதற்கு தான் 37,000 திர்ஹம்.

ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் தனக்கான நாளை பொதுமக்களுக்காக அன்பளிப்பு செய்துவிட்டார்கள். எனவே ஊர் மக்கள் அனைவரும் அந்த நாளில் இலவசமாக தண்ணீரை எடுத்துக் கொண்டார்கள். மறு நாள் யாருமே அந்த யூதரிடத் தில் சென்று விலை கொடுத்து தண்ணீர் வாங்குவதில்லை.

இப்படியாக சில மாதங்கள் கடந்த பிறகு அந்த யூதர், ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்களின் புத்திசாலித்தனத் தைப் புரிந்து கொண்டு, "இந்தக் கிணற்றின் பங்கு இன்

ளொரு நாள் எனக்கென்று இருக்கிறது; எனவே ஏதோ ஒரு தொகையை கொடுத்து விட்டு இந்த கிணற்றை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

உஸ்மான் (ரளி) அவர்கள் 8000 திர்ஹம் கொடுத்து அந்த கிணற்றை பெற்றுக் கொண்டார்கள். இப்பொழுது ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் முழு கிணற்றையும் பொது மக்களுக்காக அன்பளிப்பு செய்து விட்டார்கள்.

மேற்கண்ட சம்பவத்தின் அடிப்படையில் கிணறு மற்றும் போர் போன்றவற்றை உருவாக்கி பொதுமக்களுக்கு அன்பளிப்பு செய்வோருக்கு சொர்க்கம் பூமியிலேயே நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறான பணிகளை செய்து சொர்க்கத்தை நீங்களும் புக்கிங் செய்து கொள்ளுங்கள்.

மதரஸா, பள்ளிவாசல் போன்ற பொது ஸ்தாபனங்களுக்கு போர் போட்டு கொடுத்தல், மோட்டார் வாங்கி அன்பளிப்பு செய்தல் போன்ற பணிகளை தொடர்ந்து செய்து வாருங்கள்.

**4. மரங்களை நடுதல் :**

முன்பெல்லாம் நெடுஞ் சாலைகளில் பனைமரம், புளிய மரம், மாமரம் போன்றவை நடப்பட்டிருக்கும். அந்த சாலைகளில் பயணிப்பவர்கள் அந்த பழங்களை பறித்து சாப்பிட்டுக் கொள்வார்கள். அப்படி ஒரு பழக்கம் நம்மிடையே இருந்தது.

அரேபியர்கள் பேரீத்தம் மரங்களை சாலைகளில் நட்டு வைத்தார்கள். அதன் கனிகளை பயணிகள் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள். இன்று இது போன்ற நல்ல பழக்கங்கள் பெரும்பாலும் எங்கும் காணப்படவில்லை. அரபு நாடுகளில் இன்றும் இந்த நடைமுறை இருந்து வருவது பாராட்டுக்குரியது.

சாலை ஓரமாக இருக்கும் நிலங்களை உடையவர்கள் கனி தரும் மரங்களை நட்டு, அவற்றை பொது மக்களும் பயன் படுத்திக் கொள்ளட்டும் என்கிற பொதுவான எண்ணத்தோடு அதை விட்டு வைத்தால் நபி களாரின் வழியை பின்பற்றியதாக ஆகும்.

**ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது; நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எந்த ஒரு முஸ்லிமாவது ஒரு மரத்தை நட்டு, அம்மரத்திலிருந்து மனிதர்களோ, மற்ற விலங்கினங்களோ (பறவையினங்களோ) சாப்பிட்டால் அது அவர் செய்யும் தர்மமாகக் கருதப்படும்"**

(நூல் : புகாரி 2320, (முஸ்லிம் 2904)

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"உங்களுக்கான சொர்க்கத்தில் மரம் நடப்பட வேண்டுமானால், 'சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வ லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்' என்று ஒவ்வொரு முறை சொல்லப்படும் போதும் ஒரு மரம் அவருக்காக நடப்படுகிறது."

நூல் : திர்மிதீ , இப்னுமாஜா

நீங்கள் வாழும் பகுதியில் என்ன மரங்களை நட்டால் அந்த நிலத்திற்கு பிரச்சனை இல்லாமலும், அப்பகுதியில் வாழும் மக்களுக்கு பிரச்சனை இல்லாமலும் பயனாக இருக்குமோ அவ்வாறான மரங்களை நட்டு வையுங்கள். அதன் காரணமாக உங்கள் சொர்க்க வாழ்வு சிறப்பாக அமையும்.

**5. பள்ளிவாசல் கட்டுவது :**

நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியவர் அல்லாஹ்விற்காக ஒரு பள்ளிவாசலை கட்டுகிறாரோ, அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் அதைப் போன்ற ஒரு மாளிகையை கட்டித் தருகிறான்.

(நூல் : புகாரி )

பள்ளிவாசலில் அல்லாஹ் ஒருவனை மட்டுமே அனைவரும் வணங்குகிறார்கள். அங்கே வருகிற அனைவரும் மன அமைதியைப் பெறுகிறார்கள். ஒரே நேரத்தில் பல நூறு நல்ல இதயம் கொண்ட நல்ல மனிதர்கள் ஒன்று சேருகிறார்கள். இஸ்லாம் சார்ந்த விஷயங்கள் அங்கே போதிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்த மனித இனமும் நல்லவிதமாக வாழ வழிகாட்டப் படுகிறது. இவை அனைத்திற்கும் காரணமாக இருப்பது இந்த பள்ளிவாசல்கள் தான்.

எனவே பள்ளிவாசலை கட்டுவது தனக்குத்தானே சொர்க்கத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டதற்கு சமம்.

இதைப்போல் மதரஸா, பள்ளிக்கூடம்,கல்லூரி,மருத்துவமனை, டியூஷன் சென்டர், அரசு வேலைகள் பெறபோதிக்கப்படும் அகாடமிகள், ஆதரவற்றோர் காப்பகம் என சகமனிதன் சமூக அந்தஸ்து பெற்று வாழவும், முன்னேற்றம் பெறவும் எந்த கட்டிடங்கள் காரணமாக இருக்குமோ அந்த கட்டிடங்களைக் கட்டித்தருவதும் சொர்க்கத்தைப் பெற்றுத் தரும்.

திருகுர்ஆன் மற்றும் நபிமொழிகளை ஆய்வு செய்யும் ஆய்வுக்கூடங்களையும், திருகுர்ஆன் மற்றும் நபிமொழிகளை விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப ஆராய்ச்சி செய்யும் ஆய்வுநிறுவணங்களையும் கட்டிக் கொடுக்கலாம்.

கேரளா மலப்புரத்தைச் சேர்ந்த குஞ்ஞுகமது ஹாஜியார்

தோற்றம் : 2011

இறைவனின் அருளால்

# ஜாமிஆ அய்னுல் உலூம் தைய்யிபா இஸ்லாமிய ஷரீஅத் அஞ்சல் வழி மகளிர் அரபிக் கல்லூரி

அன்புள்ள தங்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும்.....

**ஆன்லைன் செட்டிங் செய்யப்பட்டு...**
**தபால் வழியில் இந்த கல்லூரி இயங்கி வருகிறது.**

**குர்ஆன் – ஹதீஸ் – ஃபிக்ஹு – இலக்கணம் – அரபிமொழித்திறன் என்ற முறையில் உயர்கல்வி சிலபஸ் திட்டமே இக்கல்வி நிறுவனத்தின் நோக்கமாகும்.**

**இக்கல்லூரியில் இவ்வாண்டு (2024 ) வரை 493 மாணவிகள் ஆலிமா தைய்யிபா (A.Tha.,) பட்டம் பெற்றுள்ளனர்.**

**15ஆம் கல்வி ஆண்டின் சேர்க்கை 2024 ஏப்ரல் முதல் நடைபெறும்.**

**இதில் சேருவதற்கான தகுதி :**

★ திருக்குர்ஆன் நன்றாக ஓத தெரிந்திருத்தல்.

★ 10-ஆம் வகுப்பு அல்லது அதற்கு நிகரான கல்வித் தகுதி பெற்றிருத்தல்.

★ 30 வயதிற்குள் இருத்தல்.

★ ஆலிமாக்களாக இருந்தால் ஓரிரு வயதுகள் சலுகை உண்டு.

★ கல்லூரி மாணவிகள், பட்டதாரிகள், இல்லத்தரசிகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

★ 10–ஆம் வகுப்பு அல்லது +1, +2 மாணவிகள் கண்டிப்பாக இதில் சேர்க்கப்படமாட்டார்கள்.

**தகுதி உள்ள மாணவிகள் இந்த தீன் உயர்கல்வியில் இணைந்து பயன் பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

தொடர்புக்கு : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**புதுகை S.அப்துல் ஜப்பார் பாகவி ஹஸ்ரத்**
**3469, தெற்கு 2ஆம் வீதி – புதுக்கோட்டை - 622 001.**
**தொடர்புக்கு : 944 213 0899**

இறைவனின் அருளால்

# ஜாமிஆ தாருல் உலூம் ஹிக்மத்தும் பாலிஃகா அரபிக் கல்லூரி

3469, தெற்கு 2ம் வீதி, புதுக்கோட்டை - 622001.

அன்புள்ள தங்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும்.....

**நமது கல்லூரி 25ஆம் வெள்ளி விழா ஆண்டை தொடங்கியுள்ளது.**

## நமது கல்லூரியில்

பிரிவு 1: 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பள்ளியில் சென்று படிக்க வேண்டும்.

பிரிவு 2: 4 மற்றும் 5ஆம் ஜும்ரா ஓதும் மாணவர்கள் அத்துடன் சேர்த்து 10ஆம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற வேண்டும்.

பிரிவு 3: 6ஆம் ஜும்ரா ஓதும்போது கம்ப்யூட்டர் (DCA) பயிற்சி எடுத்து தேர்ச்சி பெற வேண்டும்.

பிரிவு 4 : 7ஆம் ஜும்ரா ஓதும் போது ஓட்டுனர் பயிற்சி எடுத்து ஓட்டுனர் உரிமம் பெற வேண்டும். இவை அனைத்திற்கும் கல்லூரி ஏற்பாடுகள் செய்து தரும்.

பிரிவு 5: 8 ஆம் வகுப்பு முடித்து குர்ஆன் ஷரீஃப் ஓதி முடித்தவர்கள் ஹிஃப்ளு பிரிவிற்கு சேர்க்கப்படுவார்கள். குர்ஆன் மனனப்பிரிவு 3 ஆண்டுகளாகும்.

**உணவு, சீருடை, இருப்பிடம், முதலுதவி மருத்துவம் இவற்றின் செலவுகளை கல்லூரி ஏற்றுக் கொள்ளும். கட்டணப்பிரிவும் இங்கு உள்ளது.**

**குறிப்பு : மாணவர்களுக்கு தாய், தந்தை இருவரும் பொறுப்பாளர்(கார்டியன்)களாக இருக்க வேண்டும்.**

நேர்முக தேர்விற்குப்பின் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**கல்லூரி தொடக்கம் : 22-04-2024**

**தகுதி உள்ள மாணவர்கள் இந்த தீன் உயர்கல்வியில் இணைந்து பயன் பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**தொடர்புக்கு : 944 213 0899**

அவர்களின் மனைவி ஜைனபா ஹஜ்ஜும்மா என்ற எண்பது வயது பெண்மணி தன் ஐந்து கோடி மதிப்புள்ள நிலத்தை தானம் செய்திருக்கிறார்.

கணவரின் இரண்டு கிட்னிகளும் பாதிக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளுக்குச் சென்றும் டயாலிசிஸ் சிகிச்சை கிடைக்காமல் மரணித்து விட்டார். அதனால் ஜைனபா அம்மையார் அவர்கள் ஒரு ஏக்கர் முப்பது சென்ட் நிலத்தை குறிப்பிட்ட ஓர் அறக்கட்டளை நிறுவனத்திற்கு அன்பளிப்பு செய்தார். அவர்கள் அந்த நிலத்தில் சி.ஹெச். சென்டர் மருத்துவமனை என்ற பெயரில் ஒரு டயாலிசிஸ் சென்டரை நிறுவி ஏழை எளியவர்களுக்கு தினமும் இலவசமாக மருத்துவம் செய்து வருகிறார்கள்.

தினமும் 22 டயாலிசிஸ் இயந்திரங்கள் மூலம் 44 நபர்களுக்கு இந்த நிறுவனத்தில் டயாலிசிஸ் நடைபெற்று வருகிறது.

“நாம் மரணிக்கும்போது எதையும் எடுத்துச் செல்லப் போவதில்லை; இந்த இடத்தை மருத்துவமனைக்கு வழங்கியதால், என் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இந்த டயாலிசிஸ் மையத்தின் மூலம் சமூகத்தில் உள்ள ஏழை எளியவர்கள் பயன்பெறப் போவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது” என்று சொன்ன ஜைனபா அம்மையார் அவர்கள் தனக்கான ஸதக்கத்துல் ஜாரியா - நிலையான நல்லறத்தை உருவாக்கிச் சென்றிருக்கிறார்.

அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்ததும் முதன்முதலில் ஒரு பள்ளிவாசலைக் கட்ட தன் சொந்த பணத்திலிருந்து இடத்தை வாங்கினார்கள். பள்ளிவாசலுக்கான இடத்தை வாங்குவதில் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்களையும் கூட்டாளியாக ஆக்கிக் கொண்டார்கள்.

ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் ஆட்சியாளராக இருந்தபோது மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலை விரிவுபடுத்திட முயன்றபோது பொதுமக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

மஸ்ஜிதுன் நபவி பழமை மாறாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

அப்பொழுது ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள், “யார் ஒரு பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் அதைப்போன்று ஒரு மாளிகையை கட்டித் தருகிறான்” என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வார்த்தை உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக வேண்டியே நான் இந்த

பள்ளிவாசலை புதுப்பிக்க விரும்புகிறேன்" என்று சொன்னதும் அனைத்து சஹாபாக்களும் அதற்கு ஒப்புக்கொண்டு பள்ளிவாசலை விரிவுபடுத்த முன் வந்தார்கள்.

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ரு (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் ஒரு பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் அதைவிட விசாலமான ஒரு வீட்டை சொர்க்கத்தில் கட்டித் தருகிறான்.

நூல் : முஸ்னது அஹ்மத்

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது; நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “பெருமைக்காக, பகட்டுக்காக இல்லாமல் யார் அல்லாஹ்வுக் காக ஒரு பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டித் தருகிறான்.

நூல் : தப்ரானீ

தொழுமிடம், பள்ளி வாசல் ஆகிய பெயரில் அது எவ்வளவு சிறிய இடமாக இருந்தாலும் அதற்கான நன்மை முழுமையாகக் கிடைக்கும்.

பெரும் பெரும் வீடுகளை தாம் குடியிருப்பதற்காக கட்டிக் கொள்கிறவர்கள், அடுக்கு மாடி குடியிருப்புகளை கட்டி வாடகைக்கோ, விற்பனையோ செய்கிறவர்கள், பெரும் ஷாப்பிங் மால் போன்றவற்றை கட்டுகிறவர்கள் அதில் ஒரு தொழுமிடத்தை கட்டி வைத்து விடுங்கள்.

தொடர்ந்து எல்லா கால கட்டத்திலும் அங்கே அது தொழுமிடமாக தொடர்ந்து இருப்பதற்கான வஸிய்யத் அல்லது எழுத்து வடிவிலான கட்டளைகளை பிறப்பித்து வைத்து விடுங்கள். அல்லாஹ் அதன் காரணமாகவும் நமக்கு நிரந்தர நன்மை என்னும் வருவாயை தந்து கொண்டே இருப்பான்.

### 6. குர்ஆனை பிரதி எடுத்து தருவது :

ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் பைத்துல் முகத்தஸை மீட்டெடுத்த பிறகு முதன் முதலில் பைத்துல் முகத்தஸில் திருக்குர்ஆனை பிரதி எடுத்து, பார்த்து ஓதுகிற வர்களுக்கு தோதுவாக பள்ளி வாசலில் வைத்திருந்தார். இது அந்த காலத்தில் மிகப்பெரிய அளவில் மக்களால் பேசப்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் இந்த வார்த்தையை இங்கு தான் முதன் முதலில் நடை முறைப்படுத்தி இருந்தார்கள்.

எனவே பள்ளிவாசல்களில் அரபு மொழி திருகுர்ஆன், மற்றும் மொழிபெயர்ப்பு குர்ஆன், விரிவுரை குர்ஆன்

போன்றவற்றை வாங்கி வைப்பது பயன் மிக்கது.

பயன்மிக்க இஸ்லாமிய நூல்கள், ஹதீஸ் நூல்கள், அரபுக் கல்லூரிகளில் போதிக்கப்படுகிற மார்க்க சம்பந்தமான நூல்கள் ஆகிய வற்றை வாங்கி அன்பளிப்பதும், அரபுக் கல்லூரி மாணவர் களுக்கு தேவையான நோட்டு புத்தகங்களை வாங்கி அன்பளிப்பதும் மிகச் சிறந்த பயனைத் தரும்.

வசதி படைத்தவர்கள் தாம் வாழ்கிற ஊரில், ஒரு நூலகத்தை உருவாக்கி, அந்த நூலகம் உலகம் உள்ளளவும் செயல்பட சொத்துகளையும் கொடுத்துச் சென்று விட்டால் அதுவே அவருக்கு சிறந்த ஸதக்கத்துல் ஜாரியாவாக இருக்கும்.

இதுபோன்ற நூலகங்களில் மார்க்க சம்பந்தமான நூல்கள் மட்டுமின்றி, அறிவு சார்ந்த அனைத்துத் துறை நூல்களும் இடம்பெற்றிருப்பது சிறந்தது.

மரண தருவாயில் இருக்கும் பெற்றோர் தான் ஓதிக் கொண்டிருந்த குர்ஆனையோ, அல்லது பத்து குர்ஆன் ஷரீஃப்களை விலைக்கு வாங்கி பள்ளிவாசல்களுக்கு வக்ஃபு செய்ய வேண்டும் என்று இறுதி வஸிய்யத் செய்தி ருந்தாலோ அதை பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல் மரண தருவாயில் பெற்றோர்கள் சொல்லாமல் போனாலும் பிள்ளைகள் நன்மையை நாடி பெற்றோருக்காக அவ்வாறு குர்ஆன் பிரதிகளை பள்ளி வாசலுக்கோ ஓதுகிறவர் களுக்கோ வாங்கி அன்பளிப்பு செய்வது இஸ்லாத்தில் ஆகுமானது.

இது நான்கு மத்ஹப் இமாம் களாலும் அங்கீகரிக்கப்பட்ட இஜ்மா - ஏற்றுக் கொள்ளப் பட்ட கருத்தாகும்.

### 7. பிள்ளைகளை நன்கு வளர்ப்பது

தம் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை கற்பித்து, நல்லொழுக்கங்களை போதித்து, நேர்மையானவர் களாகவும், உண்மையாளர்களா கவும் வளர்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட குழந்தை களை நாம் உருவாக்கிச் செல்லும்போது இவர்கள், காலம் சென்ற தம் பெற்றோருக் காகவும், மூதாதையர்களுக் காகவும் எல்லாம் வல்ல அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டே இருப்பார்கள். மேலும் ஏதேனும் ஒரு வழியில் நன்மைகளை அவர்களுக்கு அனுப்பிவைத்துக் கொண்டும் இருப்பார்கள்.

ஹள்ரத் ஷைஹு உஸைமைன் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "பிரார்த்தனை

செய்யும் நல்ல பிள்ளைகள் என்பவர்கள் ஒரு மனிதனுடைய ஆண், பெண் என இரு பாலரையும் எடுத்துக் கொள்ளும். மேலும் மகனின் மகன் மற்றும் மகள் என அவர்களுக்குக் கீழ் வரும் அனைத்து சந்ததியினரையும் மகளின் மகள் மற்றும் மகன் என அவர்களுக்கு கீழ் வரும் அனைத்து சந்ததியினரையும் இது குறிக்கும்."

"இறைவா! நான் சிறுவனாக இருக்கும்போது என்னை எனது பெற்றோர் கவனித்துக் கொண்டது போல் நீ இவர்களை பராமரிப்பாயாக!" என்று ஒரு மகன் கேட்கும் துஆவும் ஸதகத்துல் ஜாரியாவில் சேரும்.

இமாம் சுயூதி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் செய்கிற ஒவ்வொரு நற்செயலிலும் தந்தைக்கும் பங்கு உண்டு.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்; "உங்கள் சம்பாத்தியத்தில் மிகவும் மணமானது உங்கள் கைகளால் உழைத்துப் பெறுவது தான். மேலும் மகனுடைய சம்பாத்தியத்தில் பெற்றோர் சாப்பிடுவதும் மணமானது தான்."

சூரத்துல் கஹ்ஃபுவில் 82 வது வசனத்தில் அல்லாஹ் ஒரு வரலாற்றை குறிப்பிடுகிறான். நல்ல ஒரு தந்தை, தன் மரண தருவாயில் தன் செல்வங்கள் சிறு பிராயத்தில் உள்ள தன் குழந்தைகளுக்கு முறையாக சென்றடைய வேண்டும் என்கிற எண்ணத்தில் அவற்றை தன் வீட்டின் சுவற்றுக்கு அடியில் புதைத்து வைத்துவிட்டு இறந்து போகிறார்கள்.

அந்த குழந்தைகள் பெரியவர்களாக ஆனதும் அந்த வீட்டை எடுத்து கட்ட நினைக்கும் போது பெற்றோர் வைத்துச் சென்றச் செல்வம் அவர்களுக்கு கிடைக்கிறது.

இதை "வ கான அபூஹுமா ஸாலிஹா - அவ்விருவரின் பெற்றோரும் நல்லவராக இருந்தார்கள்" என்று இவ்வசனம் கூறுகிறது.

அதாவது பெற்றோர் இருவரும் நல்லவர்களாக இருந்ததாலும், அவர்களின் பிள்ளைகள் மிக நல்லவர்களாக இருந்ததாலும் தந்தையின் எண்ணப்படியே பிள்ளைகளிடத்தில் அந்தச் செல்வம் சென்று சேருகிறது.

எனவே அந்த பிள்ளைகளும் கூட அவர்களின் பெற்றோருக்கு நல்ல பிள்ளைகளாக இருந்ததையே இந்த வசனம் குறிப்பிடுகிறது.

எனவே உங்களுடைய பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக வளர்ப்பதை கடமையாக்கிக் கொள்ளுங்கள். அதனால் பயனடையப் போவது நீங்களும், உங்களின் சந்ததிகளும் தான்.

தமிழ்நாட்டில் பல்வேறு அரசுகள் தம்காலத்தில் நெடுஞ் சாலைகளில் ஆங்காங்கே சத்திரங்களை கட்டி வைத்தி ருந்தார்கள். வழிப்போக்கர்கள் அதில் தங்கி ஓய்வெடுப்பார்கள். மழை, வெயில் காலங்களில் அந்த இடங்களை பயன் படுத்திக் கொள்வார்கள்.

அங்கே தங்கி இருப்பவர் களுக்கு பல அரசாங்கங்கள் உணவளித்து இருக்கின்றன. இதுவெல்லாம் கடந்த கால வரலாறு.

சுதந்திர இந்தியாவில் சத்திரங்கள் முடிவுக்கு வந்த பிறகு இஸ்லாமியர்கள் வழிப்போக்கர்களுக்காக பள்ளிவாசல்களை எந்த நேரமும் திறந்தே வைத்திருந் தார்கள். அதை இஸ்லாமிய வழிப்போக்கர்கள் பயன் படுத்திக் கொண்டார்கள்.

இன்று இந்த நிலையும் முழுமையாக மாறி வழிப் போக்கர்கள் ஹோட்டல்களி லும், லாட்ஜ்களிலும் தங்கும் நிலை உருவாகி இருக்கிறது.

நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலையொட்டி, நமது முன்னோர்கள் பின்பற்றி வந்த சம்பிரதாயமான நடை முறை இன்று நம் அனைவரா லும் கைவிடப்பட்டுள்ளது. இதை ஏதேனும் ஒரு வழியில் மீண்டும் உருவாக்கம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

மேலும் ஏழை மாணவர்கள் படிப்பதற்கு மதரஸா கட்டிக் கொடுப்பது, விடுதிகள் கட்டிக் கொடுப்பது, கல்லூரிகள் கட்டித் தருவது, அனாதை காப்பகங்கள் கட்டுவது, அனாதை சிறுவர் கள் படிப்பதற்கு தேவையான கட்டிடங்களை கட்டிக் கொடுப் பது, ஆதரவற்ற விதவைப் பெண்களுக்கு இலவச வீடு வழங்குவது அல்லது வாடகை இல்லாத வீடு வழங்குவது அல்லது குறைந்த வாடகை யில் வீடு வழங்குவது, ஏழை எளியவர்களுக்கு கட்டிடங்கள் கட்ட உதவி செய்வது போன்ற இவையாவும் நிரந்தர நல்லறங்களில் சேரும்.

(தொடரும்)

---

## நபி (ஸல்) அவர்கள் பிறப்பித்த கட்டளை

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பார்கள். ''ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் லைலத்துல் கத்ரை தேடிக்கொள்ளுங்கள்!'' என்று கூறுவார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் அளப்பெரும் பேரருளால்.....

## புனிதமிகு ரமளான் மாதத்தில்

# மதுரை M.I.W.S. பைத்துல்மாலுக்கு

# வாரி வழங்குங்கள்!

இந்தியாவிலேயே கடந்த 40 ஆண்டுகளில் 982 ஏழைக்குமர்களுக்கு
திருமணத்தை நடத்தி வைத்து வாழ்வளித்துள்ள

## மதுரை M.I.W.S. பைத்துல்மாலுக்கு

நிகழும் பொன்னான புனிதமிகு ரமளானில் நீங்களும், உங்களின் அருமை நண்பர்கள், உற்றார் - உறவினர்கள் மூலமாகவும் ஜகாத், ஸதகா நிதிகளிலிருந்து உதவிக்கரம் நீட்டி ஏழைக்குமர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வாருங்கள்.

முடிந்தால்..... **ஏழைக்குமர் ஒருவரின் திருமணத்தையே** இன்ஷா அல்லாஹ்

உங்கள் செலவில் நடத்தி முடித்திட ரூ. **80,000/-** ஐ

# அள்ளி வழங்குங்கள்!

இன்ஷா அல்லாஹ் வரும் **28.04.2024** ஞாயிற்றுக்கிழமை
12 குமர்களுக்கு திருமணம் நடைபெறவுள்ளது.

தங்களின் மேலான உதவிகளை **"AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST BAITHUL MAL"** எனும் பெயரில் மதுரை கனரா வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code :5663) எங்கள் கணக்கு எண் : **1009101028635** (I.F.S.C. Code:CNRB0005663) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக **Transfer** செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.


# M.I.W.S. BAITHULMAL

J.M.S. Arabic College Campus, Jaamiyaa Nagar,
Sivagangai Highway Road, MADURAI - 20.

9994148480, 9486017570 miws_baithulmal@rediffmail.com

## மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோர்களுக்காக) மேல்விஷாரம்

★ அல்ஹம்துலில்லாஹ்! 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது நாழிரா, ஹிஃப்ழு, ஜுஸ்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

★ மதரஸாவில் 100 மாணவர்கள், 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்)

★ இதுவரை சுமார் 31 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

★ ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 900 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

★ மதரஸாவில் 20 ஆசிரியர்கள் மற்றும் 11 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

★ மதரஸாவிற்காக சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. தற்காலிக கட்டிடத்தில் தான் (Sheet Hall) மதரஸா செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்களுக்கு மழை, வெயில், குளிருக்கான போதிய வசதிகள் இல்லை.

★ அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும், மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன.

**கனிவான வேண்டுகோள் :** மதரஸாவின் வருடாந்திர, மாதாந்திர, வாராந்திர மற்றும் தினசரி செலவுகளில் தங்களின் (நன்கொடை, ஸதகா, ஜகாத், ஸதகத்துல் ஜாரியாவை) கொண்டு பங்கெடுத்துக் கொள்ளவும். ஜஸாக்கல்லாஹு கைரா.

## மதரஸாவின் கல்வி பிரிவுகளின் முழு விளக்கம்

| பிரிவுகள் | மாணவர்கள் | மாணவிகள் | பார்வை அற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நாழிரா | 26 | 20 | 14 | 46 |
| ஹிப்ழு | 43 | 70 | 26 | 113 |
| ஜும்ரா | 29 | 12 | 10 | 41 |
| கிராத் | 28 | மக்தப் 20 | 10 | 20 |
| | | | மொத்தம் | 220 |

## உலகக் கல்வி

| | | | | |
|---|---|---|---|---|
| $10^{th}$ | 27 | 89 | 13 | 116 |
| $12^{th}$ | 05 | 02 | 02 | 07 |
| கல்லூரி | 12 | - | 02 | 12 |

## செலவினங்கள்

| | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,500 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 66,000 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 12,10,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 1,45,20,000 |
| மதரஸாவின் கடன் | 25,00,000 |

## பட்டம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| மொத்த ஹாபிழ்கள் | 30 |
| மொத்த உலமாக்கள் | 17 |
| மொத்த ஹாபிழாக்கள் | 100 |

UPI ID : imdadiyaeducationalct@sbi

A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST

**STATE BANK OF INDIA**
CURRENT ACCOUNT NO : 35612371063
Melvisharam Branch Code : 3783
IFSC : SBIN0003783

**INDIAN BANK**
CURRENT ACCOUNT NO : 6288904753
Melvisharam Branch Code : 1312
IFSC : IDIB000M139

For Online Transactions

Please Share the Name, Contact Number & Address (Mandatory)
For Further Enquiries : +91-9952120340

By the Grace of Almighty we got **12A & 80G Certificate**

Registered under section 12AA of the Income Tax Act,1961 as per
Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499
This Donation is Eligible for Deduction U/s. 80G of Income Tax Act. 1961
Vide U.R.No. AABTI2052FF20241 Dated : 09/02/2024

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**

539,Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
Contact : +91-9952120340

# உங்கள் பிள்ளைகள் ஆலிம் & ஹாஃபிழ் ஆக வேண்டுமா?

# கவலை வேண்டாம்!

# மதுரை ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரி

சிவகங்கை தேசிய நெடுஞ்சாலை,
ஜாமிஆ நகர், மதுரை - 20.

## கல்விப் பணியில் 40 ஆண்டுகள்....

- ஐந்து ஆண்டுகளில் மவ்லவீ ஆலிம் பட்டம்
- குர்ஆன் மனன ஹிஃப்ழு பிரிவு
- குர்ஆன் நாஜிரா பிரிவு
- அரபி பேச்சுப் பயிற்சி
- அஃப்ழலுல் உலமா தேர்வு எழுத வைத்தல்
- தமிழ் பயான் பயிற்சி
- 8, 10, 11 மற்றும் 12 வரை உலகக் கல்வி

- ★ தரமான கல்வி
- ★ திறமையான ஆசிரியர்கள்
- ★ சுவையான உணவு
- ★ சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- ★ வசதியான தங்குமிடம்
- ★ இயற்கையான சூழல்
- ★ தடையில்லாத மின்சாரம்
- ★ ஆங்கில பேச்சுப் பயிற்சி
- ★ கணினிப் பயிற்சி

**கல்லூரியில் சேர எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**S.சபூர் முஹைதீன் மிஸ்பாஹி ஹள்ரத்**
தலைவர்.

மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் அல்லாமா அஷ்ஷைகு
**M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா**
முதல்வர்.

மேலும் தொடர்புக்கு :
**94430 66539, 94860 17570, 99941 48480**

ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

**“நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்.”**

**- நபி (ஸல்) அவர்கள்**

(நூல் : திர்மிதீ)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

**சீமாட்டி**

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் – 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் அளப்பெரும் பேரருளால்.....

**புனிதமிகு ரமளானை முன்னிட்டு**

# அள்ளி வழங்கி ஆதரவு தாருங்கள்!

கடந்த 40 ஆண்டுகளாய் இச்சமுதாயத்தின் கல்விப் பணிக்காக கண்ணியமாக உழைத்து, சமுதாயத்தின் வருங்காலத் தலைவர்களை ஒழுக்கமிக்கவர்களாக – சன்மார்க்கப் பேரறிவும், உயர்ந்த உலகியல் கல்வியும் பெற்றவர்களாக – உருவாக்கித் தந்திருக்கிறது......

உங்களின்

**"அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா"** எனும்

**மதுரை J.M.S.அரபு கல்லூரி.....!**

**புனிதமிகு ரமளான் மாதத்தில் ஜகாத், ஸதகா, நன்கொடைகளை அள்ளி வழங்கி அதிக நன்மைகளைப் பெற்றிட வேண்டுகிறோம்.**

தங்களின் மேலான உதவிகளை **"AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST"** எனும் பெயரில் மதுரை இந்தியன் வங்கி கருப்பாயூரணி பிராஞ்சின் (Br. Code : 1437) எங்கள் கணக்கு எண். **429079510** (IFSC Code : IDIB000K136) எனும் கணக்கிற்கு எந்த வங்கியிலிருந்தும் பணமாக Transfer செய்து விட்டு, கீழ்கண்ட மொபைல் எண்களுக்கு தெரிவிக்கலாம். மணியார்டர் மூலமும் எங்களின் கீழ்கண்ட முகவரிக்கு தொகைகளை அனுப்பலாம்.

# J.M.S.ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,
MADURAI - 625020. S.India.
94430 66539, 94860 17570


Whites
As pure as it gets.
Seyad
Garments
SHIRTS
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003. PH.: 0462 2323086
A Product of Seyadu Spinning Mills

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196




**Platinum Package**
**(31 - 33 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
**(18 - 21 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50MTRS)
(MADINA : 50-150MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

## மதுரை J.M.S. அரபு கல்லூரியில் பட்டமளிப்பு விழா!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அளப்பெரும் பேரருளாலும், எங்களின் உஸ்தாதுமார்கள், ஷைகுமார்கள், சமுதாய வழிகாட்டிகளின் துஆ பரக்கத்தாலும் குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரும், மதுரை J.M.S. அரபு கல்லூரி மற்றும் M.I.W.S .பைத்துல் மால் நிறுவனருமான "அஸ்அதுல் மில்லத்" அல்லாமா **அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் கிப்லா** (ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்ட மதுரை J.M.S. அரபு கல்லூரியின் பட்டமளிப்பு விழா கடந்த 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் மதுரை J.M.S. அரபுக் கல்லூரி வளாகத்திலுள்ள "அஸ்அதுல் மில்லத்" ஹள்ரத் (ரஹ்) அவர்களின் நினைவரங்கத்தில் மிகச்சிறப்புடன் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு J.M.S. அரபு கல்லூரி & M.I.W.S . பைத்துல்மாலின் தலைவர் மவ்லானா அல்ஹாஜ் **எஸ்ஸய்யூர் முஹ்யித்தீன் மிஸ்பாஹி ஹள்ரத்** அவர்கள் தலைமை வகிக்க, அதன் நிர்வாகக் குழு உறுப்பினர்களும், தமிழகத்தின் முக்கிய பிரமுகர்களும், சமுதாய முன்னோடிகளும் முன்னிலை வகித்தனர்.

மூத்த உலமா பெருமக்கள், கல்லூரி பேராசிரியர்கள், சமுதாய முன்னோடிகள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

J.M.S. அரபு கல்லூரியில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்ற மூன்று மாணவர்களுக்கு "ஸஆதி" ஸனதை கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா "ஸத்ருல் முதர்ரிஸீன்" ஷைகுல் ஹதீஸ் **M. முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா தாமத் பரகாதுஹு** அவர்கள் வழங்கினார்கள்.

சென்னை அடையாறு அல் ஹுதா அரபு கல்லூரி முதல்வர் மவ்லானா அல்ஹாஃபிழ் டாக்டர் **M. சதீதுத்தீன் பாகவி ஹள்ரத்** அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்கள்.

மதுரை மாவட்ட, மாநகர, வட்டார உலமா பெருமக்கள், ஜமாஅத் நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் மற்றும் பட்டம் பெறும் மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

வல்ல ரஹ்மான் இந்த அரபு கல்லூரியின் சேவைகள் அனைத்தையும் கபூல் செய்தருள்வானாக.

## வாரணாசி நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம்

ஞானவாபி மஸ்ஜிதின் நிலவறையில் பூஜை நடத்த

அனுமதியளித்த வாரணாசி நீதிமன்றத்தின் தீர்ப்பு அவசர கதியில் வெளிவந்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்வோம் என்று அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அணுகப் போவதாகவும், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டுக்கு கடிதம் எழுதப்போவதாகவும் அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்டவாரியம் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஜம்இய்யத் உலமாயேஹிந்த், ஜமாஅத்தே இஸ்லாமி (ஹிந்து) உள்ளிட்ட 6 முஸ்லிம் அமைப்பு களின் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது.

அப்போது 1991 ஆம் வருட மத வழிபாட்டு தலங்கள் சட்டத்தை பல்வேறு கீழமை நீதிமன்றங்கள் நிலைநிறுத்தத் தவறுவது வேதனை அளிக் கிறதுஎன்றும் முஸ்லிம் அமைப்பு கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக வாரணாசி மாவட்ட நீதிமன்ற உத்தரவின் படி ஞானவாபி மஸ்ஜிதில் உள்ள நிலவறையில் பூஜை நடத்தப்பட்டது. இதனை முஸ்லிம் அமைப்புகள் கடுமையாக கண்டித்துள்ளன.

இதுகுறித்து அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் தலைவர் காலித் சைபுல்லாஹ் ரேமானி கூறுகை யில், "ஒரு மஸ்ஜிதை கட்டுவதற் காக மற்றவர்களின் வழிபாட்டுத் தலங்களை இடிப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. கோவில், மஸ்ஜித் என்ற போர்வையில் இந்து முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சிகள் தற்போது அரங்கேறி வருகின்றன. பல நூற்றாண்டு களாக இங்கு கோவில்கள் உள் ளன. எந்த முஸ்லிம் மன்னரும் அதற்கு இடையூறு செய்ய வில்லை. முஸ்லிம்கள் இதுபோன்ற சூழ்நிலைகளில் பொறுமையை கடைபிடிக்க வேண்டுமென்றும், நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் சமுதாயத்திற்கு அறிவுரை கூறி வருகிறோம். நீதித்துறை மீது உள்ள நம்பிக்கை குறைந்து வரும் நிலையில் எத்தனை ஆண்டு களுக்கு பொறுமையாய் இருக் கும்படி அறிவுறுத்த முடியும்? என்று தெரிவித்துள்ளார்.

சென்ற சில வாரங்களாக வாரணாசியில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும் போது பாபரி மஸ்ஜித் விவகாரம் போன்று தொடர்கதையாகி விடுமோ? என்ற அச்சம் ஏற் பட்டுள்ளது என்று முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஜம்இய்யத்



DAIT

DHAANISH AHMED
INSTITUTE OF TECHNOLOGY
Veerappanur, Coimbatore

WE ARE
HIRING
ஆட்கள் தேவை

GIRLS HOSTEL
WARDEN
மகளிர் விடுதி காப்பாளர்

CONTACT
+91 9843 9843 03 | 0422 7172 060

ஈத் முபாரக்!

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158


DAIT
DHAANISH AHMED
INSTITUTE OF TECHNOLOGY
Veerappanur, Coimbatore
WE ARE
HIRING
ஆட்கள் தேவை
GIRLS HOSTEL
WARDEN
மகளிர் விடுதி காப்பாளர்
CONTACT
+91 9843 9843 03 | 0422 7172 060


ஈத் முபாரக்!
நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்
பாவா மெடிக்கல்ஸ்
294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.
போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

உலமாயே ஹிந்த் அமைப்பின் தலைவர் அர்ஷத் மதனீ கூறுகையில், "வாரணாசியில் நடைபெறும் சம்பவத்தை தனி யாக பார்க்க முடியாது. இது போன்று மதுராவிலுள்ள ஈத்கா, அகமதாபாத் மஸ்ஜித், டெல்லி ஜும்ஆ மஸ்ஜித் போன்றவை குறித்தும் விவகாரங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்த விவகாரங்களை வைத்து பார்க்கும்போது மத வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை நீதி மன்றங்கள் விட்டுக் கொடுக்க தொடங்கி விட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது என்று தெரிவித்தார்.

## எழுத்துலகின் புதிய முகவரி: ரிதாஜ் ஹுஸைன் அல் ஹாஸ்மி!

மாணவப் பருவத்திலேயே மகளின் புத்தகம் வாசிக்கும் ஆர்வத்தைப் பெற்றோர் ஊக்கு வித்ததன் மூலம் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இரண்டு முறை இடம் பெற்று உலகச் சாதனை படைத்துள்ளார் சவூதி அரேபியாவின் ஜித்தாவைச் சேர்ந்த ரிதாஜ் ஹுசைன் அல் ஹாஸ்மி.

15 வயதாகும் ரிதாஜ் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்புப் படிக்கும்போதே புத்தக வாசிப்பில் பேரார்வம் காட்டினார். தனது தோழிகள் ஓய்வு நேரத்தில் விளையாட்டு களில் ஈடுபடும்போது, ரிதாஜ் அருகிலுள்ள நூலகத்திற்குச் சென்று ஆங்கிலப் புத்தகங் களை வாசிப்பதில் ஆர்வம் காட்டினார்.

தங்களது மகளின் இலக்கியத் தேடலைப் புரிந்து கொண்ட அவரது பெற்றோரும் புத்தகங்கள் வாங்கி பரிசளித்த துடன் வாசிப்பை ஊக்கப் படுத்தி சிறிய சம்வங்களைக் கதைகளாகஎழுதஆர்வமூட்டினர்.

ரிதாஜ் அல் ஹாஸ்மி தனது 9ஆவது வயதில் Treasure of the Lost Sea என்ற முதல் நாவலை எழுதினார். 12ஆவது வயதில் அடுத்தடுத்து Portal of the Hidden World, Beyond the Future World என்று இரண்டு நாவல் களை எழுதி வெளியிட்டார். உலகின் முதல் இளம் வயது பெண் பதிப்பாளர் என்று கின்னஸ் உலக சாதனைப் பட்டியலில் இடம் பிடித்தார்.

சவூதி அரேபியாவின் பிரபலமான நாளிதழான அரப் நியூஸ் பத்திரிகை இவரது கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டது. அண்மையில் சவூதி அரேபியாவில் ஏற்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சி. தொழில் நுட்ப வளர்ச்சி, மாற்று எரிசக்தி வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் சவூதி இளைஞர் களின் பங்களிப்பு பற்றிய ரிதாஜ் அல்ஹாஸ்மியின் கட்டுரைகள் World's Youngest Female Columnist என்ற பிரிவில் 2ஆவது

முறையாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும் வகையில் மூன்று நாவல்கள் எழுதி வருவதாகக்கூறும் ரிதாஜ் அல்ஹாஸ்மி, பரந்துபட்ட வாசிப்பைப் பழக்குவதன் மூலம் இலக்கிய ஆர்வத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த முடியும் என்று கூறுகிறார்.

**பொது சிவில் சட்டத்திற்கு முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் கடும் எதிர்ப்பு!**

**மத உரிமைகளில் தலையிடுவதா என்று கண்டனம்**

உத்தரகாண்ட் மாநில அரசு கொண்டு வந்துள்ள பொது சிவில் சட்டத்திற்கு அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்டவாரியத்தின் செயற்குழு உறுப்பினர் காலித் ரஷீத் பரங்கி மகலி கூறுகையில்,

பொது சிவில் சட்டம் கொண்டு வர முயற்சிப்பது நியாய விரோதமானது. ஏற்கனவே தெளிவான சட்டங்கள் உள்ளன. மேலும் புனித திருகுர்ஆனும், நபிமொழியும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றன.

இந்துக்களுக்கு இந்து திருமணச் சட்டம், இந்து வாரிசுரிமை சட்டம், இந்து குழந்தை தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச்

CityAds BOOKS www.cityadsbooks.com

இஸ்லாமிய புத்தகங்கள் விற்பனை

- தினமும் இஸ்லாமிய புத்தகங்களின் தகவல்களை Whatsapp-ல் நாங்கள் அனுப்புகிறோம். உங்கள் Whatsapp No-ல் இருந்து Send Islamic Book Details என்று அனுப்பி நீங்களும் இணைந்து பயன் பெறுங்கள்.
- நல்ல நல்ல புத்தகங்களை உங்கள் உறவினர்களுக்கும்- நண்பர்களுக்கும் திருமண மற்றும் பெருநாள் பரிசாக அனுப்புங்கள். பணத்தை GPay மூலம் செலுத்தி விட்டால் பரிசு புத்தகங்களை தபால்-கூரியர் மூலம் அனுப்பி வைக்கிறோம்.
- புத்தகப்பட்டியலை Whatsapp & Telegram மூலம் நீங்கள் பெற்று கொண்டு உங்களுக்குத் தேவையான புத்தகங்களை நீங்களே தேர்வு செய்யலாம்.
- குர்ஆனின் குரல் மாத இதழை சந்தாவில் பெறவும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்யவும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவன விளம்பரங்களை தமிழ், ஆங்கிலம் & பிற மொழி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்ய உங்கள் விளம்பர மேட்டரை 98410 16016 நம்பருக்கு Whatsapp செய்தால் விளம்பர புரூப், ஸ்கீம் & கட்டண விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

CityAds For More Details Call/Whatsapp: 98410 16016

சட்டம் ஆகியவை உள்ளன. இவ்வாறு இருக்கும்போது பொது சிவில் சட்டம் அவசியமற்றது.

இது மதச் சுதந்திரத்தில் தலையிடும் செயல். அரசியல் சட்ட அமைப்பு வழங்கியுள்ள தனிஉரிமைகளை பறிக்கும் நடவடிக்கையாகும்.

இந்தச்சட்டங்களின்மூலம் சமத்துவத்தை நிலை நாட்ட முடியாது. இந்த பொது சிவில் சட்டத்திலிருந்து சில பிரிவின ருக்கு விலக்கு அளிக்கும் நிலையில் அது எப்படி பொது சிவில் சட்டமாகும்?

மதச் சுதந்திரம் என்பது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். எனவே, பொது சிவில் சட்டம் அவசியமற் றது என்று தெரிவித்தார்.

**ஜமாதே உலமா ஹிந்த் கண்டனம் :**

இந்த பொது சிவில்சட்டத் திற்கு ஜமாதே உலமா ஹிந்த் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உத்தரகாண்ட் மாநில பாரதீய ஜனதா அரசு, பொது சிவில் சட்டம்கொண்டுவந்திருப்பதற்கு இந்தியாவின் முக்கிய முஸ்லிம் அமைப்புகளில் ஒன்றான ஜமாதே உலமா ஹிந்த் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து கூறி யுள்ள அந்தஅமைப்பின்தலைவர் அர்ஷாத் மதனீ, உத்தரகாண்ட் பாரதீய ஜனதா அரசின் நட வடிக்கையை ஜமாஅத் கடுமை யாக தொடர்ந்து எதிர்க்கும் என குறிப்பிட்டுள்ளார். உத்தர காண்ட் அரசின் இந்த முயற்சி நாட்டு மக்களின் மத மற்றும் கலாச்சார சுதந்திரத்தில் தலை யிடுவதாகஉள்ளதுஎன்றும்அவர் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் இது முஸ்லிம்களுக்கு எதிராக பராபட்சமான முயற்சி என்றும் மதனீ கூறியுள்ளார். உத்தர காண்ட் அரசு கொண்டுவந்துள்ள பொது சிவில் சட்ட மசோதா வில் பழங்குடியின மக்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டியுள்ள ஜமாஅத் தலைவர், அரசியலமைப்பு சட்டம் 21-ன்படி, அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சூழ்நிலையில் முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையின மக்களின் உரிமைகள் ஏன் பறிக்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். பொது சிவில் சட்டம் கொண்டு வந்தால் ஏன் மத ரீதியாக பாகு பாடு காட்ட வேண்டும் என்று வினா எழுப்பியுள்ள அர்ஷாத் மதனீ, உத்தரகாண்ட் அரசு தாக்கல் செய்த மசோதாவை முழுமையாகப் படித்து ஆய்வு செய்தபிறகு அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும், நீதி மன்றத்தை நாடுவது தொடர் பாகவும் முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

செய்தி :
**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

தொலைபேசி : 04554-275289 ஈத் முபாரக்! செல் : 94861 49928

# முஹம்மதிய்யா எத்தீம்கானா

## அனாதை இல்லம்

**16B/11, கம்பம் மெட்டு ரோடு, கம்பம்-625 516.**
தேனி மாவட்டம்.

## அன்பான வேண்டுகோள்!

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.....!

மர்ஹூம் அல்ஹாஜ் **C.A.முஹம்மது இப்ராஹீம்** (ரஹ்) M.A.,B.L., (அட்வகேட், சென்னை) அவர்களால் **முஹம்மதிய்யா எத்தீம்கானா** நிறுவப்பட்டு இறையருளால் **48** ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இங்கு அனாதை ஏழை மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம், ஆடைகள், பள்ளிக் கட்டணம் மற்றும் எல்லா செலவுகளையும் நிர்வாகம் செய்து வருகிறது.

மேற்படி செலவுகளுக்கு உங்களுடைய ஜகாத், ஸதகாகளை கொடுத்து உதவி ஏழை அனாதை மாணவர்களை ஆதரித்து அல்லாஹ்விடம் சிறப்பான நற்கூலியை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

DD அல்லது செக் **"MUHAMMADIYA ORPHANAGE"** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

**வங்கி மூலம் செலுத்தும் விபரம் :**

**INDIAN OVERSEAS BANK**
**Cumbum Branch**
A/c No. **017601000003546**
IFSC : **IOBA 0000176**

இப்படிக்கு,
**M.முஹம்மத் ஹாலித்**
செயலாளர் :
**முஹம்மதிய்யா எத்தீம்கானா,** கம்பம்.

**குறிப்பு : எத்தீம்கானாவிற்கு வசூல் செய்ய எவரையும் நியமிக்கவில்லை.**

# நுகர்ந்தவை

**நூல் : பிறைக்கொடியில் மின்னும் நட்சத்திரங்கள்**

**ஆசிரியர் :** "எழுத்துச் சிற்பி" கவிஞர் அல்ஹாஜ் **வி.எஸ்.முஹம்மது பஸ்லுல்லாஹ்**

**பக்கங்கள்: 74; விலை :** ரூ.**100/-**

**கிடைக்குமிடம் :** கவிஞர் **வி.எஸ்.முஹம்மது பஸ்லுல்லாஹ்,** 7, பாத்திமா மன்ஜில், முதல்மாடி, ஜானி பூந்தோட்டம் மெயின் ரோடு, R.N.பாளையம், வேலூர்–632001.
அலைபேசி : 8678948131

"மணிச்சுடர்" நாளிதழில் கவிஞர் வி.எஸ்.முஹம்மது பஸ்லுல்லாஹ் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தாய்ச்சபையாம் முஸ்லிம் லீக்கிற்காக உழைத்த 25 இயக்கப் போராளிகள் இந்நூலில் போற்றப்படுகிறார்கள். பதினொன்று மூத்த மார்க்க அறிஞர்களைப் பற்றியும் இந் நூலில்கூறப்பட்டுள்ளது. புனித மக்காவில் ஜமா அத்துல் உலமா மாநாட்டை நடத்திய ஒரே தலைவரைப் பற்றிய விசித்திரமான விஷயங்கள்விளக்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா கலந்து கொண்ட மீலாது விழாவில் அவரின் பாராட்டைப் பெற்ற "தளபதி" என்ற புனைப்பெயரை உடைய ஆலிமைப்பற்றி புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவராகப்பணிபுரிந்த கேரளாவைச் சார்ந்த சரித்திர நாயகரின் சாதனைகள் சொல்லப்பட்டுள்ளன.

நாம் இதுவரை அறியாத பல் வேறு செய்திகளை இந்நூல்மூலம் அறிய முடிகிறது. இது போன்று சமுதாயத்திற்கு நலம் பயக்கும் ஆக்கங்களை தொடர்ந்துகவிஞர் வி.எஸ்.முஹம்மது பஸ்லுல்லாஹ் தரவேண்டும். இந்நூலைபடித்துப் பாருங்கள். சமுதாய நட்சத்திரங்களை தெரிந்து கொள்வீர்கள்.

* * * * * *

**நூல் : இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ ம(வே)தங்களில் சுவனம் – நரகம்**

**ஆசிரியர் :** மவ்லவீ **எம்.முஹம்மது அப்துல்லாஹ்** மன்பஈ

**பக்கங்கள்: 48; விலை :** ரூ.**40/-**

**வெளியீடு : மின்னல் பதிப்பகம்,** எண்.1, 2வது தளம், காமாட்சிபுரம், மதுரை – 625009.
அலைபேசி : 7373510786

உலகிலுள்ள முக்கிய மூன்று மதங்களான இஸ்லாம் இந்து, கிறிஸ்தவம் ஆகியவற்றின்வேதங்களில் சுவனமும், நரகமும் படைக்கப்பட்டிருப்பதைப் பற்றி சொல்லும் செய்திகள் இந்நூலில் திறந்து காட்டப்பட்டுள்ளன. இஸ்லாம்கூறும்சுவர்க்கஇன்பங்களையும், அதில் கிடைக்கவிருக்கும் இறை தரிசனத்தையும் இறுதியாகக் கூறி முடித்திருக்கும் முத்தாய்ப்பான நூல் இது.

ஆய்வு : **பாவா**

# வெற்றி பெற
# திருகுர்ஆனை ஓதுவோம்!

அல்லாஹ்வின் அருள்மறையாம் திருகுர்ஆன் இறங்க ஆரம்பித்த மாதமே புனித ரமளான் மாதம் தான்; எனவே, திருகுர்ஆனைப் பற்றிய அருமை பெருமைகளை உணர்வோம்; அதனுடன் நாமும் ஒன்றித்துப் போக முயல்வோம்! படியுங்கள் - திருகுர்ஆனைப் பற்றிய அற்புத வரலாற்றினை.

இந்த திருகுர்ஆன், இதனை முஸ்லிம் உலகம் அன்றும் நேசித்தது; இன்றும் நேசிக்கிறது; உலக முடிவு வரை நேசித்துக் கொண்டே இருக்கப் போகிறது.

திருகுர்ஆனை முஸ்லிம் உலகம் நேசித்ததைப் போல, உலகில் எந்த நூலையும் எந்தச் சமுதாயமும் நேசிக்கவில்லை. இன்று உலகில் மருத்துவ இயல், விஞ்ஞானயியல், தத்துவ இயல், அரசு இயல், சட்ட இயல் என்று கூறிக் கொள்ளும் எத்தனையோ இயல்களைப் பற்றி விளக்கம் கூறும் பல்லாயிரக் கணக்கான நூல்கள் நடமாடிக் கொண்டே இருக்கின்றன. ஆனால், இத்தனை இயல்நூல்களில் ஒன்றையேனும் யாரும் மனப்பாடம் செய்து வைத்துள்ளார்களா? என்றால், 'இல்லை' என்று திடமாகக் கூறலாம்.

ஆனால், இந்த திருகுர்ஆன் இன்று ஏட்டில் மட்டுமில்லை; இலட்சோப இலட்ச முஸ்லிம்களின் நெஞ்சங்களிலும் அது வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகிலுள்ள அத்தனை திருகுர்ஆன்பிரதிகளையும் ஒரு சிலர் கூடிச் சபதமெடுத்து அழித்து விட்டாலும் கூட அதனை மனனம் செய்து வைத்துள்ள ஒரு சிலர் கூடி, ஒரு சில மணிநேரத்திற்குள் அதனை மீண்டும் உயிர்ப்பித்துக் கொண்டு வந்து விட முடியும்!

இது, இக்காலச் சூழ்நிலை! அக்காலச் சூழ்நிலை - அதாவது இஸ்லாத்தின் ஆரம்ப நிலை - அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தைச் சங்க நாதம் செய்த ஆரம்ப நிலை - திருகுர்ஆன் சிறுக சிறுக அருளப்பட்டு வந்த அக்கால நிலை! இதனைத் தான் நாம் ஆராய வேண்டும்; சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

## கவிதைகள் பாடிய வாய்கள் திருகுர்ஆனை ஓத ஆரம்பித்தன!

சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன் அந்த அரபிகள், கல்வி-கேள்விகளில் தலைசிறந்து விளங்கி வந்தனர். கவி புனைவதில் கை தேர்ந்தவர்களாய் இருந்து வந்தனர். ஒருவரை ஆபாசமாகத் திட்டித் தீர்க்கக் கூட தத்தம் கவிதை திறமையைக் காட்டி வந்தனர்.

அத்தகைய ஒரு சூழலிலே தான் இந்தத் திரு குர்ஆனை, அண்ணலாரின் திருவாய் வழியாக அல்லாஹ் அருள ஆரம்பித்தான். இறைமறை அல்லவா? ஆரம்பத்தில் அந்த அரபிகள், அதன் வசீகரத்தை, காந்த சக்தியைக் கண்டு திகைத்தனர்; பிறகு அதனோடு தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டனர்.

கவிதைகள் பாடி வந்த அவர்களின் வாய்கள், திருகுர் ஆனை இனிமை சொட்ட ஓத ஆரம்பித்தன. பெரும் பெரும் கவிஞர்களெல்லாம் தம் கவித் திறனை அறவே மறந்து, திரு குர்ஆனையே தமது வாழ்வாக மாற்றி ஒன்றிப் போயினர்.

திரு மதீனா நகரிலிருந்த மஸ்ஜிதே நபவி பள்ளிவாயில், உண்மையிலேயே ஒரு கலைக் கூடமாகவே மாறிவிட்டிருந்தது. ஒரு பக்கம் திருகுர்ஆனை ஒரு கூட்டம் ஓதக் கற்றுக் கொண் டிருந்ததென்றால், இன்னொரு பக்கம் அதனை மனப்பாடம் செய்து கொண்டிருந்தது ஒரு கூட்டம்! மற்றொரு பக்கம் ஒரு கூட்டம் அமர்ந்து அதனை ஆய்வு செய்து கொண்டிருந்தது! அதிலுள்ள அறவுரைகளை பரிசீலித்துக் கொண்டிருந்தது மற்றொரு கூட்டம்! அதிலுள்ள சட்ட நுணுக்கங்களை பார்வை யிட்டுக் கொண்டிருந்தது ஒரு கூட்டம்! இப்படிப் பல கூட்டங் கள்! அத்தோடு அங்கு அல்லாஹ்வை வணங்கிக் கொண்டே இருப்பதற்கும் ஒரு கூட்டம் இயங்கிக் கொண்டே இருந்தது!

## மஸ்ஜிதே நபவியில் தோன்றிய இருவகை கூட்டங்கள்!

ஒரு சந்தர்ப்பத்தில் மஸ்ஜிதே நபவி பள்ளியில் கூட்டம் இரு வகையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது!

ஒரு கூட்டம் வணக்கத் திலும், அல்லாஹ்வின் திரு நாமத்தை ஜபிப்பதிலும் ஈடு பட்டிருந்தது; மற்றொரு கூட்டம் கல்வி - கேள்வி களிலும், மார்க்க விளக்கங்களிலும் ஈடுபட்டி ருந்தது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தமது அறையை

ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

# வாய் மணக்க
# தாம்பூலம் சிறக்க...!

NIZAM DARBAR

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

விட்டு வெளிப்படுகிறார்கள். இரு கூட்டத்தாரின் பார்வையும் அண்ணலார் மீது விழுகின்றது. "எந்த கூட்டத்தை மதித்து அண்ணலார் நெருங்குவார்கள்" என்பது இரு கூட்டத்தாரின் ஏக்கம்!

அண்ணலாரின் கருணை மிக்க பார்வை, கல்வி - கேள்வி, மார்க்க விளக்கங்களில் ஈடுபட்டிருந்த கூட்டத்தார் பக்கம் அதிகம் விழுகிறது. அக்கூட்டத்தாருள் ஒருவராக அண்ணலார் அமர்ந்து கொள்கிறார்கள். கல்வி ஞானத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் என்பது அண்ணலாரின் ஜாடை!

"அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா" - திண்ணைத் தோழர்கள் என்றொரு கூட்டம்! மஸ்ஜிதே நபவியை ஒட்டி ஒரு திண்ணை! அதில், என்றுமே சுமார், 60-70 பேர் அமர்ந்து கொண்டே இருப்பார்கள். அவர்களிலே பெரும்பாலோர் ஏழைகள்! திருகுர்ஆன், நபி மொழிகளை எழுதுவதும், மனப்பாடம் செய்வதுமே அவர்களது வேலை! ஒரு சிலர் கொண்டு வந்து தரும் சில பேரீத்தங்கனிகளின் கொத்துகளே அவர்களுக்குரிய ஆகாரம்! உலக ஆசாபாசங்களை அடியோடு அறுத்தெறிந்து விட்ட அந்த திண்ணைத் தோழர்கள் திருகுர்ஆன் வசனங்களை சேகரிப்பதிலேயே தமது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

திருகுர்ஆன் அருளப்பட்டு வந்த ஆரம்ப நிலை, அண்ணலாரின் தோழர்கள் வாழ்வில் ஒரு புதிய திருப்பம் கண்ட நிலை! இக்கால கட்டத்திலேயே நடந்த அற்புதமான சம்பவங்கள் சிலவற்றை இங்கு நுணுகிப் பார்ப்போம்!

## திருகுர்ஆனோடு ஒன்றிப் போன நாயகத் தோழர்கள்!

அண்ணலாரின் தோழர்கள் ஒவ்வொருவரும் திருகுர்ஆனோடு ஒன்றித்துப் போயிருந்தார்கள்; தினசரியும் அதன் ஒரு பகுதியை ஓதாது யாரும் இருக்க மாட்டார்கள். எல்லோரது தாய்மொழியும் அரபியாகவே இருந்ததால், அதன் வசனங்களை விளங்கிக் கொள்வதில் அவர்களுக்கு சிரமம் எதுவும் ஏற்படவில்லை. அவற்றின் உட்பொருள்களை விளங்கிக் கொள்வதிலே தான் அவர்கள் சிரத்தை காட்டி வந்தார்கள்.

ஒரு சிலர், தங்கள் சக்திக்கு இயன்றளவு மனப்பாடம் செய்து வந்தார்கள்; ஒரு சிலர், அருளப்பட்ட அத்தனைவசனங்களையும் ஒரே மூச்சில் ஓதிட ஆர்வம் காட்டி வந்தார்கள். இப்படி ஒரே மூச்சில் ஓதி

முடிப்பதை அண்ணலார் தடுத்து, "குறைந்தளவு ஏழு நாட்களையாவது அதனை ஓதிமுடிக்களடுத்துக்கொள்ளுங்கள்" என்று பணித்தார்கள்.

திருகுர்ஆனை அண்ணலாரின் தோழர்கள் தனித் தனியாகவும், சில சந்தர்ப்பங்களில் கூட்டாகவும் அமர்ந்து ஓதுவார்கள். ஒரு தடவை, இப்படிக் கூட்டாக அமர்ந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். அக் கூட்டத்தாரில் அரபிகள், அரபி அல்லாத 'அஜமி'கள், கிராமவாசிகளும் இருந்தனர். அச்சமயம் அங்கு வந்த அண்ணலார், அவர்களைப் பார்த்து மிகவும் ஆனந்தப்பட்டு, "ஓதிக் கெண்டே இருங்கள்! உங்களது ஓதுதல்மிக அழகாக இருக்கிறது" என்று கூறிவிட்டுப் பிறகு கூறினார்கள்:

"காலம் ஒன்று வரும்; ஒரு கூட்டத்தினர் பிறப்பார்கள்; அவர்கள் திருகுர்ஆனை அம்பு வேகத்தில் [அவ்வளவு வேகமாக] ஓதுவார்கள்; அதில், அவர்களது நோக்கம் மறுமையாக இருக்காது! உலக ஆதாயத்திற்காகவே இருக்கும்".

மற்றொரு நபி மொழியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

"அவர்கள் திருகுர்ஆனை ஓதுவார்கள்; ஆனால், அது அவர்களது தொண்டையை விட்டுக் கீழிறங்காது!"

இதன் கருத்து என்னவென்றால், திருகுர்ஆனை அவர்கள் ஓதுவார்கள்; ஆனால், அதிலுள்ள போதனைகளின்படி செயல்பட மாட்டார்கள். அதன் கருத்துக்களை உணர மாட்டார்கள் என்பதாகும்.

## திருகுர்ஆனை சிவப்பர்களும் ஓதினர்; கறுப்பர்களும் ஓதினர்!

ஒரு தடவை நாயகத் தோழர்கள் சிலர், திருகுர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் அங்கு வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர்களை பார்த்துக் கூறினார்கள்:

"எல்லாம் வல்ல அந்த அல்லாஹ்வுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்; திருகுர்ஆன் ஒன்று தான்! ஆனால், அதனை ஓதும் உங்களில் சிவப்பரும் இருக்கிறீர்கள்; வெள்ளையரும் இருக்கிறீர்கள்; கறுப்பர்களும் இருக்கிறீர்கள்".

நாயகத் தோழர்கள் திருகுர்ஆனை இனிமையாக ஓதுவதில் வல்லவர்களாக இருந்தார்கள். ஒருவர் ஓத, மற்றவர் கேட்கும் பழக்கம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஒரு சமயம் ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள், வெகு நேரம் கழித்து வீடு திரும்பினார்கள். தாமதத்திற்குரிய காரணம் கேட்டார்கள் அண்ணலார் அவர்கள்!

"வரும் வழியில் உங்கள் தோழர், யாரோ ஒருவர் திரு குர்ஆனை வெகு இனிமையான குரலில் ஓதிக் கொண்டிருந்தார்; அதனை கேட்டுக் கொண்டே இருந்து விட்டதில் தாமதமாகி விட்டது" என்று காரணம் கூறி னார்கள். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது தோழர்களில் இனிமையாகத் திருகுர்ஆனை ஓதக் கூடியவர் களை ஓதச் சொல்லி, அதனைக் கேட்டு மகிழ்வார்கள்.

## நெஞ்சங்களிலே வாழ்ந்த திருகுர்ஆன், ஏடுகளிலே வந்த காரணம்?

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத் திலேயே திருகுர்ஆனை ஏடு களில் பதியும் பழக்கம் இருந் தது என்றாலும், அக்காலத்து மக்கள் பலர், திருகுர்ஆனை மனனம் செய்து கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார் கள். அரபு மக்களுக்கு ஞாபக சக்தி அதிகம் இருந்து வந்த தால், திருகுர்ஆனை மனனம் செய்துகொள்வது அவர்களுக்கு மிகவும் எளிதாக இருந்தது.

ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்களது ஆட்சி காலத்தில் நடந்த 'யமாமா'யுத்தத்தில், சுமார் 700 ஹாபிழ்கள் (திரு குர்ஆனை மனனம் செய்தவர் கள்) ஷஹீதாகி விட்டார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு தான் திருகுர்ஆனை ஏடுகளில் பதிந்து கொள்வதில் முஸ்லிம் களுக்கு அதிக அக்கறை ஏற் பட்டது.

திருகுர்ஆனை முழுமை யாக மனனம் செய்வதிலும், இஸ்லாமிய ஞானம் பெறுவ திலும், ஷரீஅத் சட்ட திட்டங் களை அறிந்து வைப்பதிலும் நான்கு கலீபாக்களைத் தவிர, மேற்கொண்டும் பலர் இருந் தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாக பின் காணும் பெரியோர்கள் இருந்தனர்.

ஹஜ்ரத்களான அப்துல் லாஹ் இப்னு மஸ்ஊத், உபாதா இப்னு ஸாமித், உபை இப்னு கஅப், மஆத் இப்னுஜபல், ஜைது இப்னு ஸாபித், அபூ ஜைத் ஸாலிம், தல்ஹா, ஸஅத் இப்னு அபீவக்காஸ், ஹுதைபா இப்னு அல் யமான், அபூ ஹுரைரா, மஜ்ம இப்னு ஹாரித், புழாலா இப்னு மஜீத், அபூ மூஸா அஷ்அரி, அம்ரு இப்னுல் ஆஸ், ஸஅத் இப்னு உபாதா, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அபூ அய்யூப் அன்ஸாரி, அப்துல்லாஹ் இப்னு துந்நஜாதீன், உபைது இப்னு முஆவியா, ஸல்மா இப்னு முகல்லித் இப்னுஸ் ஸாமத், ஸஅது இப்னு உபைத், இப்னு லுஃமான் அன்ஸாரி, அப்துல்லாஹ் இப்னுஸ் ஸாயிப், ஸுலைமான்இப்னு அபீ ஹஷ்மா, தமீ முத்தாரி, மஆத்

ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**94433 46313, 98650 48082** Email : kottakkalayurvedapdkt@gmail.com

---

ஈத் முபாரக்!

*A.Saleem*
*S.Mohammed Kassim*

93632 20624
99943 23977
99767 78597



# Rahmaan Builders

## Property Developers

45D, Ramasamy Pillai Street, Maruthamalai Main Road,
Vadavalli (P.o.), Coimbatore - 41.






இப்னுல் ஹாரிஸ், அபூ ரவாதா, உக்பா இப்னு ஆமிருல் ஜுஹ்னி, அப்துல்லாஹ் இப்னு உமரிப்னுல் கத்தாப், ஸஅத் இப்னு முன்ஜிஜ் இப்னு அவுஸ், கைஸ் இப்னு ஸஅஸஆ, அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ், அபூஹலீமா மஆத் ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்.

இந்த ஆண்களை தவிர, பெண்களிலும் பலர் இத்தகுதி பெற்றிருந்தனர்; அவர்களில் முக்கியமானவர்கள் பின்வருமாறு:

ஹள்ரத் ஆயிஷா (ரளி), ஹள்ரத் ஹப்ஸா (ரளி), ஹள்ரத் உம்மு ஸல்மா (ரளி), ஹள்ரத் உம்மு வர்கஅ (ரளி), ஹள்ரத் உம்மு நவ்ஃபல் (ரளி)

திருகுர்ஆனை முழுமையாக மனனம் செய்யவில்லையென்றாலும், ஓரளவு பூர்த்தியாக மனனம் செய்தவர்களின் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கில் இருந்தது. இதில், சிலர் பிரபலமான நாயகத் தோழர்களாகவும் இருந்துள்ளனர்.

## திருகுர்ஆனை நுணுக்கமாக அறிய, மூன்று வகையாகப் பிரிந்த நாயகத் தோழர்கள்!

திருகுர்ஆன்வசனங்களைப் பற்றி நுணுக்கமாக அறிந்து கொள்வதிலும், அவற்றின் அடிப்படைக் கருத்துக்களை துல்லியமாக தெரிந்து கொள்வதிலும், நாயகத் தோழர்கள் மூன்று வகையாகச் செயல்பட்டு வந்தனர்.

முதல் வகை: அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமே நேரடியாகக் கேட்டு சந்தேக நிவர்த்தி செய்து கொள்வது.

இரண்டாம் வகை: நாயகத் தோழர்களே தங்களுக்குள் விவாதித்துக் கொண்டு கருத்தை கண்டுபிடிப்பது.

மூன்றாம் வகை: தாங்களாகவே நன்றாக ஆராய்ந்து, பரிசீலித்துப் பார்த்து பொருள்களை தேர்ந்தெடுத்துக் கொள்வது.

அண்ணலாரிடமே கேட்டு விளக்கம் பெற்றதற்குரிய பல ஆதாரங்கள் இருக்கின்றன. சில வசனங்களுக்குரிய விளக்கத்தை அண்ணலாரே கூறி விடுவார்கள்; சிலவற்றிற்கு ‘வஹீ’ மூலம் அறிந்த பின் விளக்கம் தருவார்கள்.

அத்தியாயம் இரண்டு, வசனம் - 187-இல், அல்லாஹ் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதற்காக உண்ணும்

**குர்ஆனின் குரலுக்கு உங்கள் சந்தாவை செலுத்தி விட்டீர்களா?**

'ஸஹர்' நேரத்தைப் பற்றி குறிப்பிடுகையில், 'கறுப்பு' 'வெள்ளை' என்ற பதங்களை குறிப்பிட்டு, இவை விடியற்காலை நேரத்தில் தெளிவாகத் தெரியும் வரை புசியுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளான். இதனை ஆரம்பத்தில் புரிந்து கொள்ள முடியாத நாயகத் தோழர்கள், கறுப்பு நூலையும், வெள்ளை நூலையும் வைத்துக் கொண்டு, 'அவற்றின் நிறங்கள் தெளிவாகத் தெரியும் வரையில்' என்று பொருள் கொண்டிருந்தார்கள். பிறகு இவர்கள் மறுதினம் காலையில் நாயகம் (ஸல்) அவர்களிடம் இது பற்றிக் கூறினார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், 'கறுப்பு - வெள்ளை' என்பது இரவின் கறுப்பும், பகலின் வெண்மையும் என்பதாகும்' என்று விளக்கமளித்தார்கள்.

திருகுர்ஆனை அலங்காரப் பெட்டிகளில் வைத்து அழகு பார்க்கும் அன்புத் தோழர்களே! தயவு செய்து காலை, மாலை அதனைத் திறந்து ஓதுங்கள்! பொருளை உணருங்கள்! செயல்பட விரையுங்கள்! அல்லாஹ் அவற்றிற்காகவே அதனை நமக்கு அருளினானே தவிர, அழகு பார்ப்பதற்கோ, கண்களில் ஒற்றிக் கொள்வதற்கோ அல்ல. ஓதுவோம்; ஈருலக வாழ்விலும் வெற்றி பெறுவோம்.


ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

**N.S. ஸ்டீல் ஹவுஸ்**



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.

செல் : 9944001362

# வரலாற்றில் ஓர் ஏடு

“[நபியே!] தங்கள் இறைவனின் திருப்தியை நாடி காலையிலும், மாலையிலும் அவனை அழைப்பவர்களுடன் நீர் [அமர்ந்து] பொறுமை காப்பீராக! அவர்களை விட்டும் உன் இரு கண்களைத் திருப்பி விடாதீர்”

- அல்குர்ஆன் (18 : 28)

“நபி (ஸல்) அவர்கள், எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவு கூர்பவர்களாகவே இருந்தார்கள்” என்று அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் 373)

நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடன் மக்களும் இருந்தனர். அப்போது மூன்று நபர்கள் வந்தனர். நபி (ஸல்) அவர்களை நோக்கி இருவர் வந்தனர். ஒருவர் போய் விட்டார். நபி (ஸல்) அவர்களிடம் அவர்கள் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சபையின் இடைவெளியைக் கண்டார். அதில் உட்கார்ந்தார். மற்றொருவர் அவர்களுக்குப் பின்னே அமர்ந்து கொண்டார்.

நபி (ஸல்) அவர்கள் உரையை முடித்தபோது, “மூன்று பேரைப் பற்றி உங்களுக்குக் கூறட்டுமா? அவர்களில் ஒருவர், அல்லாஹ்வை நெருங்கினார். அவரை அல்லாஹ் நெருங்கினான். மற்றொருவரோ வெட்கப்பட்டார். அவரிடம் அல்லாஹ் வெட்கப்பட்டுக் கொண்டான். மற்றொருவரோ புறக்கணித்துச் சென்றார். அவரை அல்லாஹ்வும் புறக்கணித்து விட்டான்” என்று கூறினார்கள்.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் 1449, புகாரி 66

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# லைலத்துல் கத்ர் விதி எழுதும் இரவு!

"திருகுர்ஆனை நாம் லைலத்துல் கத்ர் இரவில் இறக்கி வைத்தோம்".

- அல்குர்ஆன் (97 : 1)

"இத்திருகுர்ஆனை பாக்கியம் பெற்ற இரவில் இறக்கி வைத்தோம். எச்சரிப்பவர்களாயிருந்தோம். அவ்விரவில்தான் எல்லா காரியங்களும் தெளிவு செய்து பிரித்தெழுதப்படுகின்றன".

- அல்குர்ஆன் (44 : 34)

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"பின்வரும் நான்கு விஷயங்களை எந்த அடியான் நம்பவில்லையோ அவர் முஃமின் அல்ல; "லா இலாஹ இல்லல்லாஹு" என்றும், நான் உண்மையாக அல்லாஹ்வின் தூதராக உள்ளேன் என்றும் சாட்சி பகர வேண்டும். மரணத்திற்கு பின் எழுப்புதல் உண்டு என்றும், களா கத்ரு விதியின்படி அனைத்தும் நடக்கின்றன என்றும் ஈமான் கொள்ள வேண்டும். நூல் : மிஷ்காத்

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"ஒரு மலை இங்கிருந்து அங்கு நகர்ந்து சென்றுவிட்டது" என்று நீங்கள் கூறக் கேள்விப்பட்டால் அது உண்மையாக இருக்கலாம் என நம்புங்கள். ஆனால், 'ஒருவரின் குணம் இப்படி மாறி விட்டதே' என கூறக் கேட்டால் நம்பாதீர்கள். அவன் விதியில் எழுதப்பட்டதின் பால் சென்று கொண்டிருக்கிறான்".

நூல் : மிஷ்காத்

"விதியை மதி வெல்லுமா? மதி விதியை வெல்லுமா? என்ற சர்ச்சையில் நாம் இறங்கவில்லை. தன் விதியில் என்ன எழுதப்பட்டுள்ளது? என்பதை அறிய முடியாத இம்மனித குலம் நல்லதே செய்து, நல்லதே நாடி நல்லவனாக முயற்சிக்க வேண்டும். அவனே மதியுள்ளவன் என்பதை இங்கே நாம் சுட்டிக் காட்டுகிறோம். இறைவன் விரும்புவதும் இதுவே.

## விதியின் பிடியில் மனிதன்

"கர்ப்பப் பையில் என்ன குழந்தை இருக்கிறது? என்று கண்டறியும் கணினிப் பொறி

காலம் இது" என விஞ்ஞான அறிவியல் மார்தட்டிக் கொண்டாலும், அக்குழந்தையின் பிறப்பு விதி என்ன? நரம்பு மற்றும் எலும்பு சதை மண்டலங்களின் நிலை என்ன? ஊமையா, வாய் பேசுமா, கூனா, குருடா, பைத்தியமா, புத்திசாலியா? வாழ்வு எப்படி அமையும்? உணவின் அளவென்ன? செயலென்ன? என்பனவற்றை எவராலும், எந்த கணிப்பொறியாலும் கண்டறிய முடியாது. இது படைத்து இரட்சிக்கும் அல்லாஹ்வுக்கு மட்டும் தெரிந்த இரகசியம். இறைவன் கூறுகிறான்;

"கர்ப்பம் தரிக்கும் ஒவ்வொரு பெண்ணும் எதை சுமந்து கொண்டிருக்கிறாள் என்பதை அல்லாஹ்தான் அறிகிறான். மேலும் கர்ப்பப்பைகள் எவற்றை குறை மாதமாக வெளியில் தள்ளுகின்றன. நிறை மாதமாக அதிக காலம் தங்க வைத்து வெளியாக்குகின்றன என்பதையும் அறிகிறான். எல்லா பொருட்களும் அவனிடத்தில் விதி எனும் அளவீட்டில் இருக்கின்றன".

- அல்குர்ஆன் (13 : 8)

## லவ்ஹுல் மஹ்ஃபூழ்

மனிதனின் கணிப்புப்படி எதுவும் நடப்பதில்லை. அவ்வாறு நடந்திருக்குமானால் மனித சமுதாயமே வேரறுந்திருக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனி வழி - "விதியை" அமைத்து ஒருவருக்கொருவர் தேவையுடையவராக்கி தன் திட்டப்படி மனித இனத்தை விரித்துக் கொண்டிருக்கிறான் இறைவன். படைப்புகளை படைப்பதற்கு முன், காலமே இல்லாத காலத்தில் படைக்கப்போகும் படைப்புகளுக்கு விதிகளையும், அளவீடுகளையும் தனது லவ்ஹுல் மஹ்ஃபூழில் ஏற்றி வைத்திவிட்டான். அவ்வப்போது - வுஜுது பெற்று வெளிவரும் படைப்புகளில் இறைவழி நடந்தவர்கள் சொர்க்கம் செல்கின்றனர். சோடை போனவர்கள் - மாட்டுத் தீவனம் போல் நரகத்திற்கு தீனியாகின்றனர்.

இறைவன் கூறுகிறான் :

"அவனிடமே மறைவானவற்றின் சாவிகள் இருக்கின்றன. அவற்றை அவனே அறிவான். மேலும் தரையிலும், கடலிலும் உள்ளவற்றையும் அறிகிறான். ஓர் இலை உதிர்வது கூட அவன் அறியாமல் விழுவதில்லை. புவியின் அடர்ந்த இருட்டில் புதைந்து கிடக்கும் வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் அவனது

# இறையில்லம் விசாலமடைய உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகர், 1வது தெரு, கதவு எண்.1, முகப்பேர் கப்ருஸ்தான் பின்புறம் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் & மதரஸா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதிகளிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்கு முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஸ்கூல் படிப்புடன் ஹிஃப்ழு மதரஸாவில் ஓதக் கூடியவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லை. இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் ரூபாய் 36 இலட்சத்தில் விலைக்கு வந்திருக் கிறது. நல்லுள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்யுங்கள். ஸதக்கத்துல் ஜாரியாவின் வகையில் நாம் மரணித்த பிறகும் நன்மை வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது ஆமிரி : 9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
G-pay No. : **9444273674**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289**
SWIFT Code : **KVBLINBBIND**

தெளிவான புத்தகத்தில் இல்லாமலில்லை".

- அல்குர்ஆன் (7 : 59)

## விதி மாறுமா?

"படைப்புக்கள் படைக்கப்படுவதற்கு முன்பே அதன் விதிகள் எழுதப்பட்டுவிட்டன எனும் போது, ஆண்டிற்கொரு முறை வரும் லைலத்துல் கத்ரு இரவில் விதிகளை இறைவன் நிர்ணயிக்கிறான்" என்று கூறுவது முன்னுக்கு பின் முரணல்லவா? என்று நீங்கள் வினவலாம்.

இறைவன் கூறுகிறான் :

**"ஒவ்வொரு தவணைக்கும் பதிவு, விதி - ஏடு உண்டு. அவன் நாடியதை அழிக்கிறான். அவன் நாடியதை நிலைப்படுத்தி விடுகிறான். மூலப் பதிவேடும் அவனிடமே உள்ளது".**

- அல்குர்ஆன் (13 : 38, 39)

அல்லாமா இப்னு கதீர் (ரஹ்) தமது தஃப்ஸீரில் கூறுகிறார்கள்: "இவ்வசனத்தின் விளக்கமாக பல உரைகள் வந்துள்ளன. விதிகளை அல்லாஹ் நினைத்தபடி மாற்றி புதிதாகவும் எழுதுகிறான். ஏற்கனவே நிர்ணயமானதை அவ்வாறே நிலைப்படுத்தவும் செய்கிறான். "பெற்றோருக்கு பணி செய்தால் ஆயுள் அதிகரிக்கும். உறவுக்காரர்களுடன் இணங்கி நடந்தால் உணவு விசாலமாகும். பாவம் செய்தால் வறுமை உண்டாகும். விதியை துஆ மாற்றி விடும்" என்ற ஹதீஸ்கள் இதற்கு சான்றாக உள்ளன".

- இப்னு கதீர் (449/2)

## விதியிருந்தால் மலடியும் பிள்ளை பெறுவாள்!

ஹள்ரத் நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வயது சுமார் 91. அவர்களின் அருமை மனைவி ஹள்ரத் சாராவுக்கு வயது சுமார் 80. இளம் வயதிலேயே மணம் முடித்த இத்தம்பதிக்கு "குழந்தைப் பேறு இல்லை" என பின் நாளில் வைத்தியர்களால் தீர்மானிக்கப்பட்டவர்கள். இதன் காரணமாகத் தான் ஹள்ரத் சாரா அவர்கள் ஹாஜிராவை தனது கணவருக்கு இரண்டாந் தாரமாக மணம் முடிக்க ஒப்புதல் கொடுத்தார்கள்.

ஒருநாள் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை), ஹள்ரத் மீக்காயீல் (அலை), ஹள்ரத் இஸ்ராயீல் (அலை) ஆகிய மூவரும் மனித உருவில் மாறிவர ஹள்ரத் நபி இப்ராஹீம் (அலை) அவர்களும், ஹள்ரத் சாரா அவர்களும் பறக்கபறக்கவிருந்தளித்தார்கள். வந்தவர்களின் நாட்டம் அவ்வுணவின்பால் செல்லாததைக் கண்டு இருவருமே சற்று அச்சம் கொண்டார்கள், வந்தவர்கள் "அச்சம் கொள்ள வேண்டாம். குழந்தை பாக்கி

யம் பெறப் போகிறீர் என்பது பற்றி நாம் உமக்கு நன்மாராயம் சொல்லத்தான் வந்தோம்" என்றார்கள். இதை செவியுற்ற சாரா அம்மையார் வெட்கத்தால் தலை குனிந்து சிரித்துவிட்டார்கள். "மலடியாகி விட்ட இக்கிழவிக்கா குழந்தை?" என ஆச்சரியப் பட்டுப் போனார்கள்.

இந்நன்மாராயத்தில் பிறந்தவர்தான் பல நபிமார்களின் தோன்றலைத் தாங்கிவந்த ஹள்ரத் நபி இஸ்ஹாக் (அலை) அவர்கள்;

"நோன்பு கால இரவுகளில் நீங்கள் உங்கள் மனைவியருடன் தாம்பத்திய உறவு கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளது... எனவே அவர்களுடன் உறவு கொள்ளுங்கள். உங்களுக்கு விதியில் அல்லாஹ் எழுதி வைத்த [குழந்தை]தை தேடிக் கொள்ளுங்கள்".

– அல்குர்ஆன் (2 : 187)

"லைலத்துல்கத்ரு" இரவை உள்ளடக்கிய ரமளானின் இரவுகளில் வணங்கும் வணக்கங்களுக்கும், செயல்களுக்கும், வேண்டுதல்களுக்கும் விதியை மாற்றி எழுதும் மகத்துவம் உள்ளது" என்பதை இங்கு உணர வேண்டும்.

## லைலத்துல் கத்ரு இரவில் நாம் கேட்க வேண்டியது

அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் :

"ரமளானில் பிந்திய பத்து நாட்கள் துவங்கி விட்டால் நபி [ஸல்] அவர்கள் இரவை ஹயாத்தாக்குவார்கள். தங்கள் குடும்பத்தவர்களை விழிக்கச் செய்வார்கள். மனைவிகளை விட்டும் ஒதுங்கி விடுவார்கள். இறை வணக்கத்திற்காக வரிந்து கட்டிக் கொள்வார்கள். "யா ரசூலல்லாஹ்! நாங்கள் இறைவனிடம் என்ன கேட்பது?" என்று கேட்டேன். "அல்லாஹும்ம இன்னக்க அஃபுவ்வுன் துஹிப்புல் அஃப்வ ஃபஉஃபு அன்னீ" [இறைவா நீயே மன்னிப்பவன் -மன்னிப்பை விரும்புகிறாய் - என்னைப் பொறுத்தருள்]" என்று கேட்கச் சொன்னார்கள்.

– புகாரீ, முஸ்லிம்

"லைலத்துல் கத்ரு" இரவின் பாக்கியத்தை நாம் அனைவரும் பெறுவதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

### ஈதுல் ஃபித்ர் தினத்தின் வணக்கம்

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் தினத்தில் (தொழும் திடலுக்குப்) புறப்பட்டுச் சென்று இரண்டு ரக்அத்கள் (பெருநாள் தொழுகை) தொழுதார்கள். அதற்கு முன்பும் எதையும் தொழவில்லை; அதற்குப் பின்பும் எதையும் தொழவில்லை. அப்போது அவர்களுடன் பிலால் (ரளி) அவர்களும் இருந்தார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி)அவர்கள் (நூல் : ஸஹீஹுல் புகாரி)

# இந்த துஆகளை புனித லைலத்துல் கத்ர் இரவில் அதிகமாக ஓதுங்கள்

اَللّٰهُمَّ اِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ ۔

**அல்லாஹும்ம இன்னக்க அஃபுவ்வுன் துஹிப்புல் அஃப்வஃபஃபு அன்னீ.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
நூல் : அல் அத்கார் (பக்கம் : 553), மிஷ்காத், அஹ்மத், திர்மிதீ, இப்னுமாஜா

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ ۔

**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)கல் அஃப்வ வல் ஆஃபிய(த்)த வல் முஆஃபாதஃபித்தீனி வத் துன்யா வல் ஆகிர(த்)தி.**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَسْتَغْفِرُ اللّٰهَ اَسْأَلُكَ الْجَنَّةَ وَاَعُوْذُ بِكَ مِنَ النَّارِ

**அஷ்ஹது அன்(ல்) லாஇலாஹ இல்லல்லாஹு அஸ்தஃபிருல்லாஹ அஸ்அலு(க்)கல் ஜன்ன(த்)த வ அஊது பி(க்)க மினன் னாரி**

اَللّٰهُمَّ اَجِرْنَا مِنَ النَّارِ يَا مُجِيْرُ يَا مُجِيْرُ يَا مُجِيْرُ ۔

**அல்லாஹும்ம அஜிர்னா மினன் னாரி யா முஜீரு யா முஜீரு யா முஜீர்.**

தொடர்-11

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## கேள்வி ஒன்று... பதில் மூன்று!

ஒரு நாள் மன்னர் ஹாரூன் ரஷீது பாதுஷா அவர்கள், தனது நகரிலுள்ள பெண்கள் அனைவரையும் ஒன்று கூடச் செய்தார். அவர்களை நோக்கி "நான் ஒரேயொரு கேள்வி மட்டும் கேட்பேன். அதற்கு மூன்று வெவ்வேறு பதில்களைக் கூற வேண்டும். ஒருவா கூறிய பதிலை அடுத்தவர் கூறக் கூடாது. இவ்வாய்ப்பு யாரேனும் மூவருக்கு மட்டுமே. சரியான பதில் கூறுவோர்க்கு பொற்காசுகள் வாரி வழங்கப்படும்" என்று அறிவிப்புச் செய்தார்.

பெண்கள் கூட்டம் அரண்மனை அரங்கு நிரம்பி வழிந்தது. மன்னர் கேட்ட கேள்வியாவது :

"ஒரு நாளைக்கு ஃபர்ளுத் தொழுகைகளின் ரக்அத்துகள் எத்தனை?"

ஒரு பெண் எழுந்து "17 ரக்அத்துகள்" என்று பதில் கூறினார்.

"எப்படி?" என்று மன்னர் கேட்டதற்கு அப்பெண், "ஃபஜ்ர் 2 ரக்அத், ளுஹர் 4 ரக்அத், அஸர் 4 ரக்அத், மக்ரிபு 3 ரக்அத், இஷா 4 ரக்அத்... ஆக மொத்தம் 17 ரக்அத்துகள்" என்று கூறினார்.

மன்னர் பொற்காசுகளை அள்ளிக் கொடுத்தார். எண்ணிக் கொடுக்கவில்லை.

அமைதி நிலவியது. சற்று நேரத்திற்கெல்லாம் இரண்டாவதாக ஒரு பெண்மணி எழுந்தார். "ஒரு நாளைக்கு ஃபர்ளுத் தொழுகைகளின் எண்ணிக்கை 15 ரக்அத்துகள்" என்றார்.

மன்னர் உட்பட அனைவரும் ஆச்சரியப்பட்டனர். இதற்கு அப்பெண்மணியிடம் விளக்கம் கேட்டனர்.

அதற்கு அப்பெண்மணி பதில் கூறினார் : "அது ஜும்ஆ தினமாக இருக்க வேண்டும். ஏனெனில், ஜும்ஆவுடைய ஃபர்ளு 2 ரக்அத்துகள்தானே!" அப்பெண்மணிக்கும் மன்னர் பொற்காசுகளை அள்ளிக் கொடுத்தார்.

மீண்டும் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு மூன்றாவதாக ஒரு பெண்மணி எழுந்தார்.

"ஒரு நாளைக்கு ஃபர்ளுத் தொழுகைகளின் எண்ணிக்கை 11 ரக்அத்துகள்" என்றார். மன்னருக்கும், மற்றவர்களுக்கும் மலைப்பு.... வியப்பு!

மன்னர் கேட்டார் : "எப்படி? விளக்கம் தேவை!" என்றார்.

"அது பயண நாளாக (ஸபர்) இருக்கும். ஏனெனில், குறிப்பிட்ட தொலைவுக்கு மேல் பயணம் மேற்கொள்ளுகிறபோது நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்தாக சுருக்கித் தொழுவதற்கு அனுமதியுண்டு. அந்த அடிப்படையில் ஃபஜ்ர் 2 ரக்அத், ளுஹர் 2 ரக்அத், அஸர் 2 ரக்அத், மக்ரிபு 3 ரக்அத், இஷா 2 ரக்அத்" என விளக்கம் தந்தார் அப்பெண்மணி.

மன்னர் மகிழ்ச்சியுடன் பொற்காசுகளை அள்ளி அப்பெண்மணிக்கு வழங்கினார்.

இந்த அளவுக்கு அக்காலப் பெண்மணிகள் மார்க்க அறிவு பெற்று மகத்தானவர்களாக விளங்கினர்.

## கவர்னருக்கு இதைவிட வேறு என்ன வேலை?

மாபெரும் ஸஹாபியான ஹள்ரத் ஸல்மான் ஃபார்சீ (ரளி) அவர்கள் மதாயின் தேச கவர்னராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். பிரஜைகளின் சேம நலனை விசாரித்தறிவதற்காக கடைவீதிகளில் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளைக் காணும் எவரும் அன்னார் ஒரு கூலித் தொழிலாளி போலும் என்றே கருதுவர். அவ்வளவு எளிமையான ஆடைகள்.

மதாயின் நகரில் ஒரு பெரிய திருவிழாச் சந்தை நடந்து கொண்டிருந்தது. வியாபாரிகள் சரக்குகளைக் குவித்துக் கொண்டிருந்தனர். ஒரு வணிகக் கூட்டம் தம்முடைய சரக்குகளைச் சுமப்பதற்காக கூலியாளைத் தேடிக் கொண்டிருந்தது. ஹள்ரத் ஸல்மான் ஃபார்சீ (ரளி) அவர்களைக் கண்டதும் அன்னாரை கூலிக்காரர் எனக் கருதி சாமானைத் தூக்கி வரும்படிக் கூறினர்.

மக்களின் சுமையை மதாயின் மாநில கவர்னர் சுமந்து சென்றார்கள். இந்தக் காட்சியை உள்ளூர்வாசிகள் கண்டு அந்த வணிகக் குழுவினிடம் "நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்? இப்பெரியார் மதாயின் மாநில கவர்னர் ஹள்ரத் ஸல்மான் ஃபார்சீ அல்லவா!" என்றனர். தவறை உணர்ந்த வணிகக் குழுவினர், நடுக்கமுற்றவர்களாக கவர்னர் அவர்களிடம் மன்னிப்புக் கோரினர். கவர்னர் ஹள்ரத் ஸல்மான் ஃபார்சீ (ரளி) அவர்கள் அமைதியாக பதிலளித்தார்கள் –

"இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. நான் உங்கள் சாமான்களை உங்கள் இருப்பிடம் வரை கொண்டு வந்து சேர்க்கிறேன். ஒரு கவர்னருக்கு இதை விட வேறு என்ன வேலை?"

(தொடரும்)

# நமது உடல் ஒரு பேரற்புதம்!

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்தும் நமது வியப்பிற்குரியன. அவனது ஆற்றலையும், வல்லமையையும் பறைசாற்றுவன!

நமது உடல், நாம் நன்கு அறிந்திராத பல அற்புதங்கள் புதைந்துள்ள வலிமைமிக்க படைப்பாகும். நாம் உயிர் வாழ உதவும் பன்முகத் திறன் கொண்டது. உடல் மீது சாட்டப்படும் பல இடையூறுகளை எதிர் கொண்டு நலம் சிந்தும் பல செயல்முறைகள் நிறைந்தது. ஆகவே அதனை சீராக வைத்துக் கொள்வது மனிதனின் கடமை யாகும்.

சில முக்கிய உறுப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

## இதயம்

இதயம், ஒரு நிமிட நேரத்தில் 70 முறை சுருங்கி விரியும். அவசரநிலை ஏற்படும்போது 200 முறை வரை உயரும். ஏனெனில், உடல் திசுக்களுக்குத் தேவையான இரத்தம் வழங்குவது அவசரத் தேவை என்பதே காரணம். ஆகவே பிராணவாயு மற்றும் ஊட்டச்சத்தை உடல் பெற்றுக் கொள்கிறது.

ஒவ்வொரு நிமிடமும் இதயம் 5 லிட்டர் இரத்தத்தை உடலுக்குப் பாய்ச்சுகிறது. இதயத்திலிருந்து, சுத்த இரத்த குழாய்கள் அதை எடுத்துச் செல்கின்றன.

அவசர நிலையில், 50 லிட்டர் இரத்தத்தை, இதயம் உடல் தசை களுக்கு வழங்கி அவை வலிமை பெற உதவும் திறன் பெற்றுள்ளது.

## நுரையீரல்கள்

சுவாசத்தின் மூலம், நுரையீரல்கள் பிராண வாயுவைப் பெற்று உடலுக்கு வழங்கி கரியமில வாயுவை வெளியேற்றுகின்றன.

சாதாரண நிலையில், சில லிட்டர் பிராண வாயுவை, ஒவ்வொரு நிமிடமும் வழங்குகின்றன. ஆனால் அவசர நிலை யின் போது, ஒரு நிமிடத்திற்கு 100 லிட்டர் பிராண வாயுவை உடலுக்கு

வழங்கும் திறன் பெற்றுள்ளன. 2 நுரையீரல்களில் 1½- பகுதி பழுதுபட்டாலும் ½ பகுதி நுரையீரல் உடலுக்கு தேவையான பிராண வாயுவை வழங்கி, உடலைப் பாதுகாக்கும் திறன் பெற்றுள்ளது.

## சிறுநீரகங்கள்

உடலின் திரவ நிலையைப் பாதுகாக்கும் பணியைச் சிறுநீரகங்கள் செய்கின்றன.

தண்ணீர், பால், பழச்சாறு ஆகியன உட்கொள்ளப்படும் போது, சிறுநீரகங்கள் வெளியேற்றும் சிறுநீர், திறட்சியின்றியும், வெளுத்தும் காணப்படும்.

சிறிதளவு திரவம் பருகிய நிலையில், வெயிலில் நடந்து சென்று வரும் போது, சிறுநீர் மிகக் குறைந்தும், நிறம் மங்கலாகவும், திறட்சியாகவும் அமைந்திருக்கும்.

உடலின் உப்பு மற்றும் முக்கிய இரசாயணப் பொருட்கள் ஆகியவற்றை சமநிலையில் வைத்துப் பாதுகாக்கும் பணியை, சிறுநீரகங்கள் மேற்கொள்கின்றன. சிறுநீரகங்கள், முழுவதுமாக பணியில் ஈடுபடுவதில்லை. அவசர நிலையின் போது மட்டுமே முழுவதும் இயங்கும். இதன் ¾ பகுதி சிதைந்து விட்டாலும் மீதி ¼ பகுதி, உரிய பணியைச் செய்யும் திறன் பெற்றுள்ளது.

## கண்கள்

கண்ணீர், கண்களைத் தூய்மைப்படுத்துவதோடு, சிறுபொருட்கள், கண்ணிற்குள் நுழைந்து விடும் போது அவற்றை வெளியேற்றும் திறன் பெற்றுள்ளது. மேலும் கண் இமைகள், விரைந்து இயங்கி, கண்கள் காயம்படாமல் பாதுகாக்கின்றன. மேலும் நோய்க்கிருமிகளால் கண்கள் பாதிக்கப்பட்டால், கண்ணீரிலுள்ள கிருமி நாசினி கண்களைப் பாதுகாத்து விடுகிறது.

---

**சிறந்த மூன்று நற்செயல்!**

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது :

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் "எந்த நற்செயல் சிறந்தது ?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் "அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை (ஈமான்) கொள்வது" என்று பதிலளித்தார்கள்.

"பிறகு எது ?" என்று கேட்கப்பட்ட போது, "இறைவழியில் அறப்போர் புரிவது" என்றார்கள். "பிறகு எது ?" என்று கேட்கப்பட்டபோது, "ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்" என்று சொன்னார்கள். (நூல் : ஸஹீஹுல் புகாரி)

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

IATA

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

**LALPET OFF :** No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
**CHENNAI OFF:** No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

## 99942 54304 | 95669 92919

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ரூ. 85,000/- | ரூ. 98,000/- | ரூ. 1,08,000/- | ரூ. 1,35,000/- | ரூ. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |
| மே | 02-05-2024 | வியாழன் | 16-05-2024 | வியாழன் | 15 நாள் |
| மே | 12-05-2024 | ஞாயிறு | 26-05-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜுலை | 24-07-2024 | புதன் | 07-08-2024 | புதன் | 15 நாள் |
| ஜுலை | 24-07-2024 | புதன் | 22-08-2024 | வியாழன் | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

விபரங்களுக்கு: உரிமையாளர்.

**அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு** செல்: 9994254304

## எலும்புகள்

உடலில் 200 எலும்புகள் உள்ளன. ஒவ்வொன்றும், உடல் பணிகளுக்குரியனவாக வலிமையும், அசைவுத் திறனையும் பெற்றுள்ளன. எலும்புகளின் தனிச் சிறப்பு, அவற்றின் பாதுகாப்புத் திறனாகும். எலும்பு உடைந்தால், அது தன்னைப் பாதுகாத்து கொள்ள தானே சீராக்கிக் கொள்ளும். உடைந்த பகுதியில் வளரும் புதிய எலும்பு முன்பிருந்ததை விட வலிமை அதிகம் உள்ளதாக இருக்கும்.

எலும்புகள் இணைந்து அமைக்கப்பட்டிருப்பதன் சிறப்பு, நாம் அதிகப் பளுவானப் பொருட்களை உயரே தூக்குவதற்கு உதவுவதாக இருப்பதுதான்.

## உடல்கொழுப்பு

அவசர காலத்தில், உடலுக்குச் சக்தியை வழங்குவதற்காக, கொழுப்பு உடலில் தேக்கி வைக்கப்படுகிறது. உடல் ‘சக்தி வங்கி’ என்று இதனைக் கூறலாம்.

மேலும், உடல்தோற்றத்தின் அழகிற்காக உரிய இடங்களிலும் உடல்கொழுப்பைதேக்கி வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உணவின்றி பல நாட்கள் கழியும்போது தேக்கி வைக்கப்பட்ட கொழுப்புகளிலிருந்து உடல் சக்தியைப் பெற்றுக் கொள்ளும். பல வாரங்கள் வரை இது நீடிக்கலாம்.

## தோல்

கடின உழைப்பினர், கரங்களைப் பயன்படுத்தும்போது குறிப்பாக அதிகப் பளுவுள்ள பொருட்களைத் தூக்கும்போது, நாளடைவில் சில இடங்களில் தடிப்பு ஏற்படுவதைக் காணலாம். அவ்விடங்கள் வழுவழுப்பின்றி, கரடுமுரடாக அமைந்து விடும். இவை ஏற்படுவதற்குக் காரணம் அவ்விடங்கள் அதிகம் கெட்டியாக இருக்க வேண்டும் என்பதே.

அதிகம் நடப்பவர்களிடமும், இதுபோன்ற தழும்புகள் உள்ளங்கால்களில் காணப்படும். அவ்விடங்கள் கெட்டியாக இருப்பதற்காகவே இவை ஏற்படுத்தப்படுகின்றன.

பாதங்களில் பூட்ஸ் அணியும் போது, சில காலம் சென்றபின், சில இடங்களில், அதாவது, அதிகம் அழுத்தப் படும் இடங்களில், கடினத் தழும்புகள் ஏற்பட்டிருப்பது தெரியவரும்.

வெயில் நாடுகளில் வெயிலின் கடுமை உடலைப் பாதிக்காமலிருக்கும் வகையில் உடல் செயல்படுகிறது. செல் அணுக்கள் மெலனின் (Melanin) என்ற ஓர் இரசாயனப் பொருளை உற்பத்தி செய்கின்றன. இப்பொருள் நாளடைவில், சருமத்தைப் பழுப்பு நிறமாக

மாற்றி, வெயிலிலிருந்து உடலைப் பாதுகாக்க உதவும்.

அதிக வெயில் நாட்டின் கறுப்பு நிறத்தவர்கள் உடலில் பிறக்கும் போதே, மெலனின் படலம் தோலில் உள்ள நிலையிலேயே பிறக்கின்றனர்.

## மூளை

மூளையில் 10 ஆயிரம் கோடி (100000000000) செல் அணுக்கள் உள்ளன. ஒவ்வொரு செல் அணுவும், அண்டை செல் களுடன் 5000 இணைப்புகள் கொண்டுள்ளது. நாம் உயிர் வாழும் காலம் முழுவதும், மூளை செல்களுக்கிடையே செய்திகள் பரிமாற்றம் நடந்து கொண்டேயிருக்கும்!

உடலின் அனைத்துப் பகுதி களிலிருந்தும் செய்திகள், நரம்புகள் மூலம் மூளைச் செல் அணுக்களுக்குச் செல்வதும், அதற்குரிய பதில் செய்திகள் மூளையிலிருந்து உடலுக்குச் செல்வதும் நிகழ்ந்து கொண்டே யிருக்கும். இவையனைத்திற் கும் மூளை பதில் சொல்வதில்லை. முக்கியத் தேவைக்குரிய பதிலை மட்டுமே அனுப்பும். மற்ற செய்தி களைப் புறக்கணித்து விடும்.

ஒரே மாதிரியானச் செய்தி கள் 100 எண்ணிக்கையில் மூளையை அடைந்த போதும் அவற்றுடன் “வீண் பேச்சுகள் பேசாமல்” (Neural Gossip) உரிய பதில்கள் தேவைப்படும், செய்திகளைப் பிரித்தறிந்து, அவற்றை அனுப்பி வைக்கும் திறன் கொண்டது மூளை!

## தட்பவெப்பப் பாதுகாப்பு

உடல் உட்பகுதியில் வெப்பம் 30°C முதல் 45°C வரை யிலும் இந்த அளவிற்குள் நிலைப்படுத்தப்பட வேண்டும். 30°Cக்குக் கீழ் குறைந்தாலும், 45°Cக்கு மேல் சென்று விட்டா லும் உயிர் வாழ முடியாது.

ஆகவே, வெளி வெப்பம், அதாவது புறச் சூழல் வெப்பம் குறைந்தாலும், உயர்ந்தாலும், உடல் எப்படி பாதுகாக்கப்படு கிறது. உடலில் தட்பவெப்பத்தை சமநிலைப்படுத்தும் ‘தெர்மோ ஸ்டேட்’ (Thermostat) உடலில் அமைக்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் வெளி வெப்பம் நிலவும்போது, வியர்வை சிந்துவது மூலம், உடல் வெப்பம் நிலைப்படுத்தப்படு கிறது. குளிர் நிலை அதிகரிக்கும் போது, உடல் நடுக்கம் தூண்டப் பட்டு, உடல் சூடாக்கப்படுகிறது.

## மெலிந்த உடல்
## (Slimming Control Mechanism)

பசி கட்டுப்பாட்டு மையம், உடலில் செயல்படுகிறது. ஒரு வருக்குத் தேவையான உணவை உண்பதையும், உரிய அளவை யும் நிர்ணயிக்கவல்லது. இதற்குச் செவி சாய்க்க வேண் டும். அப்பொழுது உடல்

பருமன் ஏற்பட வாய்ப்பில்லை. நாம் அதை அலட்சியப்படுத்து கிறோம். பசித்துப் புசிக்க வேண் டும். குறைந்த அளவு உண்ண வேண்டும். ஆனால் நாம், நேரம் வந்தால் பசியில்லாமலே உண்டு வருகிறோம். அதுவும் வயிறு முட்ட உண்கிறோம். விளைவு - பருத்த உடல்!

## செல்லும் வழி அறிதல் (Navigation)

பறவைகள் போல, செல்லும் வழிகளை அறியும் திறன் நம் உடலில் உண்டு. நாம் அதைப் பயன்படுத்தாமல் துருப்பிடிக்கச் செய்கிறோம்.

கடுமையான இருளில் கூட, நாம் செல்ல வேண்டிய வழி யைத் தெரிந்து கொள்கிறோம்.

## நோய்க் கட்டுப்பாடு (Automatic Infection Control)

நோய்க்கிருமிகள் நோயைத் தூண்டும்போது, உடல் அதனை அறிந்து கொள்கிறது. உடனே, உடல் சூடு - காய்ச்சல் ஏற்படு கிறது. உடல் சூடு, தானாக ஏற் படுவதில்லை. நோய்க்கிருமி களை அழிப்பதற்காகவே உடல் வெப்பம் உயர்கிறது.

## தொண்டை அடைப்பு நீங்குதல் (Antichoking Device)

உணவுத் துண்டு, உணவுக் குழல் வழியில் செல்லாமல், சுவாசக் குழாய் வழியில் சென்று தங்கும் போது, மூச்சடைப்பு ஏற்படுகிறது. இருமல் தூண்டப் பட்டு, நுரையீரலிலிருந்து வெளி யேறும் காற்று தடைபடுகிறது. ஏனெனில் மூச்சுக் குழல் அகலம் குறைந்து விடுவதால், வெளி யேறும் காற்று, தங்கி நிற்கும் உணவுத் துண்டை வெளியேற் றும் அளவு வேகமாகப் பாய்கிறது. ஆகவே வெளியேறும் சுவாசக் காற்று அழுத்தம் பெற்று, உணவுத் துண்டை வெளியேற்றி, சுவாசம் சீர்பெறச் செய்கிறது.

## தானாக குணப்படுத்தும் செயல்முறை (Self - Healing Meachanism)

உடலைப் பாதுகாப்பதற் குரிய தானாக இயங்கும் செயல் முறைகள் உடலில் அமைக்கப் பட்டுள்ளன.

உடற்காயம் ஏற்படும்போது, அதிலிருந்து இரத்தம் வடி கிறது. காரணம், காயம் ஏற் படுத்தியகருவியின் அழுக்குகள், அங்கு தங்கி விடுவதை வெளி யேற்று வதற்காகவேயாகும். இவ்விதம், இரத்தம் வடிந்து சில நிமிடங் களில் கட்டியாகி, வடிதல் நின்று விடுகிறது. காயம் ஏற்பட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டு, தோல் செந் நிறமாகிறது. வெப்ப மும் அதிகரிக்கிறது. ஏனெனில்,

காயமுற்ற செல்கள், சில தனிப்பட்ட இரசாயனப் பொருட்களை திசுக்களுக்கு அனுப்புகின்றன. வெப்பம், நோய்க் கிருமிகள் தங்கியிருந்தால் அவற்றைக் கொன்றுவிடுகிறது.

## வீக்கம் – காயத்தின் பாதுகாப்பு அணையாகும் (Splint)

இரத்த வெள்ளை அணுக்கள் அங்கு கொண்டுவரப்பட்டு அவை நோய்க் கிருமிகளை விழுங்கிக் கொள்கின்றன.

பிறகு புதிய திசுக்கள் தோன்றி காயம் ஆற்றப்படும். உடனே புதிய திசுக்கள் ஏற்படுவதும் நின்று விடும். அதனை நிறுத்துவது எது? காயம் ஆறி தழும்பு தோன்றும். தழும்புத் தோல், முந்தியத் தோலைவிட அதிக வலிமையுடையது.

பெரிய காயங்கள் ஏற்பட்டு, அதிக இரத்தம் வழிந்து விடும் போது, காயம்பட்டவர் மயங்கி விழுந்து விடுகிறார். இந்த மயக்கம், அர்த்தமுள்ள உடற் பணியாகும்.

மூளைக்குத் தேவையான இரத்தத்தை அனுப்புவதற்காக உடல்படுக்க வைக்கப்படுகிறது.

நிற்கும்போது, இரத்தம் மேல்நோக்கி மூளைக்குப் பாய வேண்டும். ஆனால் படுத்திருக்கும் நிலையில், இரத்தம் எளிதாக மூளைக்குச் சென்றுவிடுகிறது. உடல் இயங்க, மூளை இயங்க வேண்டும். மூளைக்குப் பாயும் இரத்தம் குறைந்து விடக்கூடாது.

## அவசர நிலை அமைப்புகள் (Emergency Systems)

அவசர நிலை ஏற்படும் போது, உயிர் காக்கப்பட வேண்டும் என்பதால் உடல் மயங்குவது தானாக நிகழ்வதாகும். காரணம் மூளைக்கு அதிக இரத்தம் தேவைப்படுகிறது. மிக அவசர நிலை உயிர்காக்க உடல்தானாகச் செயல்படுகிறது.

- கண்களின் கருநிறப் புழை, அதாவது கண்ணின் மணி (Pupil) அகன்று நிற்கும். ஆகவே பார்வை கூர்மை பெறும்!
- செவிப் புலனும் சீர்பெறும். முக்கிய ஒலிகளை நன்கு செவியுற உதவுவதற்காக, இதயத் துடிப்பு தற்காலிகமாகக் குறையும். அதாவது துடிப்பின் வேகம் சற்று மிதமாகும்!
- சுவாசமும் தற்காலிகமாக நின்று விடும். அவசர நிலைக்கு தீர்வு காண உதவும் முக்கியச் செய்திகளை (Vital Clues) கேட்டறிவதற்கு உதவ வேண்டும் என்பதே சுவாசம் தடைபடுவதன் காரணமாகும்!

- அதிக அளவு இரத்தம் மூளைக்குப் பாயும். அதனால் மூளைப் பணி துரிதமாகச் செயல்பட்டு, முக்கிய முடிவு களை எட்ட வேண்டும் என்பதற்காக!
- தோலுக்குப் பாயும் இரத்தம் குறைக்கப்படும். தோலில் காயம் ஏதும் ஏற்பட் டால், இரத்த இழப்பு குறைவாக இருக்க வேண்டும் என்பதே காரணம்!
- வயிற்றில் அமிலம் அதிகம் சுரக்கும். ஏனெனில், வயிற் றில்தங்கியுள்ள உணவுஏதும் இருந்தால், விரைவாக அதைச் ச்க்கரையாக மாற்றி உடலுக்கு சக்தி வழங்கப் பட வேண்டும் என்பதே காரணம்!
- உடற்தசைகள் முறுக்கேறும். விரைந்து செயல்படவோ அல்லது ஓடுவதற்கோ அல்லது சண்டை போடவோ தேவைஏற்படும்என்பதற்காக!
- இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதன் மூலம், உடலுறுப்பு கள் அதிக இரத்தம் பெற்று, பணிகள் சீர்பெறும் என்பதற்காக!

மனித உடலின் அமைப்பும், அதன் பணிகளும், பொருள் மிக்கது, சீரிய வியப்புக்குரியது மாகும். உடலைப் படைத்து, அதனை சீராக நிர்வகிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹஸ்ரத்



**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் :
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸி
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.17570100003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# மாமன்னர்

# ஔரங்கஜீப் ஆலம்கீர் (ரஹ்) அவர்கள்

தொகுப்பு : செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை

"ஆகவே அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறும் பொருட்டு [இத்தகைய] வரலாறுகளைக் கூறுவீராக".

- அல்குர்ஆன் (7 : 176)

இந்திய தலைநகர் டில்லியிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு சாலைக்கு இந்த மண்ணை ஆண்ட மாபெரும் பேரரசரின் பெயர் "ஔரங்கஜீப் ஆலம்கீர்" என்று வைக்கப்பட்டுள்ளது.

இந்த பெயர் மத துவேஷமுள்ள பாசிஸ ஆட்சியாளர்களின் உள்ளத்தை உறுத்த அப்பெயரை தந்திரமாக "அப்துல்கலாம் சாலை" என்று மாற்றிவிட்டனர்.

ஔரங்கஜீப் "கொடுங்கோன்மையான ஆட்சியாளர்" என்றும், கோவில்களை இடித்தார் என்றும் இந்து மத விரோதியாகவும் அவரை சித்தரிக்கின்றனர்.

உண்மையிலே ஔரங்கஜீப் என்பவர் யார்? அவரை இவர்கள் இவ்வளவு மூர்க்கமாக எதிர்ப்பதற்குரிய காரணம் என்ன? என்பதனை நாம் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

உண்மையை உரக்கச் சொல்லும் வரலாற்றாசிரியர்கள் "முகலாய மன்னர்களில் ஔரங்கஜீப் பௌர்ணமி நாளின் பூரணச் சந்திரன்" என வர்ணிப்பார்கள்.

உலகில் தலைசிறந்த மாமன்னர்களில் ஒருவராக போற்றப்படும் ஔரங்கஜீப் ஆலம்கீர் (ரஹ்) அவர்களின் மீது சேற்றை வாரி இறைக்கும் காரியத்தை திட்டமிட்டு செய்கின்றனர்.

இந்திய வரலாற்றை மாற்றுவோம் எனக் கூறி திரிக்கப்பட்ட புதிய வரலாற்றை மாற்றி எழுத முயற்சிக்கின்றனர் சங்கிகள். எனவே உண்மை வரலாற்றை அறிந்து அதனை எடுத்துச் சொல்வோம்.

இந்தியாவில் இஸ்லாமியர்களின் ஆட்சி 800 ஆண்டுகள் என்றால் அதில் பெரும் பகுதி, ஒரு சிறிய இஸ்லாமிய கோத்திரத்தவர்களான முகலாயர்கள் மிக நீண்ட காலம் கிட்டத்தட்ட 333 ஆண்டுகள் (கி.பி 1524 முதல் 1857 வரை) ஆட்சி செய்தனர்.

முகலாயர்களில் சிறந்த ஆட்சியாளர், பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்தவர் என்ற

சிறப்பு ஔரங்கஜீப் ஆலம் கீர் (ரஹ்) அவர்களையே சாரும்.

முகலாய மன்னர்கள் இந்தியாவில் உள்ள பல பகுதிகளை ஆட்சி செய்திருந்தாலும், யாருமே ஒட்டுமொத்த இந்தியாவை ஆளவில்லை.

ஆனால் ஔரங்கஜீப் ஆலம்கீர் (ரஹ்) அவர்களின் ஆட்சி, மேற்கில் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தானை கடந்து ஆப்கானிஸ்தான் வரையிலும், கிழக்கில் வங்கதேசம் வரையிலும், தெற்கே தமிழ்நாடு வரையிலும் பரந்து விரிந்திருந்தது.

## இயற்பெயர் மற்றும் பிறப்பு

ஔரங்கஜீப் (ரஹ்) அவர்களின் இயற்பெயர், முஹ்யித்தீன் அபுல் முளஃப்பர் முஹம்மது ஔரங்கஜீப் (ரஹ்) என்பதாகும்.

முஹம்மது ஔரங்கஜீப் (ரஹ்) அவர்கள் துல்கஃதா பிறை 15 ஹிஜ்ரி 1027, அக்டோபர் 24ஆம் தேதி 1618ஆம் வருடம் குஜராத் மாநிலம் தஹோத் எனும் ஊரில் மன்னர் ஷாஜஹான், மும்தாஜ் தம்பதியருக்கு மகனாக பிறந்தார்கள்.

## ஔரங்கஜீப் (ரஹ்) அவர்களின் மார்க்கப் பற்று

ஹள்ரத் முஜத்திதே அல்ஃபதானி (ரஹ்) அவர்களின் சீடர் ஹள்ரத் க்வாஜா முஹம்மது மஃஸூம் ஸர்ஹிந்தி (ரஹ்) அவர்களிடம் (பைஅத்) ஆன்மிக தீட்சண்யம் பெற்றவர்கள்.

ஔரங்கஜீப் (ரஹ்) அவர்கள் மார்க்கம் பயின்ற ஆலிம் ஃபாஸிலாகவும், இறைசிந்தனையில் ஆபிதாகவும், துறவு வாழ்வை மேற்கொள்பவராகவும், குர்ஆன் பிரதியை எழுதி விற்பது மற்றும் தொப்பி தைக்கும் வருமானத் தில் எளிமையான வாழ்வை மேற்கொள்ளும் மன்னராகவும் திகழ்ந்தார் என்பதனை அவரை விமர்சிக்கும் வரலாற்றாசிரியர்களே எழுதிவைத்திருக்கின்றனர்.

ஒரு தடவை ஹள்ரத் ஔரங்கஜீப் (ரஹ்) அவர்கள் சிறுபிராயத்திலே ஹாஃபிழாகி விட்ட தன் மகனுக்கு துஆ வேண்டி அவர்களின் தந்தை ஷாஜஹான் (ரஹ்) அவர்களிடம் அழைத்துச் செல்கிறார்கள்.

ஹாஃபிழான தன் பேரக் குழந்தையைக்கண்டுஷாஜஹான் (ரஹ்) அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். ஏன் அழுகிறீர்கள்? எனக் கேட்க, ஷாஜஹான் (ரஹ்) அவர்கள் “ஹாஃபிழின் பெற்றோருக்கு நாளை மறுமையில் சூரியனை விட பிரகாசமான கிரீடம் அணிவிக்கப்படும்.

உன் மகன் ஹாஃபிழ் என்பதால் உனக்கு அந்தப்பாக்கியம் கிடைக்கும். உன்னை ஹாஃபிழாக்கியிருந்திருந்தால் எனக்கும் அந்தப்பாக்கியம் கிடைத்திருக்குமே என

# பள்ளிவாசல் கட்டிட வேலைகள் நிறைவு பெற உதவிக்கரம் நீட்டுங்கள்!

**"எவர் அல்லாஹ்விற்காக இறை இல்லத்தை கட்டுகிறாரோ அது காடை கூடு அளவிற்கு இருந்தாலும் அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை கட்டுகிறான்."**

– நபி (ஸல்) அவர்கள் (நூல் : இப்னு ஹிப்பான், பஸ்ஸார்)

கோவை மாவட்டம், சூலூர் வட்டம், கருமத்தம்பட்டி, **சோமனூர்** பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு மஸ்ஜிதே நூர் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசலுக்காக கட்டப்பட்ட கட்டிடம் வலுவிழந்ததன் காரணமாக அதே இடத்தில் மக்கள் தொழுமளவுக்கு பள்ளிவாசலின் உள் கட்டிட வேலைகள் அனைத்தும் அல்லாஹ்வின் அருளால் நிறைவு பெற்றுவிட்டன. அல்ஹம்துலில்லாஹ்!

வெளி வேலைகளும், மினாரா மற்றும் சுற்றுச்சுவர் வேலைகளும் பெருமளவில் நிலுவையில் இருப்பதால், மேற்படி வேலைகளை முழுமைப்படுத்தி நிறைவு செய்வதற்கு சுமார் **10 இலட்சம் ரூபாய்** வரை தேவைப்படுகிறது.

எனவே, நல்லுள்ளம் கொண்ட சகோதரர்கள் மேற்படி பொருளாதாரத்திற்கு உதவி செய்து **சுவனத்தைப் பெற அன்புடன் வேண்டுகிறோம்.** உதவி செய்ய முன்வருபவர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 9843042027 | 9944685559 | 9443899786 | 9443426137 |
| தலைவர் | செயலாளர் | முத்தவல்லி | கௌரவ ஆலோசகர் |

**Account Name :** **Masjidhe Noor & Madhrasa Sunnath Jamath Paribalana Sabhai**

**Bank Name** : UNION BANK OF INDIA

**Branch** : SOMANUR

**Account No.** : **334902010010940**

**IFSC Code** : UBIN0533491

G Pay   PhonePe   **94438 99786**

## MASJIDHE NOOR MADHRASA SUNNATH JAMATH PARIBALANA SABHAI

**Somanur - 641668. Coimbatore Dt. Tamilnadu**

நினைத்து அழுகிறேன்" என்றார்கள்.

இதனை கேட்டு கலங்கிய ஹள்ரத் ஔரங்கஜீப் (ரஹ்) அவர்கள் வெறும் ஆறே மாதத்தில் முழுக் குர்ஆனையும் மனனம் செய்து ஹாஃபிழாகி விட்டு வந்து தன் தந்தையிடம் உங்களுக்கும் அப்பாக்கியம் கிடைக்கும் என்றார்கள்.

இப்போது ஷாஜஹான் தம் மகனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

## ஃபதாவா ஆலம்கீர்

ஹள்ரத் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அன்னவர்கள் ஆற்றிய மாபெரும் மார்க்கச் சேவை ஃபதாவா ஆலம்கீர் எனும் பெயரில் ஹனஃபி மத்ஹப் சட்டங்களை பெரும் நூலாக கோர்வை செய்ததாகும்.

இப்பணிக்காக வேண்டி இந்திய தேசத்தின் பிரபல்யமான ஆலிம்களும், மார்க்க விற்பன்னர்களும் சேர்ந்து எட்டு வருடங்கள் இந்நூலை கோர்வை செய்தனர்.

இன்றும் இந்நூல் ஹனஃபி மத்ஹப் சார்ந்த ஃபத்வா நூல்களில் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

## வரலாற்று திரிபும், உண்மையும்

முகலாய வம்சத்தின் கடைசி பேரரசர் ஔரங்கஜீப், சக்ரவர்த்தி என்ற சொல்லுக்கு முற்றிலும் பொருத்தமானவர் இவர்.

ஔரங்கஜீப் மிகவும் பொல்லாதவர். தந்தையையே சிறை வைத்தவர், மக்களை வரிகளால் வாட்டி வதைத்தவர், மதம் மாற்றியவர் என்று தான் வரலாறு சொல்கிறது. ஆனால், அவரது உண்மை முகமே வேறு.

தனக்கென ஒரு வட்டத்தை உருவாக்கி அதன்படி வாழ்ந்தவர்; மிகவும் நேர்மையானவர்.

ஷாஜஹானின் உடல், உரிய மரியாதையுடனே அடக்கம் செய்யப்பட்டது. அதுவும், தாஜ் மஹாலில் அவரது பிரியத்துக்குரிய மும்தாஜ் உடலுக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

ஔரங்கஜீப் 24 மணி நேரத்தில், மூன்று மணி நேரம் மட்டுமே உறங்குவார். வேலை தவிர, மீதமிருந்த ஓய்வு நேரங்களில் இஸ்லாமிய மார்க்க நூல்களை படிப்பதில் செலவிடுவார்; தரையில் தான் படுப்பார்.

அரசாங்க கஜானா பணம் மக்களுக்கு உரியது. அரச குடும்பத்தினர் செலவழிப்பதற்காக அல்ல என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார் ஔரங்கஜீப். தன் சொந்த செலவுகளுக்காக ஒருபோதும் அவர் கஜானாவை உபயோகித்ததில்லை.

எப்போதும் எளிமையான உடைகளையே அணிவார். ஆபரணங்களை அணியாதவர். பொன், பொருள் மேல் ஆசையில்லாதவர்.

பொதுவாக, மன்னர்கள் தாங்கள் பிறந்த நாளில் தகதக உடையணிந்து, உடல் முழு வதும் ஜொலிஜொலிக்கும் நகைகள் அணிந்து மக்களுக்கு காட்சி கொடுப்பதை பாரம் பரியமாக வைத்திருந்தனர். ஆனால், எளிமை விரும்பியான ஔரங்கஜீப், தன் பிறந்த நாள் கொண்டாட்டங்களை எல்லாம் அனுமதிக்கவில்லை. அன்றைய தினத்தையும், சாதாரண தினமாகவே எடுத்துக் கொண்டார்.

ஔரங்கஜீப்புக்கு தொப்பி தைப்பதில் ஆர்வம் உண்டு. அதே போல் குர்ஆனை தன் கைப்பட எழுதுவதில் அதீத விருப்பம் கொண்டவர். அந்த இரண்டையும் விற்று, கிடைக்கும் பணத்தில் தான் தனிப்பட்ட செலவுகளை பார்த்துக் கொண்டார்.

மதுவை வெறுத்தவர். தன் அதிகாரத்துக்குட்பட்ட பகுதி களில் மதுவை தடை செய்தார். அதே போல கேளிக்கை விடுதி களை இழுத்து மூடினார். உல்லாச நிகழ்ச்சிகள் நடத்தக் கூடாதென்று உத்தரவிட்டார். போதைப் பொருள்களையும் ஒழித்தார்.

அன்றைய காலகட்டத்தில், இறந்த கணவனின் சடலத்தை எரிக்கும்போதே, அதே நெருப்பில், மனைவியும் குதித்து, தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும், 'உடன் கட்டை' ஏறும் பழக்கம் இந்துக்களிடையே இருந்தது. குறிப்பாக, ராஜபுத்திரர்களிடையே அதிகமாக இருந்தது.

ஒருமுறை, போர்க்களத்தில் இறந்த ஒரு வீரனின் உடலை எரித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவன் மனைவியை அந்த நெருப்பில் குதிக்கச் சொல்லி, சுற்றியிருந்தவர்கள் கட்டாயப்படுத்தினர்.

அங்கு வந்த ஔரங்கஜீப், அந்த செயலை தடுத்தார். தங்கள் மத விஷயத்தில் தலை யிடக் கூடாதென்று அங்கி ருந்தவர்கள் வாதம் செய்தனர். ஆனால், ஔரங்கஜீப் விடவில்லை.

இது அநியாயம் இனி இத்தகைய கொடுமைகள் முகலாயப் பேரரசில் நடக்கக் கூடாது. இந்த சடங்கை தடை செய்கிறேன் என்று உத்தரவு பிறப்பித்தார். அதற்காக பல் வேறு பிரிவினரிடமிருந்து எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி யிருந்தது. மிகவும் கஷ்டப்பட்டுத் தான் இந்த சட்டத்தை செயல்படுத்தினார்.

'நவுரோஸ்' என்ற பண்டிகையை அக்பர் உருவாக்கி யிருந்தார். மிகவும் உல்லாசமான திருவிழா அது. வண்ணமயமான கொண்டாட்டங்கள் நிறைந்தது. அந்த திருவிழாவின் இறுதியில் பேரரசரின் எடைக்கு சமமான பொன், வைர ஆபரணங்களை

மக்களுக்கு கொடுக்கும் வழக்கமிருந்தது.

வீணாக அரசாங்க பணத்தைகேளிக்கைகளுக்காக செலவழிக்க விரும்பாத அவுரங்க சீப், நவுரோஸ் பண்டிகையை தடை செய்தார்.

ஒரு பேரரசராக இருந்தா லும் மிகவும் எளிமையாக வாழ்ந்தவர். அவ்வளவு செலவு செய்து, தன் தந்தை, தன் தாய்க்காக தாஜ்மஹால் கட்டியதையே விரும்பாதவர்.

ஏனெனில், தாஜ்மஹால் கட்டுவதற்கு மக்களிடமிருந்த பணமெல்லாம் உறிஞ்சப்பட் டது. இக்கட்டட வேலையில் மக்கள் கட்டாயமாகஈடுபடுத்தப் பட்ட னர்; உயிரிழப்புகளும் ஏற்பட்டன. அரசு கஜானா படுமோசமாகிப் போனது.

ஆனால், ஷாஜஹானுக்கு மக்கள் முக்கியமாக தெரிய வில்லை. தன் மனைவிக்காக கட்டடம் கட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டிருந்தார். 1632-ல் ஆரம்பித்த தாஜ்மஹா லின்கட்டடப்பணிகள், 1648-ல் தான் நிறைவடைந்தன. தன் னுடைய அன்பு மனைவி யின் ஆசையை நிறைவேற்றிய சந்தோஷத்தில், கண்ணீர் வடித்தார் ஷாஜஹான்.

எளிமை விரும்பியான அவுரங்கசீப்பின் கண்களுக்கு, தாஜ்மஹால் அழகாக தெரிய வில்லை; துயரமாகவேதெரிந்தது.

அதனால், இன்னொரு கருஞ்சலவைக்கல் மாளிகை கட்டுவதற்காக, ஷாஜஹான் எடுத்த முயற்சிகளை தடுத்தார். இருப்பினும் சில முக்கியமான நினைவுச் சின்னங்களை கட்டினார் ஔரங்கஜீப்.

லாகூரில்,'பாட்ஷாய்மஸ்ஜித்' என்ற மிகப்பெரிய மசூதியை கட்டினார். மக்காவுக்கு அடுத்தபடி யாக, மிகப்பெரிய வெளிப்புற வழிபாட்டு தலத்தைக் கொண்டது இந்த மசூதி.

டில்லி செங்கோட்டை வளாகத்தில், "மோத்தி மஸ்ஜித்" என்ற சிறிய மசூதி ஒன்றையும் கட்டினார். லாகூர் கோட்டையைச் சுற்றியிருக்கும், 13 நுழைவாயில் களில் ஒன்றான, ஆலம்கீர் என்ற பிரம்மாண்டமான கட்டடம் ஔரங்கஜீப்பால் கட்டப்பட்டது தான்.

## அவர் எழுதிய உயில்

நான் இறந்த பின், எனக்கு நினைவுச் சின்னங்கள் எதுவும் கட்டக் கூடாது. என் கல்லறை மேல் அலங்காரங்களும் இருக்கக் கூடாது. நான் தொப்பிகள் தைத்து, விற்று சேர்த்த பணம் கொஞ்சம் இருக்கிறது. அந்த பணத்தை பயன்படுத்தி என் இறுதிச் சடங்குகளை செய்யுங்கள்.

அந்த பணத்துக்கு மேல் செலவழிக்கக் கூடாது. என் இறுதி ஊர்வலத்தில் எந்தவித ஆடம்பரமும் இருக்கக்கூடாது.

ISO 9001:2008 CERTIFIED COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

ISO 9001:2008 CERTIFIED COMPANY

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

**அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்**
**அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்**

**Customer Care - 9962664444**

**www.jingagold.com info@jingagold.com**

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**
**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://**oxfordenglishschool.info**

இது போக, திருகுர்ஆன் எழுதி, விற்று சேர்த்த பணத்தை என் பையில் வைத்துள்ளேன். அது புனிதமான பணம். அதை ஏழை மக்களுக்கு தானமாக கொடுத்து விடுங்கள். இவ்வாறு உயிலில் எழுதி இருந்தார்.

அஹ்மத் நகரில், 1707 மார்ச், 3-ம் நாள் அவரது உயிர் பிரிந்தது. அவரது உயிலின்படியே இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன.

அவுரங்கசீப்பின் இரண்டாவது மகன் பகதூர் ஷா, அடுத்து ஆட்சியில் அமர்ந்தார். மிகப்பெரிய பேரரசைக் கவனிக்க அவருக்கு திறமையில்லை. ஔரங்கஜீப் காலத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெற்றுக் கொண்டிருந்த மராட்டியர்கள், அவரது மறைவுக்குப் பின், கொஞ்சம் கொஞ்சமாக முகலாயர்களின் இடங்களை கைப்பற்ற ஆரம்பித்தனர். அதனால் முகலாயர்களின் ஆட்சி கலைந்தது.

எளிமையாகவும், நிர்வாகத்தில் கண்டிப்பாகவும் இருந்ததால் தான், ஔரங்கஜீப்பால், முகலாயப்பேரரசை கட்டிக்காக்க முடிந்தது. அவை இல்லாததால் தான் அவருடைய வாரிசுகள் பேரரசை இழந்தனர்.

## ஔரங்கஜீப் கோவில்களை இடித்தாரா?

வெங்கட் நாகராஜ் தனது காசி பயண அனுபவத்தை பற்றி எழுதிய நூலில் மிக சாதுர்யமாக தனது பாசிஸ கருத்துக்களை மென்மையாகச் சொல்லி நஞ்சை எப்படி விதைக்கிறார் என்று பாருங்கள்.

"கி.பி.490ஆம் வருடம் காசி விஸ்வநாதர் ஆலயம் கட்டப்பட்டது. பதினோராம் நூற்றாண்டில் மீண்டும் ஹரிச்சந்திர மஹாராஜா ஒரு கோவிலைக் கட்டியிருக்கிறார். 1194ஆம் ஆண்டு முகம்மது கோரி நடத்திய படையெடுப்பின் போது இந்தக் கோவிலையும், வாரணாசியில் இருந்த மற்ற கோவில்களையும் இடித்துத் தரைமட்டமாக்கியதால் இது மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது.

பிறகு வந்த குத்புதீன்ஐபெக் கால் மீண்டும் இடிக்கப்பட்டு, அவரது மறைவிற்குப் பின் பல அரசர்களால் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. 1351-ம் ஆண்டு ஃபீருஸ் ஷா துக்ளக் என்பவரால் மீண்டும் இடிக்கப்பட, மறுபடியும் நிர்மாணிப்பதில் நீண்ட இடைவெளி. அக்பரின் ஆட்சியில் வருமானத் துறை மந்திரியாக இருந்த தோடர் மால், 1585-ம் வருடம் மீண்டும் ஒரு கோவிலைக்கட்டியிருக்கிறார்.

1669-ஆம் வருடம் அரசாட்சி புரிந்த ஔரங்கஜீப் காசி விஸ்வநாதர் கோவிலை முற்றிலும் இடிக்க ஆணையிடுகிறார். கோவில் தரைமட்ட

மாக்கப்பட்டு அவ்விடத்தில் கியான்வாபி மாஸ்க் என்ற மசூதி கட்டப்படுகிறது. கோவிலின் முக்கிய பூசாரியாக இருந்தவர்; சிவலிங்கத்தோடு கோவிலின் பின்பக்கம் இருந்த ஞானவாபி கிணற்றுக்குள் குதித்துவிடுகிறார். இப்போதும் இந்தக் கிணறு காசி விஸ்வ நாதர் கோவிலில் இருக்கிறது. எப்போதும் சிவன்கோவில்களில் சிவலிங்கத்திற்கு எதிரே அவரது வாகனமான ரிஷப வாகனம் இருக்கும். தற்போதைய மசூதியை நோக்கி அக்காலத் தில் இருந்த ரிஷப வாகனம் இருக்கிறது".

எந்த அளவு அவதூறுகளை பரப்ப முடியுமோ அந்த அளவு திட்டம் போட்டு சிலர் பரப்பி வருகின்றனர். ஓர் இடத்தை சுற்றிப் பார்ப்பவர் அதன் அழகைச் சொல்லி விட்டு அல்லது அங்குள்ள மக்களைச் சொல்லி விட்டுதான் செல்வார்கள். அதை விடுத்து சர்ச்சைக்குரிய அதன் இடிப்பை வலிந்து திணித்து வெறுப்பை நாசூக்காக விதைக்கிறார். முதலில் கோவில் என்பது வழிபாட்டு தலம் மட்டும் அல்ல. அந்நாட்டின் பொன்னையும், விலையுயர்ந்த சொத்துக்களை யும் பாதுகாத்து வைக்கும் பெட்டகமாக இருந் தது. எனவே வெளிநாட்டு படையெடுப்பாளர்கள் முதலில் கண் வைப்பது நம் நாட்டு கோவில்களைத்தான். பல இந்து மன்னர்கள் கோவிலை கொள்ளையடித்துள்ளார்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வரலாறுகளே இதற்குசாட்சி. ஆனால் அவற்றை எல்லாம் எழுதமாட்டார்கள்.

இந்த பதிவை எழுதியவர் முகலாயர்களுக்கு எந்த வேலை யும் இல்லாமல் ஒவ்வொரு முறையும் இடிப்பதும், பிறகு கட்டுவதுமாக இருந்தார்கள் என்றுவிஸ்வநாதர் ஆலயத்தின் வரலாற்றைப் பற்றி எழுதுகிறார். இடித்தது மொகலாயர் ஆட்சி. அதே ஆட்சியில் அந்த கோவில் எப்படி திரும்பவும் கட்டப்பட் டது? அதை எப்படி அரசு அனுமதிக்கும்? நம் காலத்தில் இடிக்கப்பட்ட பாபரி மசூதியை இன்று வரை கட்ட முடிந்ததா? ராமர் கோவிலாகத் தானே கட்டினார்கள். அறிவியல் வளர்ந்த காலத்திலேயே நிலைமை இப்படியிருக்க ஆயிரம் வருடங் களுக்கு முந்தைய நிலையை சொல்லவே தேவை யில்லை. இதுதான் யதார்த்தம்.

## ஏன் இடித்தார்?

கவிக்கோ அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் காணொளி உரையிலிருந்து...

இஸ்லாமியர்கள் எண்ணூறு வருடங்கள் இந்தியாவை ஆட்சி செய்திருக்கின்றனர். அவர்கள் கோவில்களை இடித்திருந்

தால் ஆயிரம் வருடங்கள் பழமையான ஒரு கோவில் கூட மிஞ்சியிருக்காது.

இஸ்லாம் வாளால் பரப்பப் பட்டது என்கிறார்களே!

எண்ணூறு வருட ஆட்சி காலத்தில் இந்தியாவில் எல்லோரையும் முஸ்லிமாக்கி யிருப்பார்களே, ஏன் செய்ய வில்லை? இன்றைக்கும் இந்தியாவில் இஸ்லாமியர்கள் சிறுபான்மையினர்தானே; அவர் களின் தலைநகரான டில்லியில் கூட இஸ்லாமியர்கள் பெரும் பான்மையினராக இல்லையே எவ்வளவு பொய்கள்.

மதுரை ஆதீனத்தின் வரலாற்று புத்தகத்தை எனக்கு ஆதீனம் அனுப்பியிருந்தார். படித்தேன்; அதிர்ச்சி அடைந்தேன்.

ஔரங்கஜீப் மதுரை ஆதீனத்திற்கு பூஜை தளவாட சாமான்களை டில்லியிலிருந்து அனுப்பியிருக்கிறார். அவரை தான் பார்த்து சொல்கிறார்கள் கோவில்களையெல்லாம் இடித்தார் என்று. அவுரங்கசீப் காசியிலே உள்ள ஆலயத்தை இடித்தார் என்று எழுதி வைத்தி ருக்கிறார்கள். இந்துக்கள் படித்தால் கொதிக்கத்தான் செய்வார்கள். கொதிக்க வேண்டும் என்றுதானே எழுதி வைத்திருக்கிறார்கள். ஔரங்கஜீப் கோவிலை இடித் தாரா? ஆம் இடித்தார். ஏன் இடித் தார்? அதை சொல்லமாட்டார்கள். ஔரங்கஜீபும், அவருக்கு கப்பம் கட்டும் சிற்றரசர்களும் சேர்ந்து பயணம் போய்க் கொண்டிருந் தார்கள். காசியை நெருங்கும் போது இந்து மன்னர்கள் சொன்னார்கள்...

“மாமன்னரே! எங்களுக்கு இது புனித ஸ்தலம். எங்களுக்கு நீங்கள் அனுமதி கொடுத்தால், நாங்கள் வழிபட்டு விட்டு வந்து விடுவோம். ஔரங்கஜீப் “தாராளமாக சென்று வழிபட்டு வாருங்கள். நான் இங்கு தங்கிக் கொள்கிறேன்” என்றார். அவர் கள் வழிபட்டு விட்டு மாலை நேரம் திரும்ப வந்து விடுகின் றார்கள். ஆனால் சோதித்துப் பார்த்ததில் ஒரு ராணி திரும்ப வரவில்லை. தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. ஔரங்கஜீபிடம் முறையிட்டார் கள். எங்கு தேடியும் ஒரு ராணி மட்டும் கிடைக்கவில்லை. மாமன்னர் போர்ப்படைகளை அனுப்பி கண்டுபிடிக்கச் சொன்னார். கடைசியில் கோவில் கருவறைக்குள்ளே உள்ள நிலவறையில் அந்த ராணி நிர்வாணமாக அழுது கொண்டி ருந்த வண்ணம் கண்டுபிடிக் கின்றார்கள். அந்த கோவில் பூசாரி அந்த ராணியை கடத்திக் கொண்டு, கருவறைக்குள்ளே கர்ப்பமாக்கும் வேலையை செய்து விட்டான். இதனை பார்த்து துடித்த இந்து மன்னர்கள், ஔரங்கஜீபிடம்

# நிலையான நன்மைகள் பெற்றிட
# நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற்பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400**சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கணவான்கள் தங்கள் மனம் திறந்து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

Bank Name : INDIAN BANK Branch : ARIYUR

A/C No. : **6845938157**

IFSC Code : IDIB000A198

+91 9080005537

+91 9080005537@akbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா மவ்லவீ **உபைதுல்லாஹ்** காஸிமி, நிறுவனர் & முதல்வர்,

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

"மன்னரே! இந்த கோவில் தீட்டாகி விட்டது. இதிலே வழிபடக் கூடாது. நாங்கள் வழிபட மாட்டோம்" என்றார்கள். அதற்கு ஔரங்கஜீப் "இது உங்கள் விஷயம்; நீங்களே தீர்ப்புச் சொல்லுங்கள்" என்று கேட்டார். இதனை இடித்துவிட்டு நீங்களே எங்களுக்கு புதிதாக கோவில் கட்டிக் கொடுங்கள் என்று இந்து மன்னர்கள் கேட்க, உடனே அவுரங்கசீப் அந்த கோவிலை இடித்து புதிதாக கோவிலை கட்டிக் கொடுக்கிறார். இன்று இருக்கின்றதே காசி விஸ்வநாதர் ஆலயம் அது ஔரங்கஜீபினால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

இந்த வரலாற்றை அப்துர் ரஹ்மான் சொன்னால் நம்ப மாட்டீர்கள், பேராசிரியர் பாண்டேயும் இதைத்தான் சொல்கிறார்.

எங்களை பயங்கரவாதி என்கிறான் பிரிவினைவாதி என்கிறான் எத்தனை எத்தனை புரட்டல்கள்... இந்த நாட்டை உருவாக்கிக் கொடுத்தவர்களே நாங்கள் தானே.. எண்பத்தி ஆறு தேசங்களாக அல்லவா வைத்திருந்தீர்கள்... அலாவுதீன் கில்ஜி அல்லவா ஒரே நாடாக ஆக்கிக் கொடுத்தார்.

## உண்மை வரலாறு...

முகலாயப் பேரரசர்களில் பலர் இந்திய மக்களின் மனதில் இடம் பெற்றிருந்தாலும், ஔரங்கஜீப் மட்டுமே விதிவிலக்காக விளங்கினார். இந்துக்களை வெறுப்பவர், மத வெறியன், கொடூரமான அரசன், அரசியல் நோக்கத்திற்காக அண்ணன் தாரா ஷிகோஹ்வுக்கு துரோகம் செய்தவர் என்று கருதப்படுகிறார் ஔரங்கசீப்.

இவரது ஆட்சிக்காலம் கி.பி. 1658-லிருந்து கி.பி. 1707 வரையாகும். இவரது ஆட்சி காலத்தில் முகலாயப் பேரரசு காபுலில் இருந்து தமிழ்நாடு வரை பெரும் ஆட்சி செய்து வந்தது. இந்தியாவை ஒருங்கிணைத்து, திறம்பட ஆட்சி செய்த முதல் பேரரசர் என்ற பெருமைக்குரியவர் ஔரங்கஜீப். முகலாய மன்னர்களில் அக்பர், ஔரங்கஜீப் ஆகிய இருவர் மட்டுமே 49 ஆண்டுகள் சாகும் வரை நாட்டை ஆண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஔரங்கஜீப்பின் பெருமை

இவ்வாறு சிறப்பான முறையில் ஆட்சி மேலாண்மை செய்து வந்ததன் காரணமாகவே ஔரங்கஜீப் பேரரசால் இந்தியாவின் பெரும் பகுதியை வெற்றி கண்டு ஆட்சி செய்ய முடிந்தது. இதனால் தான் இவர் இந்தியாவை ஒருங்கிணைத்த முதல் பேரரசர் என்ற வரலாற்றுப் புகழுக்கு சொந்தக்காரர் ஆனார்.

## செஞ்சியை வென்ற ஔரங்கஜீப்பின் தளபதி

ஔரங்கஜீப்பின் தளபதி ஜுல்பிகார்கான் என்பவர் தமிழகத் தின் செஞ்சியை வென்றார். இதனால் அகம் மகிழ்ந்து போன ஔரங்கசீப், அந்தப் பகுதியின் ஆளுநராக ஜுல்பிகார்கானையே நியமித்தார்.

## ஔரங்கஜீப்பின் ஆட்சிப் பரப்பளவு

ஔரங்கஜீப் தன் ஆட்சிப் பரப்பளவை கந்தகாரில் தெற்கே செஞ்சி வரை விரிவுபடுத்தினா. இவரது ஆட்சிகாலம் வரலாற்று ஆய்வாளர்களால் மிகுந்த விமர்சனத்திற்கு உட்பட்டிருந் தது என கூறப்படுகிறது.

இந்திய வரலாற்றில் ஔரங்கஜீப் அளவுக்கு விரிந்து பரந்த சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்தவர்கள் யாரும் இல்லை. அவரிடம்தான் கோஹினூர் வைரம் இருந்தது. இத்தனை இருந்தும் அமைதியாகச் சாவதை யும், எளிய முறையில் சாதாரண சமாதியில் நல்லடக்கம் செய்யப் படுவதையுமே விரும்பினார். ஆர்ப்பாட்டம் இல்லாமல் புதைக்கப்பட்ட கல்லறையுடன் தன்னைப் பற்றிய நினைவுகள் மக்களிடமிருந்து மறைந்து விட வேண்டும் என்று ஔரங்கஜீப் விரும்பியிருந்தாலும், உலகம்


ஈகைப் பெருநாள் வாழ்த்துகள்!

"பெருநாள் தொழுகைக்கு செல்வதற்கு முன்பதாக ஸதகத்துல் ஃபித்ரை கொடுத்துவிடும்படி நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்."

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள்.

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை – 1.

04373-254354; 253339; 99444 54354

அப்படி விட்டுவிடத் தயாராக இல்லை. 21-வது நூற்றாண்டிலும் கூட இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு நாடுகளிலும் அவர் துடிப்பான ஆளுமையாக நினைவு கூரப்படுகிறார்.

## மிகவும் எளிமையானவர் ஔரங்கஜீப்

பல வரலாற்று ஆசிரியர்கள் ஔரங்கஜீப் மிகவும் எளிமையான அரசர். இவர் செல்வத்திற்கு மயங்கியது இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர். பெரும்பாலும் வெள்ளை உடைதான் அணிவாராம். இவரது தலைப் பாகையில் கூட ஒரே ஒரு கல் தான் பதிக்கப்பட்டிருந்தது எனவும் சில வரலாற்று கூற்றுகள் மூலம் அறியப்படுகிறது. தனக்கென மாளிகை கூட கட்டியதில்லையாம் ஔரங்கஜீப்.

The Man and the Myth

1946-ல் ஜவஹர்லால் நேரு எழுதிய 'டிஸ்கவரி ஆஃப் இந்தியா' என்ற புத்தகத்தில் ஔரங்கசீப் கடுமையானவர் மற்றும் பழமைவாத சிந்தனைகளைக் கொண்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கருத்து தவறானது என்று மறுக்கிறார் அமெரிக்க வரலாற்றாசிரியர் ஆண்ட்ரி ட்ரஷ்கே. தமது 'ஔரங்கஜீப்-தி மேன் அண்ட் தி மித்' (Aurangazeb : The man and the Myth) என்ற புத்தகத்தில், இந்துக்களின் மீது கொண்ட வெறுப்பால்தான் ஔரங்கசீப் ஆலயங்களை அழித்ததாகக் கூறுவது தவறு என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். நேவார்க் ரூட்ஜர்ஜ் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றும் ஆண்ட்ரி ட்ரஷ்கே, ஔரங்கஜீப் மீதான இதுபோன்ற கருத்து களுக்கு ஆங்கிலேய ஆட்சிக் கால வரலாற்றாசிரியர்களே காரணம் என்கிறார். ஆங்கிலேய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி என்ற கொள்கையின் படி, இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு வரலாற்றாசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டதாக அவர் கூறுகிறார்.

ஔரங்கஜீப்பின் ஆட்சி காலம் 20 ஆண்டுகள் குறைவாக இருந்திருந்தால் நவீன வரலாற்றாசிரியர்கள் அவருடைய வரலாற்றை வித்தியாசமாக புரிந்து கொண்டிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்கிறார் ஆண்ட்ரி ட்ரஷ்கே. ஆனால் அவர் ஆட்சிக் காலம் 49 ஆண்டுகளாகும்.

15 கோடி மக்களை 49 ஆண்டு காலம் ஆட்சி செய்தார் ஔரங்கஜீப். அவரது ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய இந்திய துணைக்கண்டம் முழுவதுமே முகலாய ஆட்சியின் கீழ் இருந்தது.

மகாராஷ்டிராவின் குல்தாபாத் நகரில் ஆடம்பரம் ஏதும்

# மறுமைக்காக ஓர் அரிய சேமிப்பு

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா NH48 அருகிலுள்ள இந்த **மக்தப், நிஸ்வான் மதரஸா 2016—ல் துவங்கி, 2018—ல் டிரஸ்ட் ரிஜிஸ்டர்** செய்யப்பட்டுள்ளது. இந்த மதரஸாவில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் முதியோர், பெண்கள் சுமார் 8 வருடங்களாக குர்ஆன் மற்றும் தீன் கல்வியையும் மிகச் சிறப்பாக படித்து வருகின்றனர். இந்த மதரஸா வாடகை கட்டிடத்தின் மாடியின் மேற்பகுதியில் இயங்கி வருகிறது. அதனால் ஓத வருபவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே, பள்ளிகொண்டாவில் 1344 சதுர அடி கொண்ட ஒரு மாடி வீட்டை ரூபாய் **23,00,000/—** லட்சத்திற்கு விலை பேசி, அக்ரிமெண்ட் போட்டுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் பேரருளால் நல்லுள்ளம் கொண்ட சில சகோதர, சகோதரிகள் சென்ற வருடம் அள்ளிக் கொடுத்தார்கள். இதற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். மேலும் அல்லாஹ்வின் அருள் உண்டாகட்டும் என்று துஆ செய்கிறோம்.

ஆகையால், தங்களால் முடிந்தவரை இந்த மதரஸா டிரஸ்ட் கணக்கில் **G-Pay/PhonePe** மூலம் பணம் அனுப்பி உதவி செய்வதோடு, நண்பர்கள், தெரிந்தவர்கள் மற்றும் உங்களுடைய உறவினர்களுக்கும் எடுத்துச் சொல்லி உதவி செய்ய வையுங்கள். அல்லாஹு தஆலா தங்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளையும், உடல் சுகத்தையும், வியாபாரத்தில் பரக்கத்தையும் நம்முடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வானாக.

## மதரஸா-யே-மிஃப்தாஹுல் கைர் (டிரஸ்ட்)

Estd : 2016

Regd No.29/IV/2018

## MADRASA-E-MIFTHAHUL KHAIR

(Maintained by Mifthahul Khair Trust)

**51/21A, CENTRAL STREET, PALLIKONDA**—635 809.
Vellore Dt. TamilNadu, India.

**DONATE US**

BANK DETAILS : Name : **MIFTHAHUL KHAIR EDUCATIONAL AND WELFARE (TRUST)**

Current A/c No: **59 32 00 21 00 00 00 06 91**

Bank : **PUNJAB NATIONAL BANK** Branch : **PALLIKONDA**

IFSC Code : PUNB0593200

12A No. : AAFTM9740GE20231
80G No. : AAFTM9740GF20241

G-Pay/Phonepe : **94886 61742**

Contact No.: Moulana **M.SANAULLAH Qasimi .sb : 9786641742**
Mandi **HAFEEZURRAHMAN .sb : 9944381809**

இல்லாமல் எளிமையான கல்லறையில் ஔரங்கஜீப் புதைக்கப்பட்டார் என்கிறார் ட்ரஷ்கே. இதற்கு மாறாக, அரசர் ஹுமாயூனுக்காக செந் நிற கற்களால் அழகான கல்லறை டெல்லியில் கட்டப்பட்டது. அதே போல் ஷாஜஹானால் ஆடம்பரமாக கட்டப்பட்ட உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹா லில் அவர் புதைக்கப்பட்டார்.

இந்துக்களின் விரோதி என அழைக்கப்பட்ட அவரது ஆட்சியின்போது உண்மை யில் இந்துக்களுக்கு எதிராக கொடுமைகள் எதுவும் நடக்க வில்லை. உண்மையில், முக்கிய மான அரசுப் பதவிகளில் இந்துக் களை பணியமர்த்தினார் ஔரங்கஜீப் என்கிறார் ட்ரஷ்கே.

முகலாய சாம்ராஜ்யத்தின் ஆறாவது சக்கரவர்த்தியாகப் பதவி வகித்த ஔரங்கஜீப், இறப்பதற்கு முன் தனது மகனுக்கு எழுதிய கடிதத்தில், 'அந்நியனாக இங்கு வந்தேன்... அந்நியனாகவே செல்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய தேசத்தின் தனிச் சிறப்பே இங்கு கோவில்களும், மஸ்ஜிதுகளும் அருகருகே சமய நல்லிணக்கத்தின் அடை யாளங்களாக திகழ்வதாகும். வழிபாட்டுதலங்களைப்போலவே இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதர வாஞ்சையோடு பழகுவதுமாகும்.

இந்த சகோதரத்துவத்திற் கும், சமய நல்லிணக்கத்திற் கும் வேட்டு வைக்கும் முகமாக பாசிஸ பயங்கரவாதிகள் புராணக் கதைகளையும், வரலாற்றை இட்டுக்கட்டியும் மஸ்ஜிதுகளை அழிக்க சூழ்ச்சி செய்கின்றனர்.

நேற்று பாபரி மஸ்ஜிதை இடித்து ராம ஜென்ம பூமி என தங்களுக்கு சாதகமாக தீர்ப்பை வாங்கி கோவில் கட்டிக்கொண்டார்கள்.

இன்று காசியில் கியான் வாபி மஸ்ஜித் கோவிலை இடித்து கட்டப்பட்டது என்கின்றனர்.

நாளை மதுராவிலே உள்ள ஈத்கா மஸ்ஜித் எங்களின் கிருஷ்ணஜென்ம பூமி என்று பிரச்சனையை கையில் எடுப்பார்கள்.

இப்படியே இந்தியாவில் மூவாயிரம் மஸ்ஜித்களை இடித்து கோவிலை கட்டுவோம் என்கின்றனர்.

இவர்களின் அதிகார துஷ் பிரயோகத்தையும், அத்து மீறல்களையும் வல்லோன் அல்லாஹ் முறியடிப்பான் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

ஆயிரம் கரங்கள் மறைத்திருந்தாலும் ஆதவன் மறைவதில்லை...

அதுபோல் இவர்கள் எத்தனை பொய் புரட்டல்கள் செய்தாலும் உண்மை வரலாறு மறையாது.

# மக்களில் சிறந்தவர் யார்?

ஹள்ரத் துர்ரா பின்த் அபீலஹப் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் : “ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மிம்பர் மீது அமர்ந்திருந்த சமயம், ஒருவர் எழுந்து நின்று, “யா ரஸூலல்லாஹ்! மக்களில் சிறந்தவர் யார்?” என வினவினார்.

“எல்லோரையும் விட அதிகமாக குர்ஆன் ஓதுபவர்;

எல்லோரையும் விட அதிகமாக அல்லாஹ்வை பயப்படக்கூடியவர்;

எல்லோரையும் விட அதிகமாக நன்மையை ஏவி, தீமையை விட்டு விலகக் கூடியவர்;

எல்லோரையும் விட அதிகமாக உறவினரைச் சேர்ந்து வாழ்பவரே மக்களில் சிறந்தவர்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் சொன்னார்கள்.

# இணை வைக்காதீர்!

நான் நபி (ஸல்) அவர்களின் பின்னே ஒரு கழுதையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது “முஆதே! அடியார்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கடமை, அல்லாஹ்வின் மீதுள்ள அடியார்களின் கடமை பற்றி நீர் அறிவீரா?” என வினவினார்கள். “அல்லாஹ்வும், அவனது தூதரும் மிக அறிந்தவர்கள்” என்றேன்.

“நிச்சயமாக அடியார்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கடமை என்பது அவனையே அவர்கள் வணங்க வேண்டும். அவனுக்கு எதையும் இணை வைக்காமல் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அடியார்களின் கடமை என்பது தனக்கு எதையும் இணை வைக்காத அடியானை தண்டிக்காமல் இருப்பதாகும்” என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உடனே நான் “இறைத்தூதர் அவர்களே! மக்களுக்கு இந்த நற் செய்தியை நான் கூறட்டுமா?” என்றேன்.

“அவர்களுக்கு இந்த நற்செய்தியைக் கூற வேண்டாம். இதை நம்பியே இருந்து விடுவார்கள். (வேறு நற்செயல்கள் புரியமாட்டார்கள்)” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் முஆத் இப்னு ஜபல் (ரளி) அவர்கள்.

(நூல் : முஸ்லிம் 44, திர்மிதீ 2567)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.சைய்யது சுலைமான்,** தென்காசி.

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## புதிய நல்லாட்சி அமைந்திட...

“யா அல்லாஹ்! எங்கள் மீது இரக்கப்படாத, எங்களது விஷயத்தில் உன்னை அஞ்சாத ஆட்சியாளர்களை எங்கள் மீது சாட்டி விடாதே” என அனைவரையும் துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- குர்ஆனின் குரல் குழுமம்**

ஹாஜி சி.எஸ்.ஜாபர் அலீ - திருப்பூர்; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் - மங்கலம்; எம்.ஜெமிலா சுல்தானா - புதுஆயக்குடி; எம்.நஸ்ரீன் ஸபூரா - புது ஆயக்குடி; எம்.தீன்முஹம்மது, எஸ்,முஹம்மது ரஹமத்துல்லாஹ் - புது ஆயக்குடி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; சந்தா எண் : F1427- மங்கலம்; உமர் அப்துல்லாஹ் - பாளையகாடு; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா,ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; சமினாள் பேகம், எம்.சாகுல் ஹமீது, லைலா பேகம், முஹம்மது யூனுஸ், ஹபீப் முஹம்மது இம்தியாஸ், முஹம்மது ராஜித், ஷகிலா பேகம், அப்துல் வஹாப், மைமூன் பீவி - இராஜபாளையம்; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹ்ரூல் ஹஸன் - மதுரை; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; எஸ்.ஏ.சல்மா - தஞ்சாவூர்; அ.ராபியத் பசரியா - மூணார்; எஸ்.ஹசன் பானு - தஞ்சாவூர்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; அ.காஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; குரல் வாசகி - பெரியகுளம்; எஸ்.சபியாபீ - இராசிபுரம்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ் இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; அன்சாரி - திருப்பூர்; சந்தா எண் F595 - திருச்சி; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன்பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா,

கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா – மதுரை; ரேஷ்மா – திருச்சி; ராகிமா – திருப்பூர்; சையத் ரகீப் சுல்தானா – தஞ்சாவூர்; ருக்ஷானா – திருச்சி; முஹம்மது ஃபயாஜ்-திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் – மதுரை; பி.சுபைதா – சோழமாதேவி; எஸ்.நூருன்னிஷா – தஞ்சாவூர்; ஏ.அஷ்ரப் நிஷா பேகம் – தேவராயன்பாளையம்; என்.சுல்தான் பீவி – மதுரை; என்.ஜாபர் அலீ, யாஸ்மின் – சின்னசேலம்; ஹாஜி பீர் முஹம்மது, ஹாஜ்ஜா பீ.ருகையாள் பீவி – உத்தமபாளையம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் – சென்னை; ஏ.எஸ்.சைமா – அலங்கியம்; ஜே.ரஹ்மத் நிஸா – அன்னவாசல்; காமிலா பானு, ஹக்கீம் – சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அன்வர், ஸாஜியா – அபுதாபிசையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் – இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி – சென்னை; காஜா ஹுஸைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் – மதுரை; ரோஸ்பானு, சுல்தான் அலாவுதீன் – ஒத்தக்கடை; மெஹ்ராஜ் – மடத்துக்குளம்; எம்.மன்சூர் அலீ – மணப்பாறை; பானு – கோயம்புத்தூர்; எம்.அப்துல் ஸமது – உளுந்தூர்பேட்டை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும், வாசக நேயர்களின் துஆவினாலும் என் தங்கையின் திருமணம் சிறப்பாக நடைபெற்று விட்டது. துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் நன்றி கலந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.அசன் பாஷா – தஞ்சாவூர்.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மர்ஹூம் A.P.மைதீன் இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் மகனாரும், கோட்டைமேடு முன்னாள் ஜமாஅத் தலைவருமான அல்ஹாஜ் M.அபூபக்கர் அவர்கள் 08.02.24 அன்றும்,

கரூர் மாவட்டம் ஈசநத்தம் முன்னாள் முத்தவல்லி மர்ஹூம் S.N.M.அப்துர் ரஹீம் ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாரும், மைலம்பட்டி மர்ஹூம் S.M.முஹம்மது உதுமான் லெப்பை சாஹிப் (ரஹ்) அவர்களின் மூத்த மருமகனாரும், செங்கல்பட்டு ஜனாப் எம்.முஹம்மது பஹாவுத்தீன், அல்ஹாஜ் எம்.நூர் முஹம்மது இவர்களின் மூத்த மச்சாருமான ஜனாப் A.குலாம் முஹம்மது ராவுத்தர் அவர்கள் 09.02.24 அன்றும்,

திருச்சி எடமலைப்பட்டிபுதூர் அல்ஹாஜ் A.அப்துல் லத்தீப் அவர்களின் மனைவியும், அல்ஹாஜ் A.காதர் அவர்களின் தாயாருமான அல்ஹாஜ்ஜா A.நாஜினி பேகம் அவர்கள் 23.02.24 அன்றும்,

மதுரை சக்கிமங்கலம் மர்ஹூம் மவ்லானா அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் நஜ்முதீன் மிஸ்பாஹி ஹஸ்ரத் (ரஹ்) அவர்களின் மகளாரும், மவ்லானா அல்ஹாஃபிழ் அர்ஷத் காஷிஃபீ ஹஸ்ரத், மவ்லானா அல்ஹாஃபிழ் அஸ்ஹத் காஷிஃபீ ஹஸ்ரத் அவர்களின் தங்கையுமான ஜனாபா ராளியா பர்வீன் அவர்கள் 28.02.24 அன்றும்,

உடுமலைப்பேட்டை கடத்தூர் மர்ஹூம் அப்துல் முத்தலிப் ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகளாரும், அரவைகோட்டை மர்ஹூம் A.K.A.சைய்யது முஹம்மது (ரஹ்) அவர்களின் மனைவியுமான ஜனாபா ஜன்னத்துநிஸா அவர்கள் 06.03.24 அன்றும்,

உடுமலைப்பேட்டை பூர்வீகப் பள்ளி தலைமை இமாம் ஈஸா ஹஸ்ரத் அவர்களின் அண்ணன் மகனாரும், மர்ஹூம் வலியுல்லாஹ் ஹஸ்ரத் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாருமான மவ்லவீ ஹாஃபிழ் மஹ்மூது ஹஸன் பாகவி அவர்கள் 07.03.24 அன்றும்,

காயல்பட்டிணம் அரூஸுல் ஜன்னாஹ்வின் ஹிஃப்ழு பிரிவின் முன்னாள் பேராசிரியரும், ஜாவியாவின் முன்னாள் மக்தப் ஆசிரியராகவும், இமாமாகவும் பணிபுரிந்தவருமான மேலப்பாளையம் மவ்லானா முஹ்யித்தீன் ஆலிம் மிஸ்பாஹி அவர்கள் 07.03.24 அன்றும்,

புதுக்கோட்டை ஜாமிஆ ஸிராஜும் முனீர் அரபிக் கல்லூரியின் தலைவரும், நிஜாம் புகையிலை உரிமையாளர்களில் ஒருவருமான ஜனாப் A.R.நூா முஹம்மது அவர்கள் 18.03.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து. அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்




கண்களைக் குளிர வைக்கும் பங்களாதேஷ் சென்ட்ரல் பள்ளி வாசல் அட்டைப்படம் அழகுக்கு அழகாய் மனதை மயங்க வைத்தது. எந்த இதழிலும் காண முடியாத காட்சியாகும். நோன்பின் தத்துவம் என்று மவ்லவீ ஹாபிழ் பரக்கத் அலீ பாகவி எழுதிய முத்தான வார்த்தைகள் முகம் மலர வைத்தன! மனதைக் குளிர வைத்தன!

“இந்தியாவுக்கு வெளிச்சம் கிடைக்குமா?” என்ற தலையங்கம், ஜெக ஜோதியாய் மின்னும் காலம் வெகுதூரம் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

மவ்லவீ முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி எழுதிய “காக்கும் கேடயம்” கருத்துக்கள் நிறைந்து கற்கண்டாக இனித்தன. தங்கமாய் மின்னியது.

“பாபரி மஸ்ஜிதின் இடத்தில் ராமர் கோவில்” கட்டுரை கண்டேன். முஸ்லிம்கள் வாழ்க்கையில் ஒற்றுமை மலரும் காலம் கனிந்து விட்டது என்பதுதான் உண்மையாகும்.

“தமிழ்மாமணி” பீ.ஹாமிது அப்துல் ஹை எழுதிய “வாய்த் தூய்மை” கட்டுரையின் மூலம் வாயின் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது.

மேலும், தீட்டப்படாத வைரத்துக்கு ஒளியில்லை!
செதுக்கப்படாத கல்லுக்கு உருவமில்லை!
நாவடக்கம் இல்லா சொல்லுக்கு மதிப்பில்லை! என்பது போல குரலைப் படிப்பவருக்கு எந்நாளும் குறைவு இல்லை! மதிப்புண்டு!

அ. ஷேக் முஹம்மது,
வேடசந்தூர்.

அட்டைப்படத்தில் பங்களா தேஷ் பள்ளிவாசல் தோற்றம் மிக நேர்த்தியாக இருக்கின்றது. இதை வைத்து உள் பக்கங்களிலுள்ள கட்டுரைகள் இதை விட மிகவும் நேர்த்தியாகவும் தொழுகையாளிகளின் மனம் கவர்ந்து தொழுகையில் முழு ஈடுபாட்டுடன் இருக்க செய்யும். மவ்லானா ஜம்பை அப்துல் ஜப்பார் ஹள்ரத்தின் “தலையெழுத்தை மாற்றும் துஆ” கட்டுரை குர்ஆன் ஆயத்துகளை காட்டி எழுதியிருந்ததை படித்து மனம் லயித்தது. துஆவிலுள்ள இத்தனை மகத்துவத்தையும் அல்லாஹ் தனது திருமறையில் அருளியிருப்பதை ஒரு சேர

படிக்கும்வாய்ப்புஏற்பட்டமைக்கு மிக்க நன்றி! கட்டுரையாளர் என்றென்றும் ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழ இந்த புனித மாதத்தில் துஆ செய்கிறோம்.

"நோன்பு நோற்பது உடல் சார்ந்த இறை நம்பிக்கை" கட்டுரையில் விளக்கமாக நோன்பின் பலனை எழுதியிருப்பது படித்தறியத்தக்கது. நோன்பில் பொடுபோக்காக இருப்பவர்கள் நோன்பின் மாண்பினை விளங்கி, மீதியுள்ள நோன்பினை அவசியம்கடைபிடிக்க முயற்சிக்க அல்லாஹ் போதுமானவன்.

பா.ஹாஜிமுஹம்மது.
சேந்தமங்கலம்.

இம்மாத தலையங்கம் மிகச் சிறப்பாக இருந்தது! "என் நெஞ்சத்தைத் தொட்டவை" தொடர் அற்புதம்!

குர்ஆனின் குரலில் இடம் பெற்ற அனைத்தையும்திரும்பத் திரும்ப படிக்கமனம்ஏங்குகிறது.

தங்களின் மாத இதழ் தாமதமாக வந்து கொண்டிருக்கிறது. மாதம் பிறந்த 2 அல்லது 3 நாட்களில் வந்தால் சிறப்பாக இருக்கும். ஏற்பாடு செய்யுங்கள்.

(ஹாஜி K.S.முஹம்மது ஷரீப்)
மஹாராஜா சில்க்ஸ்
பொள்ளாச்சி.


ஈத் முபாரக்!

## தமிழக மதரஸாக்களுக்கான அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் "**சொல்லிலக்கணம்**" என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹள்ரத்** அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

## மிக பயனுள்ள நூல்!

**பக்கங்கள் : 800;** **விலை ரூ. 500/-** (தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் :** **குர்ஆனின் குரல்** மதுரை 9486729192

ஈத் முபாரக்!

# தாஜ் டிரேடர்ஸ்

## சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

ஈகை பெருநாள் வாழ்த்துகள்!

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

# LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS




Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India